Not for sale

மார்ச் - ஏப்ரல் 2008 தமிழாக்கம்

# The Herald
## of Christ's Kingdom



# பஸ்காவின் அடையாளங்கள்

பஸ்கா ஆட்டுக்குட்டி • நிலை வாசற்படியில் தெளிக்கப்பட்ட மீட்பரின் இரத்தம்

புளிப்பில்லாத அப்பமும், கசப்பான கீரையும் • தலைச்சன் சங்காரம்

பாதரட்சை, கையில் பிடித்த தடி • இரண்டாம் மாதம் அனுசரிக்கப்பட்ட பஸ்கா

அப்பமும், பாத்திரமும்

**MAR/ APR-2008**

# பஸ்கா ஆட்டுக்குடடி

**பாடம்-1**

---

**யோவான்** 1 - 36
**....இதோ, தேவ ஆட்டுக்குட்டி என்றான்.**

கிறிஸ்துவுக்குள் அழைக்கப்பட்ட அன்பான சகோதர சகோதரிகளே, நாம் இப்பொழுது ஒரு சாட்சியை நம் கண்முன் கற்பனை செய்து பார்க்கலாம். நாம் வாழும் பூமியும் , அண்ட சராசரங்களும் படைக்கும் முன் , நம்முடைய பிதாவாகிய தேவனும் , இயேசுவும் படைப்பின திட்டங்களை வகுக்கையில் இயேசு தந்தையிடம்,

யாராவது நம்மையும் , நம்முடைய நோக்கத்தையும் முழுமையாக அறிந்து கொள்ளாமல் நம்மை எதிர்த்தால் நாம் என்ன செய்வோம் ?
என்று கேள்வியை கேட்டிருந்தால்...........

இப்படிப்பட்டவர்களுக்கு பாடம் கற்று கொடுக்கப்படுவதற்கு, தனிமனித அனுபவம் , பார்த்து கற்று கொள்ளுவது, மற்றவர்களை பிரதிபலிப்பது போன்ற அநேக வழி முறைகளை அவர்கள் யோசித்திருக்கலாம். எந்த விஷயத்தையும் கற்று கொள்ளுவதற்கு கால அவகாச தேவைப்படும் என்பதற்கு சந்தேகமே இல்லை. கடைசியாக பாவமும் , மரணமும் எல்லா அனுபவங்களை கற்று கொடுத்துவிடும என்ற முடிவுக்கு வந்திருக்கவேண்டும்.

**கொடூரமான சிந்தை , சுயநலம் ,நேர்மை** அற்ற காரியங்கள் ஒரு ஆத்துமாவை சூழும் போது என்ன செய்ய வேண்டும் என்று கலந்து பேசியிருக்கவேண்டும் . ஒரு ஜீவனை அழிப்பதற்கோ அல்லது தன்னைத்தான் அழிப்பதற்கும் வல்லமை கொடுக்கலாமா என்றும் , அவர்களுடைய சிந்தனைகள் அவர்களையே அழித்து விடுமோ என்றும் யோசித்திருக்கலாம் , ஒரு வேளை இவர்கள் தவறான முடிவுகளை எடுத்த பின் இவர்களை மீட்டு விட முடியுமா என்றும் யோசித்திருக்கலாம். இதில் இவாகள் பலிகடாக ஆகிவிடுவார்களோ ? என்றும் யோசித்திருக்கலாம்.

இப்படியான சம்பாஷனைகள் தொடர்ந்து நடக்கும் போது குமாரன் தன்னையே பலியாக ஒப்புக்கொடுக்க முன்னவந்திருக்க வேண்டும் . இந்த ஒரு சம்பவத்தின் ஒரு சிறு பகுதியை ஏசாயா தீர்க்கதரிசியின் மூலம் எழுதப்பட்ட புஸ்தகத்தில் நாம் வாசிக்கலாம்.

**ஏசாயா** 6 - 8
**பின்பு - யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப்போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன், அதற்கு நான் -- இதோ அடியேன் இருக்கிறேன் என்னை அனுப்பும் என்றேன்.**

**1பேதுரு** 1 - 19
**குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக் குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே.**

இந்த ஒரு திட்டம் வகுக்கப்பட்ட பின்பு குமாரானாகிய இயேசுவின் பணி ஸ்தாபிக்கப்பட்டது அதில் தேவனுடைய படைப்பும், மனுக்குலம் இன்று பார்க்கும் அற்புதமான தேவனுடைய கிரியைகளையும், இயற்கையான அமைப்புகளும் , பறவைகளும், பூச்சிக்களும், தங்களுடைய குஞ்சுகளை பராமரிப்பது போன்ற காரியங்கள் நடந்தது.

இந்த சூழ்நிலையில் மிருக இனத்தில் மனிதனோடு சுயநலம அற்ற அன்போடு இருந்து கடைசியாக தன்னையே பலியாக கொடுக்கும் குணநலம் உள்ள ஒரு பிராணி இருந்தது. இப்படியாக இது பஸ்கா ஆட்டுக்குட்டியாக உருவம் பெற்றது.

## ஆதிகாலத்தில் மனிதனுடைய எல்லா அடிப்படையான தேவைகளுக்கும் ஆட்டுக்குட்டி தேவைப்பட்டது.

தேவன் காய்ந்து போகும் அத்தி இலைகளை ஆடையாக உடுத்தின **தன்னுடைய** பிள்ளைகளுக்கு தோல் உடைகளை ஆடையாக கொடுத்த அத்தருணத்திலேயே நாம் இதை உணரலாம்.

**ஆதியாகமம்** 3 - 7, 21

**....அவர்கள தாங்கள் நிர்வாணிகள என்று அறிந்து, அத்தியிலைகளைத் தைத்து, தங்களுக்கு அரைக்கச்சைகளை உண்டுபண்ணினார்கள்.தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கும் அவன் மனைவிக்கும் தோல் உடைகளை உண்டாக்கி அவர்களுக்கு உடுத்தினார்.**

சில வருடங்களுக்கு பின்பு ஆதாமுக்கும் ஏவாளுக்கும் , பிறந்த ஒரு மகன் பிராணிகளை பலிசெலுத்த தொடங்கினான். அக்காலத்தில் **தேவனுடைய பிரிவ** அவர்களுக்கு மிகவும் வேதனையை தந்தது. ஆனால் ஆபேலும் , காயீனும் இரண்டு விதமான வழிகளில் தேவனை அணுக நினைத்தார்கள். ஆனால் ஆபேலின் பலி மட்டுமே அங்கிகரிக்கப்பட்டது .

**ஆதியாகமம்** 4 - 4

**ஆபேலும் தன் மந்தையின் தலையீற்றுகளிலும் அவைகளில் கொழுமையானவைகளிலும் சிலவற்றைக் கொண்டுவந்தான் ஆபேலையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கிகரித்தார்.**

ஏதோ ஒரு வகையில் ஆட்டுக் குட்டியை தகனபலியாக கொடுப்பது அவருக்குப் பிரியமான காரியம் என்று ஆபேலுக்கும் காயீனுக்கும் தேவன் புரியவைத்தார். ஆபேல் தேவனை நெருங்கியதால் காயீன் பொறாமை கொண்டு , ஆபேலை கொலை செய்தான், அந்நாளில் இருந்து இன்று வரை முதன்மையான ஆட்டுகுட்டி தேவனுக்கு ஏற்றது என்று வலியுறுத்தப்படுகிறது. ஆனால் தன்னுடைய பலியின் மூலம் தேவனை நெறுங்க முடிய வில்லையே என்று காயீனுடைய கேடான சிந்தனை, அவனை ஒரு கொலை காரனாக மாற்றியதே தவிர , அங்கிகரிக்கப்பட்ட ஆபேலின் பலியை பற்றியும் , கொழுமையான ஆட்டின் பலியை பற்றியும் அவன் சிந்திக்கவில்லை.

எப்போது எல்லாம் கோபமும் , ஆத்திரமும் மனித ஆவியை நிறைந்திருக்கிறதே (நன்மைசெய்யாதிருந்தால் )அப்போதெல்லாம் பாவம் வாசற்படியில படுத்திருக்கிறது என்று நாம் முந்தி நினைவில் வைத்து கொள்ளவேண்டும். ஒரு சிங்கத்தை போல் பாவமானது பாவியை அழிக்க காத்து கொண்டிருக்கிறது.

**ஆதியாகமம்** 4 - 7

**....நீ நன்மைசெய்யாதிருந்தால் பாவம் வாசறபடியில் படுத்திருக்கும்..........**

ஆனால் ஒரு ஆட்டுக் குட்டியை போல் ஒரு பலியும் காத்து கொண்டிருக்கிறது. ஒருவன் தேவனிடம். தஞ்சம் புகுந்தால், அடிக்கப்பட்ட ஆடாகிய நம்முடைய இயேசுவின் இரட்சிப்பு காத்துக்கொண்டிருக்கிறது இந்த விசுவாசத்தின் மூலம் பலியாக தந்த இயேசுவின் அன்பு , தேவனுடைய ஞானத்தையும், நம்முடைய இருதயத்தையும் குணமளிக்கும் தேவனுடைய வல்லமையையும், தேவனுடைய அன்பான வெகுமதிகளையும் நம்முடைய பாவத்திற்கு அளிக்கப்படும் கைமாறாகும்.

ஆதிகாலத்தில் இந்த ஆடுகள் எப்படி எல்லாம் பயன்பட்டது என்று சற்று விவரமாக பார்க்கலாம். நம்முடைய முற்பிதாக்களாகிய **சேத், சேம்** , மற்றும் **ஆபிரகாம** உள்ப்பட மேய்ப்பர்களாக இருந்தார்கள். தங்களுடைய அன்றாட வாழ்க்கை ஆடுகளையும மந்தைகளையுமே சார்ந்து வாழ்ந்தார்கள். அவர்கள் வைத்திருந்த ஆடுகள் அவர்களுக்கு சொத்தாகவும், வருங்கால சேமிப்பாகவும் , ஜீவனுக்கு ஆகாரமாகவும் இருந்தது.

அவர்களுக்கு தேவையான பால், வெண்ணை மாம்ச உணவையும் .இந்த ஆடுகள் தந்தது. இரவு நேரங்களில் இந்த மிருகங்களின் கொழுப்பு வெளிச்சத்திற்காக எரிக்கப்பட்டது. இன்னும் அந்த கொழுப்பை சலவைக்கு பயன்படுத்தினார்கள். இந்த மிருகங்களின் தோலும், மயிரும் , உடைகளையும் , போர்வைகளும் ,கம்பளிகளையும், மேல் அங்கிகளையும் , மெல்லிய உள்ஆடைகளும் செய்ய பயன்பட்டது எலும்புகள் இசை கருவியான புல்லாங்குலலாக பயன்பட்டது.
கறித்துண்டுகளுக்காக அவைகள் எரிக்கப்பட்டது. அவைகளின் தோல்கள், அதிகமான குளிரும் , வெப்பமும் தாக்கதாத படிக்கு கூடாரங்கள் மேல் விரிக்கப்பட்டது.

**எல்லாவற்றுக்கும் மேலாக இந்த மனுகுலத்திற்கு தேவன் தந்த அற்புதமான வெகுமதியான தேவ வசனங்களை எழுதி பதிவு செய்ய அந்த தோல் பயன்படுத்தப்பட்டது.**

இயேசுவும், **தேவ ஆட்டுக்குட்டி என்றும், தேவனுடைய வார்த்தை என்றும்** அழைக்கப்பட்டார். ஆடுகளின் பலியின் மூலம் நமக்கு வேதாகமம் பாதுகாக்கப்பட்டு வந்திருப்பது எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது என்று சற்று கவனித்து பாருங்கள் . அதில் எழுதப்பட்ட எழுத்துக்களும் , அவைகளின் எலும்புமஜைகள் எழுதும் மையாகவும் அந்த மையை ஆடுகளின் கொம்புகளில் பத்திரப்படுத்தப்பட்டது. இன்னும் வேதபாரகர்கள் தங்களுடைய வேலைகளை செய்யவதற்கு அவைகளின் கொழுப்பு தீவட்டிகளை கொழுத்த பயன்ப்படுத்தப்பட்டது.
இப்படியாக மனுகுலத்திற்கு அடிப்படையான எல்லாத்தேவைகளுக்கும் ஆடுகள் பயன்படுத்தப்பட்டது.

## <u>மாமிசமும் , இரத்தமும்</u>

ஆதிகாலத்தில் மனித உணவுக்காக பயன்படுத்தபட்ட முதல் பிராணி ஆடு என்பதை ஆராய்ச்சியாளர்கள் நம்புகிறார்கள் ( மற்ற சுத்தமான மிருகங்களுடன்) ஏழு ஜோடியான ஆடுகள் நோவாவின் பேழையில் மனுக்குலத்தின் இரட்சிப்புக்கு அடையாளமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது ஜலப்பிரளயத்திற்கு பின்பு நோவா தேவனுக்கு பலி செலுத்தின மிருகங்களில இந்த ஆடுகளும் அடங்கும்

அடுத்து ஆபிரகாம் அவருடைய குமாரனை பலியாக கொடுக்க துணிந்த போது, தேவன் ஈசாக்குக்கு பதிலாக ஒரு ஆட்டுக்கடாவை கொடுத்தார்.

ஜலப்பிரளயத்திற்கு பின்பு தேவன் நோவாவுக்கு மற்ற உணவுகளோடு இந்த ஆடுகளின் மாம்சததை உணவாக கட்டடையிட்டார்.

**ஆதியாகமம்** 9 - 3, 4

**நடமாடுகிற ஜீவஜந்துக்கள் யாவும் உங்களுக்கு ஆகாரமாய் இருப்பதாக , பசும்பூண்டுகளை உங்களுக்குத் தந்தது போல, அவைகள் எல்லாவற்றையும் உங்களுக்குத் தந்தேன் மாம்சத்தை அதின் உயிராகிய இரத்தத்தோடே புசிக்கவேண்டாம்.**

அங்கு ஒரு கட்டளை மிகத்தெளிவாக கொடுக்கப்பட்டது. " **எந்த மாம்சத்தையும் அதனுடைய இரத்தத்துடன் புசிக்கக்கூடாது**" இந்த கட்டளையிலும் இரத்தத்தினுடைய முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இரட்சிப்பின் திட்டத்தின் எல்லா கோணங்களுக்கும் இரத்தம்சிந்துதல் ஒரு முக்கியமான பகுதியானது.

ஆகவே இரத்தம் புசிக்கலாகாது ஆனால் அதற்கு அதிகமான கனம் கொடுக்கப்பட்டது.

**லேவியராகமம்** 17 - 11

**மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது, நான் அதை உங்களுக்குப் பலிபீடத்தின்மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்படிக்குக் கட்டளையிட்டேன் ஆத்துமாவிற்காகப் பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே.**

முக்கியமான சடங்குகளை அனுசரிக்கும் பொழுது இந்த இரத்தத்தை குறித்த காரியங்கள் பயபக்தியோடு நிறைவேற்றப்பட்டது, அவ்வப்போது அந்த இரத்தமானது ஆசாரியர்கள் மேலும் மக்கள் மேலும் தெளிக்கப்பட்டது. கொம்புகளில் பூசப்பட்டது, மீதியிருப்பதை பலீபீடத்தின் அடியில் ஊற்றப்பட்டது.

**லேலியராகமம்** 4 - 18

**ஆசரிப்புக் கூடாரத்தில் கர்த்தருடைய சந்நிதியில் இருக்கும் பலிபீடத்தின் கொம்புகளின்மேல் அந்த இரத்தத்தில் கொஞ்சம் பூசி, மற்றஇரத்தமெல்லாம் ஆசரிப்புக் கூடாரவாசலில் இருக்கிற தகனபலிபீடத்தின் அடியிலே ஊற்றி விட்டு...**

வருடத்திற்கு ஒரு முறை இரத்தம் மகா பரிசுத்த ஸ்தலத்தில் உள்ள கிருபாசன பெட்டியின் மேல் தெளிக்கப்பட்டது.

**லேவியராகமம்** 16 - 14

**இஸ்ரயேல் புத்திரருடைய தீட்டுகளினிமித்தமும், அவர்களுடைய சகல பாவங்களினாலும் உண்டான அவர்களுடைய மீறுதல்களினிமித்தமும், பரிசுத்த ஸ்தலத்திற்காகப் பிராயச்சித்தஞ்செய்து, அவர்களிடத்தில் அவர்களுடைய தீட்டுகளுக்கள்ளே நிற்கிற ஆசரிப்புக் கூடாரத்திறகாகவும் அப்படியே செய்யக்கடவன்.**

இரத்தத்தால் சாயம் ஏற்றப்பட்ட நூல்களால் , வாசல் திரைகள் , பிரதான ஆசாரியனுடைய மார்பதக்கமும் செய்யப்பட்டது. இஸ்ரயேல் மக்கள் மேய்ப்பர்களாக இருந்ததினால் எகிப்தியர்கள் அவர்களை அருவருத்தார்கள்.

**ஆதியாகமம்** 46 - 34

**நீங்கள், கோசேன் நாட்டிலே குடியிருக்கும்படி , அவனை நோக்கி , எங்கள் பிதாக்களைப்போல, உமது அடியாராகிய நாங்களும் எங்கள் சிறுவயதுமுதல் இது வரைக்கும் மேய்ப்பர்களாயிருக்கிறோம். என்று சொல்லுங்கள் , மேய்ப்பர்கள் எல்லாரும் எகிப்தியருக்கு அருவருப்பாயிருக்கிறார்கள் என்றார்.**

கிறிஸ்துவ யுகத்தில் இது ஒரு அருமையான அடையாளமாக காட்டப்படுகிறது. **உண்மை கிறிஸ்துவர்கள** . அமைதியான இந்த ஆட்டுகுட்டியை பின்பற்ற வேண்டும். ஆனால் இவர்களை எகிப்தியராகிய இந்த உலக மக்கள் அருவருக்கிறாகள்.

ஆனால் நம்ப முடியாத அளவுக்கு **உண்மை கிறிஸ்துவ செய்திக்கு** எதிர்ப்புகள் அதிகரித்தது. இந்த சாந்தமான ஆட்டுக்குட்டியாகிய இயேசுவின் நிமித்தமாக இதை செய்யாமலும் யுத்தகளமான இரத்தத்தினாலும் , இராணுவ வல்லமையினாலும் ஐரோப்பாவை சிறை பிடித்த போலி ஆட்டுக்குட்டியின் அமைப்புள்ள சபைகளால் இப்படி ஆயிற்று.

# விசேஷித்த பஸ்கா ஆடு

பல தலைமுறைகளாக தேவன் எகிப்தில் உள்ள அந்த விசுவாச குடும்பத்தாருக்காக கிரியை செய்து வந்தார். அந்த அடிமைத்தனத்தில் இருந்தபோதும் தங்களுடைய உணவுக்கும் , தொழுகைக்கும் இந்த ஆடுகள் முக்கியமாக தேவைப்பட்டது. பிதாவாகிய தேவன் அவருடைய ஜனங்களை தங்களுடைய தேசத்திற்கு அனுப்ப ஆயத்தம் செய்த போது இநதஆட்டு குட்டியின் உண்மையான முக்கியத்துவத்தை அங்கு வெளிப்படுத்தினார்.

**யாத்திராகமம்** 12 - 3 - 6

**........இந்த மாதம் பத்தாம் தேதியில் வீட்டுத்தலைவர்கள் , வீட்டுக்கு ஒரு ஆட்டுக்குட்டியாக , ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஆட்டுக்குட்டியைத் தெரிந்து கொள்ளக்கடவர்கள்.**
**ஒரு வீட்டில் இருக்கிறவர்கள் ஒரு ஆட்டுக்குட்டியைப் புசிக்கிறதற்குப் போதுமான பேர்களாயிராமற்போனால் , அவனும் அவன் சமீபத்திலிருக்கிற அவனுடைய அயல்வீட்டுக்காரனும், தங்களிடத்திலுள்ள ஆத்துமாக்களின் இலக்கத்திற்குத்தக்கதாக ஒரு ஆட்டுககுட்டியைத் தெரிந்துகொள்ளவேண்டும்.**
**அவனவன் புசிப்புக்குத்தக்கதாக இலக்கம் பார்த்து, ஆட்டுக்குட்டியைத் தெரிந்து கொள்ளவேண்டும்.**
**அதை இந்த மாதம் பதினாலாம் தேதிவரைக்கும் வைத்திருந்து, இஸ்ரயேல் சபையின் ஒவ்வொரு கூட்டத்தாரும சாயங்காலத்தில் அதை அடித்து. ...**

இவர்கள் மேய்ப்பர்களாக இருந்ததினால் ஒவ்வொருவருடைய வீட்டிலும் மந்தைகளும் அதில் ஆட்டுக்குட்டிகளும் இருந்திருக்க வேண்டும். எபிரேய குழந்தைகள் இந்த ஆட்டுக்குட்டிகள் வயல்களில் துள்ளி குதித்து விளையாடுவதை பார்த்திருப்பார்கள்.இந்த பிள்ளைகள் அவைகளோடு தான் வளர்ந்திருக்கவேண்டும்.

ஆனால் இவைகள் உணவுக்கும் , அவர்களுடைய மற்ற அடிப்படையான தேவைப்பட்ட பொருட்களை கொடுத்தது. நாலு நாளுக்கு முன்பு தேவன் ஒவ்வொரு குடும்ப தகப்பனிடமும் வீட்டுக்கு ஒவ்வொரு ஆடாக தேர்வு செய்து அதை கொண்டவர கட்டடையிட்டார். அதாவது அந்த வாரத்தில் அவர்கள் அந்த ஆட்டு குட்டியோடு வாழ்ந்தார்கள். அந்த ஆட்டு குட்டியை அந்த குடும்பத்தினர்கள் எப்படி கண்ணோக்கியிருக்க வேண்டும். அதை தேர்வு செய்யும் போதே அவர்கள் அதை அடித்து புசிப்பதற்காக முன் குறித்து விடுவார்கள்.

அந்த மாதம் 14 ம் தேதிக்குள் அந்த ஆட்டுக்குட்டியும் அந்த குடும்பத்தின் ஒரு நபராக மாறியிருக்கவேண்டும். ஆகவே நாம் வசனத்தை வாசிக்கும் போது ," **உங்கள்** "ஆடடுக்குட்டி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அடிக்கப்படும் அந்த நாளுக்குள் சிறுபிள்ளைகள் அதற்கு பெயர் சூட்டிக்கொண்டு, கட்டி அனைத்து விளையாடிருக்க வேண்டும், இதை கண்ட பெற்றோர்கள் மகிழ்ந்திருக்க வேண்டும். நம்முடைய வீடுகளில் இருக்கும் நாய் குட்டிகளை போல இதுவும் மிக பாசமுள்ள ஒரு செல்ல பிராணியாகும். இந்த ஆட்டு குட்டிகள் செய்யும் சிலுமிஷங்களை சற்று கற்பனை செய்து பாருங்கள். பிள்ளைகளின் படுக்கையில் வந்து தவழவதும், பிள்ளைகளோடும், அந்த வீட்டின் செல்ல பிராணிகளோடு சந்தோஷமாக விளையாடுவது, கொஞ்சுவதும் எவ்வளவு இனிமையாக இருந்திருக்க வேண்டும்.

இப்படியாக குடும்பத்தின ஒரு நபராக கருதப்பட்ட அந்த ஆட்டுக்குட்டியை அந்த வீட்டின் தகப்பன்அடிப்பதை குடும்பத்தின் மற்ற நபர்கள் எவ்வளவு வேதனையோடும் பயத்தோடும் பார்த்திருக்க வேண்டும். குழந்தைகள் எப்படி அழுதிருக்க வேண்டும்.

அதின் இரத்தத்தை வீட்டின் மேல் சட்டத்தின் நிலை சட்டத்திலும் தெளிக்கவேண்டும். ஒவ்வொரு வீட்டின் வாசற்படிகளின் நிலைகளிலும் இந்த இரத்தம் காணப்பட வேண்டும் , இல்லாவிட்டால் அவர்களுடைய தலைச்சன் பிள்ளை சங்கரிக்கப்படுவான என்ற ஒரு காரணத்திற்காக இந்த கட்டளைக்கு கட்டாயமாக கீழ்ப்படிந்தார்கள். அதாவது மிக வேதனையோடு இதை நிறைவேற்றினார்கள். இதைத்தவிர அவர்களுடைய தலைச்சன் பிள்ளைகளை காக்க வேறு வழி இல்லை. ஆகவே அவர்கள் வேதனையோடு இதை செய்தார்கள்.

நமக்காக இயேசுவை பலியாக தந்த நம்முடைய பிதாவாகிய தேவனுடைய மனநிலையை சற்று கற்பனை செய்து பாருங்கள். தேவனுடைய நீதியில் பாவிகளாகிய நம்மை காக்க தன்னுடைய ஒரே பேரான குமாரனை பலியாக கொடுப்பதைத்தவிர அவருக்கு வேறு வழி இல்லை. அவருக்கு இது எவ்வளவு வேதனைகளை தந்தாலும் , நம்மை மீட்பதற்காக இதை அவர் சகிக்க வேண்டியதாக இருந்தது. இந்த உலகத்தில் ஒவ்வொருவருக்கும் எத்தனை கவலைகள் இருந்தாலும் , பிதாவின் இந்த வேதனைகளுக்கு நாம் எதையும் ஒப்பிடமுடியாது. இந்த துன்பத்திற்கு எல்லை இல்லை. எத்தனை காலங்களாக இந்த வேதனைகளை அவர் இருதயத்தில் சுமந்திருக்க வேண்டும். அவருடைய அன்பு பரிபூரணமானது.

வீட்டிற்குள் நுழையும், எந்த மனிதர்களானாலும் ,சங்காரதூதனானாலும் , அந்த வீட்டு வாசற்படியின் நிலைகளில் இரத்தம் பூசப்பட்டதா என்று கவனிப்பார்கள். ஆகவே வீட்டின் தலைவர்கள் தங்களுடைய தலைச்சன்கள் காக்கப்படுவார்கள் என்ற நம்பிகையோடு இந்த கட்டளைக்கு கீழ்ப்படிந்தார்கள். இல்லாவிட்டால் இதை செய்திருக்கமாட்டார்கள்.

இந்த சட்டத்திற்கு கீழ்ப்படிந்ததினால் ஒவ்வொருவருடைய நிலைவாசல் சட்டங்களும் இரத்தத்தால் தெளிக்கப்பட்டது, அது பார்ப்பதற்கு அகோரமாகவும் இருந்தது. இருந்தபோதிலும் ஒருவரும் அந்த இரத்தத்தை தவிர்த்து வீட்டுக்குள் பிரவேசிக்க இயலாது. ஆனால் அந்த இரத்தத்தை ஒருவன் முதுகு பக்கமாக திருப்பிவிட்டால் ,அவன் அந்த வீட்டை விட்டு வெளியேறுகிறான் என்று பொருள்படும்.

அதாவது ஒருவர் மீட்பின் இரத்தத்தை தனக்கு பின்னாக விட்டு விட்டால் இயேசுவோடும் அவருடைய விசுவாசவீட்டாரோடும் எந்த பங்குமில்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அவர்கள் அந்நாள் வரைக்கும் பசுமையான நினைவோடு அந்த பஸ்காவை அனுசரித்து வந்தாலும், அது அவர்களுக்கு முதல் பண்டிகையாக இருந்தாலும், காலங்கள் செல்லச்செல்ல இந்த பிரமாணத்தின் நோக்கம் மறைந்தது.

இதைத்தொடர்ந்து இந்த காட்சிக்கு இயேசுதாமே செயலாற்றி புதிய பொலிவுகொடுக்க நேரடியாக வந்தார். கடுமையான அதிர்ச்சி தரக்கூடிய தேவனுடைய நீதிக்கு கீழ்ப்படியும் இநத செயல்கள் ,பல நூற்றாண்டுகளுக்கு பின் பாரம்பரியமாக கைக்கொள்ளப்பட்டது. மக்கள் இதை மிக எளிதாகவும் ,சடங்காகவும் அனுசரிக்கப்பட்டு. சிந்தையிலும் , செயலிலும் இந்த பிரமாணம் சற்று தளர்த்தப்பட்டது முதல் நூற்றாண்டில் இது ஒரு இனிமையான சடங்காக அனுசரித்தார்கள். அப்போது சங்காரதூதன் இல்லை, ஆகவே மரணத்தின் பயம் அகன்றது. அவர்களுடைய நிலை வாசல்களில் இரத்தம் தெளித்து அழுக்குப்படுத்த அவசியம் இல்லாமல் போனது. இந்த இரத்தம் தெளிக்கும் காரியங்கள் அனைத்தும் வெள்ளை அங்கிகளை தரித்த ஆசாரியர்கள் ஆலயத்தில் பொருப்பெடுத்துக்கொண்டார்கள். சரியான நேரத்தில் ஆட்டுக்குட்டியை

அடிப்பதும் காரியங்களை செய்வதும் ஆசாரியர்களால் கையாளப்பட்டுது. மற்ற அனைவரும் அந்த ஆட்டுக்குட்டிக்கா பணத்தை கொடுத்து விட்டு தங்களுடைய வீடுகளை சுத்திகரித்து கொண்டு அந்த பண்டிகையை மகிழ்ச்சியோடும், நல்ல விருந்தோடும், இன்னும் சில கூடுதலான சடங்கான ஜெபங்களோடும் அனுசரித்தார்கள்.

இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை நம் மத்தியிலும் நிலவுகிறது. இயேசு தன்னுடைய சீஷர்களோடு புசித்த பஸ்காவின் முக்கியத்துவங்களை அறிந்த நாம் ஒரு சடங்கை போலவும் அதை ஒரு கடைமையாகவும் நினைவு கூர்ந்து வருகிறோம். இன்னும் சிலர் நம் மத்தியில் வீடுகளை சுத்தம் செய்து புத்தாடைகளை அணிந்து இதை ஒரு பண்டிகை என்று அனுசரித்து வருகிறார்கள். இவைகளை செய்வது முக்கியமல்ல, நாம் நமது இருதயத்தை சுத்திகரித்து விட்டோமா ? நீதியின் வஸ்திரங்களை புத்தாடைகளாக அணிந்திருக்கிறோமா ? வெளியரங்கத்தை அல்ல தேவன் உள்ளத்தைப்பார்ப்பவராக இருக்கிறார். சிலர் இந்த நாளை அனுசரிக்க உபவாசம் இருப்பதும் உண்டு , சிலர் அன்று இரவு விருந்துண்டு மகிழ்வதும் உண்டு , நிச்சயமாக நாம் உபவாசமாகவும் இருக்க வேண்டும். விருந்தும் உண்ண வேண்டும் . எப்படி இந்த இரண்டையும் ஒரே நேரத்தில் செய்வது என்று நினைக்கிறீர்களா ? ஏசாயா 58 ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்ட உபவாசத்தை நாம் வாழ்நாள் முழுவதும் அனுசரித்து இருந்தால் , வெளி 3 - 20 ம் வசனத்தில் குறிப்பிட்டபடி விருந்தை பரிமார நம்முடைய ஆண்டவராம் இயேசு ஆயத்தமாக இருக்கிறார்.

ஆகவே நாம் சொல்லர்த்தமாகவோ, வெளிவேஷத்திற்காகவோ, இந்த நினைவு கூருதலின் நாளை அனுசரிக்காமல் தேவனுடைய சித்தத்தின் படி நாம் அனுசரிக்க கடமை பட்டிருக்கிறோம். நாம் மாம்சத்தில் இருந்தாலும் இது புது சிருஷ்டி அனுசரிக்கும் இராபோஜனமாக இருக்கிறது.

## இயேசு, பஸ்காவின் முக்கிய நபா

இயேசுவுக்கு அடிப்படையில் இது தனக்குரிய உண்மையான சம்பவம் அல்லது நிஜமாக நடைபெறும் ஒரு சம்பவமாக இருந்தது. ஆகவே அவர் மரிக்கும் முன் அந்த இராத்திரியில் இயேசு அவருடைய சீஷர்களை இராபோஜனத்தை ஆயத்தப்படுத்த கட்டளை கொடுத்தார். அவர் முதல் முதலில் அடையாளங்களின் அனுபவங்களோடும் அதின் விளக்கங்களோடும் இதைச்செய்தார். ஆதிகாலத்தில் இன்னவிதமாக பலி செலுத்த வேண்டும் என்று பிதாவும்குமாரனும் சம்பாஷித்தபடி அனைத்தையும் இயேசு நிறைவேற்றினார்.

அதற்கு பின்பு நடந்த ஒவ்வொரு சம்பவத்தை இயேசு கவனித்து கொண்டிருந்தார். ஆபிரகாம் தன்னுடைய குமாரனை பலியாக ஒப்புக்கொடுத்ததும் தேவன் அதை அங்கிகரித்தார் என்று அடையாளப்படுத்துவதற்கு அங்கு ஒரு ஆட்டுக்கடா பலியாக செலுத்தப்பட்டதையும் இயேசு பார்த்தார். **யோவான் 8 - 58**

**அதற்கு இயேசு , ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன் என்று மெய்யாகவே மெய்யாகவே உஙகளுக்குச் சொல்லுகிறேன் என்றார்.**

அறியாத தேசத்தில் யூதர்கள் ஆட்டுக்குட்டி வெட்டப்பட்டதையும், கீழ்ப்படிதல் உள்ள விசுவாசமான யூதர்கள் புசித்ததையும் அவர் தன்னுடைய பலியை உறுதிப்படுத்தினார். அவர் தேவனுடைய எக்காளமாக இருந்து இஸ்ரயேல் மக்களை சிவந்த சமுத்திரத்தின் வழியாக விடுவித்த போது பார்வோனையும் அவன் சேனைகளையும் அழித்தார். இப்படியாக சாத்தானையும் அவன் சேனைகளையும் (பாவத்தையும் , மரணத்தையும் ) தன்னுடைய பலியின் வழியாக தான் மேற்கொள்ள வேண்டும் என்றும் உணர்நதிருந்தார்.

அவர் பலியாகும் நாளுக்கு முன் அவர்கள் அனைவரும் இராபோஜனம் புசித்த அந்த ராத்திரியில் அந்த மாசற்ற ஆட்டுக்குட்டியின் குணத்தை முழுமையாக பிரதிபலித்தார். அவரை காட்டிக்கொடுக்கப் போகிற யூதாஸை அவர் அறிந்திருந்தும்அவனைத்தள்ளிவிட வில்லை. அவன் தன்னுடைய காரியங்களை செய்வதற்கு ஏதுவாக இயேசு வழி அமைத்து கொடுத்தார்.

யோவான் 13 ம் அதிகாரத்தில் , அவர் தன்னுடைய சீஷர்களோடு பேசுகையில் அர்ப்பணிப்பைபற்றியும் உண்மையான தலைவர்களின் குணநலன்களையும் நேரடியாக போதித்தார் இதில் மாசற்ற அந்த ஆட்டின் குணங்கள் இயேசுவுக்குள் மறைந்திருக்கிறது. அதற்கு பின் அவர் அநேகமான ஊக்குவிக்கும் வாக்குறுதிகளையும், சீஷர்களுக்காக ஏறெடுத்த ஜெபங்களையும் யோவான் 14 ம் அதிகாரத்தில் இருந்து 17 ம் அதிகாரம் வரைக்கும் தொடர்ந்து வாசிக்கலாம்.

நம்முடைய ஆண்டவராம் இயேசு பலி செலுத்தும் ஆட்டுகுட்டிக்கு ஒப்பிட்டிருந்தாலும் , அவர் சிங்கமாகவும் இருந்தார். அவர் விரும்பினால் தன்னுடைய வல்லமையால் இறையை செயல் இழக்கசெய்து அவரால் கைபற்ற முடியும் ஆனால் அதை அவர் செய்யவில்லை, ஏன் என்றால் அது பிதாவின் சித்தம் இல்லை. தன்னையே பலியாக ஒப்புகொடுக்க ஆட்டு குட்டியைப்போல் வந்தார். இதில் இயேசு தன்னை ஒப்பு கொடுத்ததை காட்டிலும் பிதாவாகிய தேவன் மேல் நம்பிக்கை வைத்து அவருக்கு கீழ்படிந்ததே இங்கு இயேசுவின் முக்கியமான தனிப்பட்ட ஒரு அம்சமாகும்.

**எபிரெயர் 5-5-10**

**அந்தப்படியே கிறிஸ்துவும் பிரதான ஆசாரியராகிறதற்குத் தம்மைத்தாமே உயர்த்தினார் நீர் என்னுடைய குமாரன் இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் என்று அவரோடே சொன்னவரே அவரை உயர்த்தினார்............ அவர் மாம்சத்திலிருந்த நாட்களில் தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி , பலத்த சத்தத்தோடும் கணணீரோடும் விண்ணப்பம் பண்ணி, வேண்டுதல்செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு, அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு....**

ஈசாக்கு தன்னுடைய தந்தையிடம் தன்னை ஒப்புவிததது போல குமாரனாகிய கிறிஸ்துவும் பிதாவாகிய தேவனிடம் தன்னுடைய ஜீவனை ஒப்பு கொடுத்தார். தேவன் அவர் கண்ணீரையும் கூக்குரலையும் கேட்டு அவருக்கு ஆறுதல் அளித்தார். இயேசுவின் கடைசி மணி நேரங்களின் துன்பங்களையும், வேதனைகளையும் சகிக்க அவரைஆயத்தப்படுத்தினார்.

## <u>கெதசமனே பாடுகளும் கல்வாரியும்</u>

வரலாற்றில் **கெத்சமனே , கல்வாரி** ஆகிய இந்த இரண்டு ஸ்தலங்களும் முக்கியமான இடத்தை பிடித்திருக்கிறது. இவைகள் இரண்டு இடங்களும் இணைந்து மாபெரும் தேவஆட்டுக் குட்டியின் மரணத்தை மிக அழகாக அடையாளப்படுத்துகிறது.

**கெத்சமனே** என்பதற்கு " **எண்ணைசெக்கு**" அல்லது **எண்ணைபிழிதல** என்று பொருள்படும். இந்த ஸ்தலத்தில் இயேசுவின் பலியின் ஒரு கோணத்தை அல்லது ஒரு பகுதியை நாம் இங்கு காணலாம். அவர் மன அழுத்தப்பட்டதினால் அவர் பிழியப்பட்டார், கிட்டத்தட்ட அவர் ஜீவனே அவரை விடடு போனது போல் இருந்தது. செக்கில் எண்ணை பிழியும் போது எண்ணை எப்படி கொப்பளித்துக்கொண்டு வெளியே வருமோ, அதேபோல், இயேசு எவ்வளவு மன அழுத்தத்தால் பிழியப்பட்டாலும் தேவனுடைய ஆவியாகிய அவருடைய சிந்தை மட்டுமே பிரதிபலித்தது என்று நாம் அறியவேண்டும்.

இயந்திரங்களில் ஒரு பகுதியோடு மற்றொரு பகுதி உரையாமல் தடுக்க எண்ணை ஊற்றுவது வழக்கம் என்று நாம் அறிவோம். அது போல் இயேசுவின் அளவு கடந்த இந்த பாடுகளிலும் இந்த பரிசுத்த ஆவி அவரை மிக சுலபமாக தேவனுடைய சித்தத்தையும் பணியையும நிறைவேற்ற உதவி செய்து வழிவகுத்தது. எந்த சூழ்நிலையிலும் அவரை உலகப்பிரகாரமாக சிந்திக்க வாய்ப்பு அளிக்கவில்லை.

அந்த இருட்டில் தனிமையில் அமர்ந்திருந்தாலும், அவருடைய பிதாவோடு இருந்ததை அவர் உணர்ந்தார். இவைகளை இயேசு நமக்கு பாடங்களாக விட்டுச்சென்றிருக்கிறார். நம்முடைய தனிமையிலும், மன வேதனைகளிலும நாம் இயேசுவை மட்டுமே பிரதிபலிக்க வேண்டும் என்றும், எல்லா சூழ்நிலைகளிலும் தேவன் நமமோடு இருக்கிறார் என்பதையும் நாம் உணர வேண்டும். ஆகவே எவ்வளவு வேதனைகள் வந்தாலும், சோதனைகள் வந்தாலும் , நமக்குள் இருக்கும் தேவ ஆவி மட்டுமே பிரதிபலிக்க வேண்டுமே தவிர உலகத்தின் சிந்தை , பயம் நம்மை அனுகலாகாது. எனவே தேவஆவியில் எப்பொழுதும் நிறைந்திருப்போம்.

## கல்வாரி

அடுத்து கல்வாரியில் , இயேசு உடல் ரீதியாக பட்டபாடுகளை அடையாளப்படுத்துகிறது. அன்று அவர் பொது ஜனங்கள் முன் அனுபவித்த அவமானங்கள், நிர்வாணம், கேலி, மத குருக்களினால் நிராகரிக்கப்படுதல், நன்மையை பெற்ற உலகம் அவரை எதிர்த்தல் , அவருக்கு விசுவாசமாகவும் நம்பிக்கையாகவும் இருக்க வேண்டியவர்கள் அவருக்கு துரோகம் செய்தல், அனைத்துமே இதில் அடங்கும். இதை முன் அறிந்த இயேசுவின் மன நிலைமையை சற்று நினைத்து பாருங்கள்.

இந்த அனைத்தையும் அவர் இருதயத்தில் வைத்துகொண்டு தான் , அவர் மரிக்கும் ஆறு நாள்களுக்கு முன் இருந்து அவருடைய சீஷர்களை தேற்றியும் தயார் படுத்தியும்வந்தார். சீஷர்களுக்கோ அது புரியவில்லை, ஏதோ உவமைகளில் பேசிகிறார் என்று நினைத்தார்கள், ஏனென்றால் இதுவே அவருக்கு வழக்கம் என்று எண்ணினார்கள். எவ்வளவு வேதனைக்குரிய காரியம் என்று யோசிதது பாருங்கள்.

அவரை பின்பற்றக்கூடிய தேவ பிள்ளைகள் இந்த பாதையில் செல்ல நிச்சயமாக ஆயத்தப்பட வேண்டும்.இந்த ஒரு பணிக்காக இயேசு தன்னுடைய வாழ்நாள் முழுவதும் ஆயத்தம் செய்தார். ஆனால் அந்த இருள் சூழ்ந்த நாளின் முடிவில் இயேசு தன்னை ஆயத்தப்படாத ஒரு அனுபவத்தை சகிக்கவேண்டியதாக இருந்தது. அவர் சிலுவையில் தொங்கும் போது, பிதா அவரை கைவிட்டதை, அவரால் தாங்கமுடியவில்லை. அங்கு அவர் முற்றிலுமாக எல்லாராலும் கைவிடப்பட்ட நிலையிலும் தனித்து தொங்கினார். தனக்கு மிகுதியாய் தேவனுடைய அரவணைப்பு தேவைப்பட்ட அந்த நேரத்தில் அதை இழந்து தனித்து விடப்பட்டார். தவித்தார் அலறினார், தன் தந்தையிடம் அவர் இருதயம் நிரம்பி வெடித்து அந்த கேள்வியையும் கேட்டார்....

**மத்தேயு** 27 - 46

**............என் தேவனே, என் தேவனே , ஏன் என்னைக் கைவிட்டீர் என்றார்............**

இதுவே அவர் பாடுகளின் உச்சக்கட்டமாக இருந்தது. இந்த வேதனைக்கு எந்த விதமான ஈடுஇணை இருக்க வில்லை.இதை தாங்க முடியாததினால் தன்னுடைய இருதயம் வெடித்தது.

**சங்கீதம்** 22 - 14

**...........தண்ணீரைப்போல ஊற்றுண்டேன், என் எலும்புகளெல்லாம் கட்டுவிட்டது என் இருதயம் மெழுகுபோலாகி, என் குடல்களின் நடுவே உருகிற்று....**

ஈசாக்கை பலி செலுத்த ஆபிரகாம் கத்தியை உரையிலிருந்து எடுக்கும் போது அதை ஒரு தூதன் தடுக்க அதற்காக அங்கு ஒரு ஆட்டுகடா தேவனால் கொடுக்கப்பட்டது ஆனால் இங்கு இயேசுவின் விலாவில் ஈட்டி பாய்ந்து அவருடைய இருதயத்தை பிளப்பதை யாரும் தடுக்க வில்லை. ஏன் என்றால் தேவனுடைய நீதியில் பாவமான மனுகுலத்தை மீட்க இவருடைய இந்த பலியைத் தவிரவேறு வழி இல்லை.

அன்பும் ஞானமும் மிகுந்த தகப்பன் இவை அனைத்தையும் மனுகுலத்தின் பாவத்திற்காக சகலத்தையும் அனுமதித்ததார். பாவம் இல்லாதவர் மாசற்றவர், மரணத்திற்கு ஏதுவல்லாதவர், நமக்காக பலியிடப்பட்டிருக்கிறார்,

**அவரை நாம் நேசிப்போமா ?**

**அவரிடம் உண்மையாக இருபபோமா ?**

**நம்முடைய பாவத்தை விட்டு விடுவோமா ?**

**அவரை பின் பற்றுவோமா ?**

**அவருடைய பாடுகளில் பங்கடைய வாய்ப்புகளை எதிர்ப்பார்ப்போமா ?**

**நாம் எடுக்கும் இந்த இராபோஜனத்தை பங்கு பெற நாம் இப்படியாக ஆயத்தப்படுவோமா ?**

## நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து பலியிடப்பட்டாா.

இப்படிப்பட்ட இயேசுவின் மேன்மையான பலி இன்று ஒரு தட்டில் வைக்கும் காய்ந்து போன கோழி எலும்புக்கு ஒப்பிடலாம். இதன் மகத்துவமும் முக்கியத்துவமும் குறைந்து விட்டது. சில வார்த்தைகள் , சில பாடல்கள், ஜெபங்கள், பிரசங்கம், பின்பு சடங்குகள்................. அனைத்தும் முடிவு அடைகிறது.

ஆனால் கிறிஸ்துவின் சரீர அங்கத்தினர்கள் மத்தியில் கிறிஸ்துவின் பாடுகள் ஆழமாக நினைவுப்படுத்தப்பட வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல் கூறும் போது.

**1கொரிந்தியர் 5 - 7**

**பஸகா ஆடு நமக்காக பலியிடப்பட்டாரே**

என்றார். அதாவது விசேஷமாக நம்முடைய பாவத்திற்காக அவர் தன்னை பலியாக ஒப்பு கொடுத்தார். ஆனால் இவை எல்லாம் நாம் மனதில் ஏற்று கொள்வதில்லை, அவர் நம்முடைய பாவங்களை போக்கவேண்டும், உலகத்திற்கு சமாதானம் கொடுக்க வேண்டும், கிறிஸ்துவுக்குள் மகிழ வேண்டும். இது மட்டுமே நம் சிந்தைக்கு வருவது.

நிச்சயமாக இவை அனைத்தையும் அவர் செய்ய இருக்கிறார். அவருடைய இந்த **பலியின் மரணம்** உலகத்தின் பாவத்தை போக்குகிற நித்திய சமாதானத்தையும் தந்தது நம்முடைய நீதியுள்ள ராஜா ஆட்சி செய்யும் போது கண்ணீர் யாவும் துடைக்கப்பட்டு, நோய்கள் குணமாக்கப்பட்டு பிரச்சனைகள் முடிவு அடையும். கடைசியாக **இயேசுவின் பலி சகல காரியத்தையும் நிறைவேற்றும்.**

உமது வசனமே சத்தியம் உமது வசனமே சத்தியம் உமது வசனமே சத்தியம்

ஆனால் இப்பொழுது நாம் செய்யவேண்டியது என்ன ? இந்த யுகத்தில் யாருக்கு இரட்சிப்பு ? இதை பற்றி சிந்திப்போம் . பஸ்காவை முழுமையாக புசிக்கும் ஒவ்வொரு தலைச்சன் பிள்ளைகளும் இந்த யுகத்திலேயே விடுதலை பெறுவார்கள். தேவனுடைய சொந்த பிள்ளைகளாக உரிமை பெற்று கிறிஸ்துவின் சுயாதீனத்திலும் மகிமையிலும் பங்கு பெறுவார்கள், இராஜாக்களாகவும், ஆசாரியர்களாகவும் நியமிக்கப்படுவார்கள்.

இந்த யுகத்தில் இந்த விடுதலைக்குள் வர மறுப்பவர்கள் நிச்சயமாக சங்காரத்தூதனால் அழிக்கப்படுவார்கள். அதுவே அவர்களுடைய "இரண்டாம் மரணமாகும்".

கலாத்தியர் 1 - 4 ம் வசனத்தில் , இயேசு நம்முடைய பாவத்திற்காக மரித்தார் என்று குறிப்பிடுகிறார். ஆனால் மார்டின் லூத்தர் தன்னுடைய புத்தகங்களில் எழுதும் போது அநேக காரியங்களை நம்மிடையே கேள்விகளாக கேட்கிறார்

நான் என் பாவங்களைம்மேற்கொண்டேனா ?, கிறிஸ்துவின் அழைப்பை ஏற்றுக் கொண்டதால் நாம் பாவங்களை எதிர்த்து நின்றிருக்கிறோமா ? நம்முடைய ஞானஸ்நானத்தின் மூலம், நம்முடைய ஜீவனை தேவனுடைய பணியை செய்ய ஒப்பு கொடுத்திருக்கிறோம் என்ற நினைவுகளோடு அனுதினமும் நம்முடைய வாழ்க்கையில் நாம் செய்யும் பாவங்களை விட்டு விடுகிறோமா ?

என்றும் நாம் நம்மையே கேட்கும் படி எழுதியிருக்கிறார்.

நம்முடைய சுற்றுபுறத்தை பார்க்கும் போது ஒவ்வொருவரும் சில காரியங்களில் குறைவுபட்டிருப்பதை பார்க்கலாம், அங்கும் இங்கும் பார்த்து கொண்டிருப்பதால் நமக்குள் வளரும் பொறாமை, கோபம், தொலைகாட்சியை பார்ப்பது இன்னும் அநேக சிற்றின்பங்களை நம்முடைய அன்றாட வாழ்க்கையில் பினைக்கப்பட்டிருப்பதை உணரலாம். ஆக இதுவே நாம் அனைவரின் பதிலாக இருக்கிறது. இதற்கு மார்டின் லூத்தர் சொன்ன பதில் சற்று வித்தியாசமாக இருக்கிறது.

நம்முடைய பாவங்களை போக்க தேவன் அவருடைய சிருஷ்டிகளில் விலையேறப்பெற்ற இரத்தத்தை ஈடாக கொடுத்திருக்கும் போது , நம்முடைய பாவத்தை விட்டுவிடுவோமா என்ற கேள்விக்கே இடம் இல்லை. ஏன் என்றால் நம்முடைய பாவங்களுக்கு அளவே இல்லை. அது மிகப்பெரிதான ஒரு சுமையாக இருக்கிறது. ஆகவே நம்முடைய பாவத்தை அகற்ற இயேசுவின இரத்தத்தைத்தவிர நமக்கு வேறு வழிஇல்லை என்று நாம் நன்கு உணர வேண்டும். இப்படிப்பட்ட மனநிலை இருந்தால் மட்டுமே நாம் தொடர்ந்து பஸ்காவை புசிக்க தகுதி பெறலாம்.

முதலாம் நூற்றாண்டில் இஸ்ரயேல் மக்கள் இந்த நினைவு கூரும் நாளை , ஒரு சடங்காக மாற்றியது போல் இன்றும் நம் மத்தியில் இது வேஷமாகவும் , கடமையாகவும் அனுசரிக்கப்பட்டு வருகிறது. இதை அனுசரிக்க **மன ஒற்றுமை மிக அவசியமாக இருக்கிறது.** தீமை செய்வதில் அல்ல மாறாக கிறிஸ்துவின் ஈடுபலியை சிந்தித்து, நம்முடைய பாவங்களை விட்டு விட நம் அனைவருக்கும் ஒரே சிந்தை வேண்டும். அப்பொழுது **நம்முடைய ஐக்கியம் பலப்பட்டு , ஒருமனப்பாட்டில் தேருவோம்.**

உலக மக்களையும் , அவர்களுடைய செயல்களை பற்றி நாம் ஒருக்காலமும் கவலைப்படவோ , அல்லது நம்முடன் ஒப்பிட்டு பார்ப்பதற்கு அவசியமில்லை. என் என்றால் அவர்கள் அனைவரும் காரிருளில் வாசம் செயதவர்களாகவும், இப்பிரபஞ்சத்தின் தேவனால் குருடாக்கப்பட்டவர்களுமாக இருக்கிறார்கள்.

உண்மையான கிறிஸ்தவர்கள் தேவனுடைய வெளிச்சத்திலும் , அதே சமயம் இந்த உலகம் காரிருளில் வாசம் செய்கிறது. அவருடைய பிள்ளைகளுக்கு தேவனுடைய கிருபையைத் தவிர வேறு எந்த வழியும் இல்லை. **கிறிஸ்துவின் இரட்சிப்பில் விசுவாசம் வைத்து பரிசுத்த ஆவியால் ஜெனிப்பிக்கப்பட்ட பின்பு ஒவ்வொருவரும் ஒரே வீட்டாராகவும், அந்த வீட்டில் அடிக்கப்படும் ஆட்டுக்குட்டியின் மாம்சத்தை புசிப்பவர்களாக இருக்கவேண்டும்.**

நாம் ஆனுசரிக்கும் இந்த புதிய பஸ்காவில் நாம் புசிக்கும் ஆட்டுக் குட்டியை அனைவரும் ஒரேமனதோடு பங்கு பெற ஆயத்தமாக இருக்கிறோமா ? கிறிஸ்துவின் பலி நம் ஒவ்வொருவருக்கும் உரியது என்று சொல்லாலும் செயலாலும் உணருவோமா ?

# நிலை வாசற்படியில் தெளிக்கப்பட்ட மீட்பரின் இரத்தம்

**யாத்திராகமம்** 12 - 13

**நீங்கள் இருக்கும் வீடுகளில் அந்த இரத்தம் உஙகளுக்காக அடையாளமாய் இருக்கும் அந்த இரத்தத்தை நான் கண்டு, உங்களைக் கடந்துபோவேன் , நான் எகிப்து தேசத்தை அழிக்கும்போது, அழிக்கும் வாதை உங்களுக்குள்ளே வராதிருக்கும்.**

எகிப்தியர் இஸ்ரயேல் மக்கள் அடிமைதனத்தில் இருந்து விடுவிக்க , கட்டாயப்படுத்தும் படி பத்து வாதைகள் நிகழ்ந்தது என்று வேதாகமத்தில் உள்ள யாத்திராகமம் புஸ்தகத்தில் குறிப்பிடுகிறது. அந்த கடைசி வாதையில் எகிப்தின் தலைச்சன் பிள்ளைகள் சங்கரிக்கப்பட்டார்கள் இந்த ஒரு பெரிதான சங்காரத்திலிருந்து மக்களை விடுவிக்க தேவன் மோசேக்கும் ஆரோனுக்கும் விவரமான வழி முறைகளை கொடுத்திருந்தார்.

முதல் மாதம் 10 ம் தேதி வீட்டுக்கு ஒரு ஆட்டு குட்டி தேர்வு செய்யப்பட்டது. 14 ம் தேதி மாலை அதை அடித்து அதன் இரத்தத்தை வீட்டு வாசல்களின் நிலை சட்டத்தில தெளிக்கவேண்டும்......

**யாத்திராகமம்** 12 - 3- 7 , 12

**நீங்கள் இஸ்ரயேல் சபையார் யாவரையும் நோக்கி - இந்த மாதம் பத்தாம் தேதியில் வீட்டுத்தலைவர்கள், வீட்டுக்கு ஒரு ஆட்டுக்கட்டியாக , ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஆட்டுக்குட்டியைத் தெரிந்து கொள்ளக்கடவர்கள். ......அந்த ராத்திரியிலே நான் எகிப்து தேசம் எங்கும் கடந்துபோய், எகிப்து தேசத்திலுள்ள மனிதர் முதல் மிருக ஜீவன்கள்மட்டும், முதற்பேறாயிருக்கிறவைகளையெல்லாம் அதம்பண்ணி, எகிப்து தேவர்களின்மேல் நீதியைச செலுத்துவேன், நானே , கர்த்தர்.**

இந்த கடைசி வாதையான நியாயத்தீர்ப்பில் எகிப்தியருடைய வீழ்ச்சியையும், அங்கு தெய்வங்கள் என்று வணங்கப்பட்டவைகளின் இயலாமையும் அங்கு பார்வோன் ஒரு தெய்வமாக கருதப்பட்டிருந்தாலும் அவன் குமாரன் மரித்து போன காரியங்களும் வெளிப்பட்டது.

**யாத்திராகமம்** 11 - 5 , 12 - 29

**அப்பொழுது சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும் பார்வோனுடைய தலைப்பிள்ளை முதல் ஏந்திரம் அரைக்கும் அடிமைப்பெண்ணுடைய தலைப்பிள்ளைவரைக்கும் , எகிப்து தேசத்திலிருக்கிற முதற்பேறனைத்தும் மிருகஜீவன்களின் தலையிற்றனைத்தும் சாகும என்று உரைக்கிறார் என்று சொன்னதுமன்றி....**

யாக்கோபும் அவர் குடும்பத்தினர்களும் எகிப்திற்கு வந்த போது யோசேப்பு ஞானமாக அவர்களை அரண்மனையில் வேலைக்கு அமர்த்தாமல் மேய்ப்பர்களின் தொழிலை தொடர்ந்து செய்வதற்கு வாய்ப்புகளை ஏற்படுததிக் கொடுத்தார். இவர்களை அருவருத்தார்கள் எகிப்தியர்கள் பிராணிகளை வணங்கி வந்ததால் இஸ்ரயேல் மக்களை அருவருத்திருக்க வேண்டும்.

ஆகவே தான் அவர்கள் இஸ்ரயேல் மக்கள் ஆடுகளை அடித்து நிலைக்கால்களில் இரத்தத்தை தடவும் போது ,எகிப்தியர் அதை செய்யவில்லை. ஆனால் இஸ்ரயேல் மக்கள் தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படிவதற்கு இந்த இரத்தத்தை பூசுதல் ஒரு அடையாளமான சாட்சியாக இருந்தது. அதற்கு பின் நடக்க வேண்டிய காரியங்களை தேவன் மோசேயிடமும் **ஆரோனிடமும் கட்டளை கொடுத்தார். (யாத்திராகமம்** 12 - 21 - 23)

# ஈசோப்பு

இந்த ஈசோப்பை பற்றி அதிகமாக வேதாகமத்தில் சொல்லப்படாமல் போனாலும், இரத்தத்தை தெளிப்பதற்கு இது பயன்படுத்தப்பட்டது. மற்றபடி இது சில குஷ்டரோகங்களையும் நோய்களையும் சுத்திகரிக்க பயன்படுத்தப்பட்டது. (லேவியராகமம்14 - 4 - 6, 49 - 52)

எகிப்திலிருந்து புறப்பட்ட இஸ்ரயேல் மக்களுக்கு அந்த அடிமைதனத்தில் இருந்து விடுதலை பெற்று சுத்திகரிக்கப்படுவதை இந்த இரத்தம் பூசுதல் அடையாளப்படுத்தலாம். அவர்களுடைய யாத்திரைக்கு பிறகு தேவன் இஸ்ரயேலில் நித்தமும் பலி செலுத்துவதை நியாயப்பிரமாணத்தில் ஒரு பகுதியாக ஸ்தாபித்தார்.

**யாத்திராகமம்** 29 - 28, 29

**அது ஏறெடுத்துப் படைக்கிற படைப்பானதனால் , இஸ்ரயேல் புத்திரர் பலியிடுகிறவைகளில் அவைகளே நித்திய கட்டளையாக ஆரோனையும் அவன் குமாரரையும் சேர்வதாக , இஸ்ரயேல் புத்திரர் கர்த்தருடைய சந்நிதானத்தில் ஏறெடுத்துப் படைக்கிற சமாதான பலிகளில் அவைகளே ஏறெடுத்துப் படைக்கும் படைக்கும் படைப்பாயிருக்க வேண்டும். ........**

இதை தொடர்ந்து யூதர்கள் பலியின் முக்கியத்துவங்களை அறிந்தார்கள். அவர்களுடைய பாவங்கள் அனுதினமும் கழுவப்படவேண்டும் என்ற உணர்வு அவர்களுக்கு வந்தது. அதற்கு பின்பு இரத்தத்தை ஏன் புசிக்கக்கூடாது என்பதற்கான காரணங்களையும் முக்கியத்துவங்களையும் அறிவித்தார்.

**லேவியராகமம்** 17 -11

**மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது, நான அதை உங்களுக்குப் பலிபீடத்தின் மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்படிக்குக் கட்டளையிட்டேன், ஆத்துமாவிற்காகப் பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே.**

இரவு முழுவதும் அதாவது விடியம் வரைக்கும் ஒருவரும் வீட்டிற்கு வெளியே போகக்கூடாது என்று கட்டளையிட்டிருந்தார். அவர் வெளியே சென்றால் சங்காரத்தூதனால் மரணம் நேரிடும் என்று எச்சரித்திருந்தார்.

அதுபோல் நாமும் சுவிசேஷ யுகத்தின் இரவு முழுவதும் இந்த இரத்தத்தின் கீழ் இருக்கவேண்டும். ஒரு வேளை கீழ்படியாமையினாலும் அவிசுவாசத்தினாலும் நிர்விசாரத்தினாலும் அந்த இரத்தம் தெளிக்கப்பட்ட விசுவாசவீட்டை விட்டு வெளியேறினோம் என்றால், நாம் அனைவரும் தேவனுடைய தலைச்சன்களாக இருப்பதினால், சங்காரத்தூதனால் அழிக்கப்படுவோம். ஆகவே எந்த சூழ்நிலையிலும் நாம் கிறிஸ்துவின் இரத்தத்தை விட்டு வெளியே செல்ல கூடாது.

பழைய ஏற்பாட்டில் நடந்த மற்றொரு சம்பவத்தை பார்க்கலாம். ஒரு தலைமுறைக்கு பின்பு ராகாபும் அவள் வீட்டாரும் ஜன்னலில் சிவப்பு நூல் கட்டப்பட்டதால் காக்கப்பட்டார்கள். இதை பற்றி நாம் இங்கு குறிப்பிட்ட வசனங்களை வாசித்து அறிந்து கொள்ளலாம். (**யோசுவா** 2 - 12 - 21)

மற்ற அனைவரும் மரித்துவிட்டார்கள், இந்த குடும்பம் தேவனோடு ஐக்கியப்படுவதை அடையாளமாகவும் வெளியரங்கமாகவும் அறிக்கையிட்டதினால் இவர்கள் காக்கப்பட்டார்கள்.

**யோசுவா** 6 - 22- 25

**யோசுவா, தேசத்தை வேவுபார்த்த இரண்டு புருஷரை நோக்கி - நீங்கள் அந்த வேசியின் வீட்டிலே போய் , நீங்கள் அவளுக்கு ஆணையிட்டபடி அந்த ஸ்திரீயையும் அவளுக்கு உண்டான யாவையும் அங்கேயிருந்து வெளியே கொண்டுவாருங்கள் என்றான்.**

**அப்பொழுது வேவுகாரரான அந்த வாலிபர் உள்ளே போய் , ராகாபையும் அவள் தகப்பனையும் அவள் தாயையும சகோதரர்களையும் அவளுக்குள்ள யாவையும் அவள் குடும்பத்தார் அனைவரையும் வெளியே அழைத்துககொண்டுவந்து, அவர்களை இஸ்ரயேல் பாளயத்துக்குப் பறம்பே இருக்கும்படி பண்ணினார்கள்.**

அங்கு எகிப்தில் வாசற்நிலைகளில் தெளித்த இரத்தம் எந்த பாதுகாப்பின் வேலைகளை செய்ததோ, அதே வேலையை எரிகோவில் ராகாப் வீட்டின் ஜன்னலில் கட்டப்பட்ட சிவப்பு நூல் செய்தது. ஆயிரகணக்கான வருடங்களுககு முன் தலைச்சன் பிள்ளைகளை மீட்கப்பட்ட ஒரு சம்பவத்தை உலகத்தில் உளள சகல யூதர்களும் நினைவு கூர்ந்து வருகிறார்கள். (**யாத்திராகமம்** 12 - 14 )

ஒரே ஜாதியாக இருந்தபோதிலும் அவர்கள் பஸ்காவின் ஆழமான கருத்துகளை அறியாமலும் , சட்டத்தின் பிரமாணங்களை அறியாமலும் இருக்கிறார்கள். நிஜமான பஸ்காவை புசிப்பதற்கு தான் , இந்த நிழலான பஸ்காவை அனுசரிக்க சட்டம் கொடுக்கப்பட்டது. ஆனால் நிஜமான பஸ்காவாகிய இயேசுவின் பலியை இந்த பலியை ஏற்றகொள்ளாமல் போனார்கள்.

**யோவான்** 1 - 29

**மறுநாளிலே யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு,**
**இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி.**

1**கொரிந்தியர்** 5 - 7, 8

**ஆகையால் , நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே ,**
**புதிதாய்ப் பிசைந்தமாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்த மாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே.**
**ஆதலால் பழைய புளித்தமாவோடே அல்ல, துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்தமாவோடும் அல்ல, துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்.**

**கலாத்தியர்** 3 - 24

**இவ்விதமாக , நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாதியாய் இருந்தது.**

## ஒப்புரவாக்கும் கிறிஸ்துவின் இரத்தம்

சுவிசேஷ யுகத்தில் கிறிஸ்துவின் ஒப்புரவாக்கும் இரத்தத்தை விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றவர்கள் உடன்படிக்கையின் மூலம் தேவனோடு ஐக்கியப்படுகிறார்கள்.

**எபிரெயர்** 12 - 23, 24

**பரலோகத்தில பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையினிடத்திற்கும் ,**
**யாவருக்கும் நியாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும்.**
**புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும், ஆபேலினுடைய இரத்தம் பேசினதைபபார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள்.**

நிஜமான தலைச்சன் பிள்ளைகள் , பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டதினால் உலக மக்கள் சுமந்து கொண்டிருக்கும் ஆதாமின் பாவத்தில் இருந்து மீட்கப்படபோகிறார்கள். இரத்தம் தெளிப்பது, ஈடுபலியின் நன்மைகளை அடையாளப்படுததுவதாக இருக்கிறது. இது கிறிஸ்துவின் சபையின் சார்பாக உலக மக்கள் மேல் தெளிக்கப்படும், ஆகவே இந்த யுகத்தில் ஒவ்வொரு விசுவாசியும் கிறிஸ்துவின இரத்தத்தால் சுத்திகரிக்கப்பட வேண்டும்.

இன்று மனுக்குலத்தின் மத்தியில் அநேக கிறிஸ்துவ மண்டலங்கள் கிறிஸ்துவை பின்பற்ற தங்களுடைய வாழ்க்கையை தத்தம் செய்திருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் தலைச்சன் பிள்ளைகளாவதற்கு வாய்ப்புகள் கிடைக்கவில்லை. எகிப்திலிருந்து புறப்பட்ட மற்ற ஜனங்களுக்கு இந்த கிறிஸ்துவ மண்டலத்தை ஒப்பிடலாம். இந்த மக்கள் கிறிஸ்துவின் ஆட்சி காலத்தில் சாத்தான் கட்டப்பட்டிருக்கும் போது சபையின் மூலமாக பாவத்திலிருந்தும் மரணத்தில் இருந்தும் இவர்கள் விடுவிக்கப்படுவார்கள்.

**வெளி** 20 - 1 - 4,6

**ஒரு தூதன் பாதாளத்தின் திறவு கோலையும் பெரிய சங்கிலியையும் தன்கையிலே பிடித்துக்கொண்டு வானத்திலிருந்திறங்கிவரக்கண்டேன்.**

**அன்றியும் நான் சிங்காசனங்களைக் கண்டேன், அவைகளின்மேல் உட்கார்ந்தார்கள், நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் படி அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது, இயேசுவைப்பற்றிய சாட்சியினிமித்தமும் தேவனுடைய வசனத்தினிமித்தமும் சிரச்சேதம்பண்ணப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களையும், மிருகத்தையாவது அதின் சொரூபத்தையாவது வணங்காமலும் தங்கள் நெற்றியிலும் தங்கள் கையிலும் அதின் முத்திரையைத் தரித்துக்கொள்ளாமலும் இருந்தவர்களையும் கண்டேன். அவர்கள் உயிர்த்துக் கிறிஸ்துவுடனேகூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள்.**

**முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிர்ககிறான். இவர்களமேல் இரண்டாம்மரணத்திறகு அதிகாரமில்லை. இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்.**

**இந்த பாடத்திற்கு நம்முடைய மூத்த சகோதரனாகிய ரசல் எழுதிய சில வரிகளை வாசிப்போம்.**

" இயேசு இந்த உலகத்தில் வாழ்ந்தார், மரித்தார் என்று விசுவாசிப்பதற்கு மட்டும் நாம் அழைக்கப்படாமல் , அநீதியுள்ளவர்களுக்காக நீயதியுள்ளவராக விசேஷமாய் நமக்காய் பலியின் மரணத்தை அடைந்தார் என்ற உணர்வோடு விசுவாசிக்க வேண்டும். "

அவருடைய விலையேற பெற்ற இரத்தத்தினால் நாம் மீட்க்ப்பட்டோம் என்பதை நாம் முழுமனதோடு உணர வேண்டும். அங்கு நிலை வாசலின் சட்டத்தில தெளிக்கப்பட்ட இரத்தம், வெளியரங்கமான இயேசுவின் விலைமதிப்புள்ள இரத்தத்தின் மூலம் கிடைக்கும் மீட்பை அடையாளப்படுத்துகிறது. ஒவ்வொரு இஸ்ரயேலனும் தன்னுடைய வீட்டை விட்டு வெளியே செல்லாமல இருக்கவேண்டும என்பதை மனதில் வைக்க வேண்டியவர்களாக இருந்தார்கள். கர்த்தர் எகிப்தியரை சங்கரிக்க எழும்பினார்..... (**யாத்திராகமம்** 12 - 1 - 13)

இந்த சுவிசேஷ யுகத்தில் இயேசுவின் இரத்தத்தை விட்டு வெளியே பேரகிறவர்கள், அவருடைய இரக்கத்தை விட்டும் கிருபையை உணராமல் வெளியே செல்பவர்கள் இவர்கள் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள்.

**எபிரெயர்** 6 - 4 - 6

**ஏனெனில், ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டும், மரம ஈவை ருசிபார்த்தும , பரிசுத்த ஆவியைப் பெற்றும் , தேவனுடைய நல்வார்த்தையையும் இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தும், மறுதலித்துப்போனவர்கள தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறபடியால் , மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியம்.**

உமது வசனமே சத்தியம் உமது வசனமே சத்தியம் உமது வசனமே சத்தியம்

**எபிரெயர்** 10 - 26 - 29

**சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமிதததம் செலுததத்தக்க வேறொரு பலி இனியிராமல். நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும் , விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும். தேவனுடைய குமாரனைக் காலின் கீழ்மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப்பாருங்கள்.**

## அடைக்கல பட்டணம்.

தேவன் இஸ்ரயேல் தேசத்தில் கிருபையாக தந்த ஆறு அடைக்கலப்பட்டணத்தில் நமக்கு ஆழமான பாடம் அடங்கியுள்ளது.

ஒரு மனிதன் மற்றொரு மனிதனை தற்செயலாக கொன்று விட்டால் இந்த பட்டணங்களுக்குள் அவன் அடைக்கலம் புகுந்து விடலாம். அந்த பட்டணத்தில் உள்ள மூப்பர்கள் , அவன் குற்றமற்றவன் என்று நிருபிக்கும் வரைக்கும் அவனை தங்களுடைய பாதுகாப்பில் வைததிருப்பார்கள். ஒரு வேளை அவன் குற்றமுள்ளவனாக கண்டு பிடிக்கப்பட்டால் அவன் கொலை செய்றததினிமித்தம் பாதிக்கப்பட்டவர்களிடம் அவன் ஒப்புக்கொடுக்கப்பட்டு கொல்லப்படுவான்.

அவன் நிரபராதி என்று அனைவராலும் நிரூபிக்கப்பட்டால் அந்த பிரதான ஆசாரியர் , உயிரோடு இருக்கும் வரைக்கும் அந்த அடைக்கலப்பட்டணத்தில் பாதுகாப்பாக இருக்கலாம். ஒரு வேளை இதற்கு இடையில் அவன அந்த பட்டணத்தை விட்டு வெளியே வந்தால் , அவன் கொலை செய்யப்படுவான் இதை யாராலும் தடுக்க முடியாது. (**யோசுவா** 20 - 1 - 9)

சுவிசேஷ யுகத்தில் இயேசுவே அவரை அண்டி வந்தவர்களுக்கு அடைக்கல பட்டணமாக இருக்கிறார். அவருடைய விலையேற பெற்ற இரத்தத்தினால் இலவசமாக பாவமன்னிப்பை பெற்று ஞானஸ்நானத்தின் மூலம் உள்ளே பிரவேசிக்கும் நாம், ஏதோ ஒரு காரணத்திற்கு (நம்முடைய உலகப்பிரகாரமான தேவைகளுக்கு) வெளியே வந்தால் நிச்சயமாக அழிக்கப்படுவோம்.

1**பேதுரு** 5 - 8

**.... ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்ற வகைதேடிச் சுற்றித்திரிகிறான்.**

**எபிரெயர்** 10 - 31 , 38

**ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே. விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான், பின்வாங்கிப்போவானானால் அவன் மேல் என் ஆத்துமா பிரியமாயிராது என்கிறார்.**

ஆயிர வருட ஆட்சியில் உலக மக்கள் அனைவருமே இயேசுவை தங்களுடைய அடைக்கலப்பட்டணமாக ஏற்று கொண்டு சகல சத்தயத்தையும்கற்றுக் கொள்ளவார்கள். அந்த ஆட்சி முடிவு அடையும் போது சகல ஜனங்களும் தேவனுக்கு பூரணமாக கீழ்ப்படிவார்கள். அந்த குறிக்கப்பட்ட காலத்தில் இயேசு தன்னுடைய ஆசாரிய ஊழியத்தை முடித்துவிடுவார். அதற்கு பின்பு பிதாவின் பிரதிநிதியாக மனித குடும்பங்களை நீதியாக சோதித்து வாழக்கூடிய தகுதியுள்ளதா என்று ஆராய்ந்து தீர்ப்பு அளிப்பார். தேவனிடத்தில் கீழ்ப்படிதலாக இருப்பவர்களுக்கு நித்திய ஜீவனையும் கீழ்ப்படியாதவர்களுக்கு நித்தியமாக அழிவையும் நியமிப்பார்.

**மத்தேயு** 25 - 40 - 46

**அதற்கு ராஜா பிரதியுத்தரமாக - மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்ககு நீங்கள் எதைச்செய்தீகளோ,அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார்.**
**அப்பொழுது, இடதுபக்கத்தில்நிற்பவர்களைப் பார்த்து அவர் -- சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, , பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற நிததிய அக்கினியிலே போங்கள்.**
**பசியாயிருந்தேன் , நீங்கள் எனக்குப் போஜனங்கொடுக்கவில்லை. தாகமாயிருந்தேன் ,நீங்கள் என் தாகத்தைத் தீர்க்க வில்லை.**
**அந்நியனாயிருந்தேன், நீங்கள் என்னைச் சேர்த்துக்கொள்ளவில்லை, வஸ்திரமில்லாதிருந்தேன், நீங்கள் எனக்கு வஸ்திரங்கொடுக்கவில்லை. வியாதியுள்ளவனாயும் காவலிலடைக்கப்பட்டவனாயும் இருந்தேன் நீங்கள் எனனை விசாரிக்க வரவில்லையென்பார்.**
**அப்பொழுது , அவர்களும் அவருக்குப் பிரதியுத்தரமாக . ஆண்டவரே, உம்மைப் பசியுள்ளவராகவும் , தாகமுள்ளவராகவும் , அந்நியராகவும், வஸ்திரமில்லாதவராகவும் , வியாதிப்பட்டவராகவும் காவலிலடைக்கப்பட்டவராகவும் நாங்கள் எப்பொழுது கண்டு, உமக்கு உதவி செய்யாதிருந்தோம் என்பார்கள்.**
**அப்பொழுது அவர் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக - மிகவும் சிறியவர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் சொய்யாதிருந்தீர்களே, அதை எனக்கே செய்யாதிருந்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார்.**
**அந்தப்படி, இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும் , நீதிமான்களோநித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார்.**

## கிறிஸ்துவின் இரத்த்தில் உள்ள பொதுவான ஐக்கியாம்.

பஸ்கா ஆட்டின் இரத்ததை குறிதத ஒரு நிஜமான பாடத்தை தான் மரிக்கும் முன் இராத்திரியில் சீஷர்களுக்கு கட்டளையாக கொடுத்தார். அவருடைய கடைசி போஜனத்தை புசித்த பின்பு ( பிட்கப்பட்ட அந்த அப்பம், பாவமற்ற அவருடைய சரீரத்தையும் , அதன் மூலம் சீஷர்களுக்கு கிடைக்கும் நீதிமான் என்ற ஒரு நிலையும் இது எடுத்து காட்டுகிறது. )

**மத்தேயு** 26 - 27, 28

**பின்பு , பாத்திரத்தையும் எடுதது, ஸ்தோத்திரம்பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து, நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்,**
**இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது.**

இந்த ஒரு பாத்திரத்தில் குடிக்க அழைப்பு பெற்றவர்கள் கிறிஸ்துவின் இரத்தத்தில் பொதுவான பங்கு பெறுகிறார்கள். இது சபையானது முடிவு அடைந்து மத்தியஸ்தராக தகுதி பெறும் வரைக்கும் நடைபெறும் . இந்த ஒரு மத்தியஸ்தரின் பொறுப்பை அவர்கள் வருகிற யுகத்தில் செயல்படுத்துவார்கள். அப்பொழுது முழு மனுகுலத்திற்கும் கிறிஸ்துவின் இரத்தம் போய்ச் சேரும். விருப்பம் உள்ளவர்கள் அதை பெற்று கொள்ளுவார்க்ள.

**வெளி** 22 - 17

**ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள், கேட்கிறவனும் வா என்பானாக . தாகமாயிருக்கிறவன வரக்கடவன், விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்.**

அப்போஸ்தலனாகிய பவுல் எழுதும் போது

**கொலோசேயர்** 1 - 24

**இப்பொழுது நான் உங்கள் நிமித்தம் அநுபவிக்கிற பாடுகளில் சந்தோஷமடைந்து, கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக , என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன்.**

வேதவசனத்தின்அடிப்படையில்கிறிஸ்துவின்பாடுகளைநாம்நம்முடையஇந்த மாம்சத்தில் நிறைவேற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம். ஒவ்வொருவருக்கும் உள்ள இந்த தெய்வீக நோக்கமானது நாம் பெற்ற இந்த மாம்சத்தில் ஆசாரியத்துவத்தை வளர்த்து , வருங்காலத்தில் மக்களை ஆசீர்வதிப்பதற்கு பயன்ப்படுத்தப்படும். ஆசாரியத்துவம் என்பது மத்தியஸ்தரின் வேலையாகும், அதாவது மற்றவர்களுடைய குற்றத்திற்காக நாம் பரிந்து பேசுவது. இன்று நம்முடைய பாவங்களுக்காக இயேசு பிதாவினிடம் பரிந்து பேசுகிறவராக இருக்கிறது போல் , நாமும் நம்முடைய ஜீவனை இதற்காக பயன்ப்படுத்தினால் அதாவது நம்முடைய ஜீவனை சகோதரனுக்கு கொடுப்பவர்களாக இருந்தால் 1000 வருட ஆட்சியில் மக்களை ஆசீர்வதிக்கவும் தகுதி பெறலாம்.

சபைக்கு எப்படிப்பட்ட ஒரு பாக்கியம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற யோசித்து பாருங்கள். தேவனுடைய உண்மையான தலைச்சன்கள் , கிறிஸ்துவோடு தேவனுடைய ராஜ்யத்தில் பூமியில் உள்ள குடும்பங்களை ஆசீர்வதிப்பார்கள்.

நாம் இந்த சிலாக்கியத்தை பெற **நம்முடைய சகோதர்ரகளை நேசிப்போமா** ? **ஆசாரியத்துவதத்தில் வளருவோமா** ? **அவர்களுக்காக ஜீவனை கொடுக்க முன் வருவோமா** ? **இன்றே மற்றவர்களுடைய பாவங்களை மன்னித்து அவர்களை ஆசீர்வதிப்போமா** ?

**THE HERALD – Page 11-16**
**MAR/APR-2008**

**தமிழாக்கம்**
**பாடம் - 3**

# புளிப்பில்லா அப்பமும் கசப்பான கீரையும

---

கிறிஸ்து இயேசுவக்குள் மிகவும் அன்பான சகோதர சகோதரிகளே
நம்முடைய பாடத்திற்கு ஆதார வசனமாக
**1,கொரிந்தியர் 5 - 8**

**ஆதலால் பழைய புளித்தமாவோடே அல்ல, துர்க்குணம்பொல்லாப்பு என்னும் புளித்தமாவோடும் அல்ல, துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்.**

பழைய எற்பாட்டில் அனுசரித்த பஸ்காவை பற்றியும் புதிய ஏற்பாட்டின் பஸ்காவை பற்றியும் நாம் வருடம் தோரும் அநேக பிரசங்களில் கேட்டு அறிநதிருக்கிறோம். அவைகள் அனுசரிக்கப்பட்ட நோக்கங்களையும், விதங்களையும், முறைகளையும் நாம் அறிவோம்.

ஆனால் இந்த பழைய பஸ்காவிலும் புதிய பஸ்காவிலும் உள்ள ஒற்றுமையான , ஒரு காரியத்தை குறித்து இன்று நாம் தியானிப்போம். -------------- புளிப்பில்லா அப்பம்.

இரண்டு பஸ்காவிலும் புசிக்கப்பட்ட ஒரு போஜனம் புளிப்பில்லா அப்பமாக இருக்கிறது. புளிப்பில்லா அப்பத்தை புசிப்பது மட்டும் அல்லாமல், புளிப்புள்ள எந்த காரியத்தையும் தங்கள் வீடுகளில் இருந்து அகற்ற வேண்டும் என்று அடிப்படையான ஒரு சட்டம் பழைய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்டிருந்தது.

**யாத்திராகமம் 13 - 7**

**அந்த ஏழுநாளும் புளிப்பில்லா அப்பம் புசிக்கவேண்டும், புளிப்புள்ள அப்பம் உன்னிடத்திலே காணப்படவேண்டாம் உன் எல்லைக்குள் எங்கும் புளித்தமாவும் உன்னிடத்தில் காணப்படவேண்டாம்.**

இதை தொடர்ந்து ஏழு நாள் புளிப்பில்லா அப்பண்டிகை கொண்டாடப்பட்டது.

**யாத்திராகமம் 12 - 15**

**புளிப்பில்லா அப்பத்தை ஏழுநாளளவும் புசிக்கக்கடவீர்கள், முதலாம் நாளில்தானே புளித்தமாவை உங்கள் வீடுகளிலிருந்து நீக்கவேண்டும். முதலாம் நாள் தொடங்கி ஏழாம் நாள்வரைக்கும் புளித்த அப்பம் புசிக்கிறவன் எவனோ அந்த ஆத்துமா இஸ்ரயேலிருந்து அறுப்புண்டுபோவான்.**

ஆகவே இந்த பஸ்கா வருவதற்கு முன் ஒவ்வொரு இஸ்ரயேல் மக்களும் தங்கள் வ்டுகளை கூட்டி பெருக்கி துடைந்து சுத்தம் செய்வார்கள். அவர்களை அறியாத புளிப்புள்ள காரியங்கள் எங்கும் இருந்து விடக்கூடாது என்று இப்படி செய்வார்கள். ஆக புளிப்புள்ள எந்த காரியத்தையும் அவர்கள் அகற்றி விடுவார்கள். இதை அவர்கள் செய்யாமல் போனால் இஸ்ரயேல் ஜனங்களில் இருந்து அறுப்புண்டு போவார்கள் என்று தேவன் தீர்க்கமாக கட்டளை கொடுத்திருந்தார். ஆகவே இதை அனைவரும் கடைபிடித்து வந்தார்கள்.

நம்முடைய உணவில் புளிப்பு எதில் இருந்து வருகிறது என்று முதலில் பார்க்கலாம். பெறும்பாலான புளிப்பு " ஈஸ்ட்டில்" இருந்து கிடைக்கிறது , இது " ஒரு அனு" உடையதாக இருக்கிறது. இது சர்க்கரையையும், "ஸ்டார்ச் " என்ற புரத சத்தையும் நேரடியாக கரியமள வாயு ஆகவும், ஆல்க்கஹால் ஆகவும் மாற்றிவிடுகிறது. இது புசிப்புக்கு மிக அருமையாக இருக்கும், சுவையை அதிகரிக்கும் , ஆனால் இது குடலில் உள்ள சகல சத்துக்களையும முறித்து விடும். ஆகவே புளிப்புள்ளவைகள் நம்முடைய ஆகாரத்தை அதிக ருசியுள்ளதாக மாற்றுமே தவிர அது எந்த வகையிலும் நமக்கு சத்துக்களை உணவை தருவதில்லை. இதை புசிப்பவர்கள். தங்களுடைய உடல் ஆரோக்கியத்தை இழந்து விடுவார்கள். ஆகவே இந்த புளிப்பை வேதாகமத்தில் "பாவத்திற்கு" ஒப்பிடப்படுகிறது. பழைய எற்பாட்டின் காலத்தில் புளிப்புள்ளதையும், தேவனையும பலி பொருள்களில்

**லேவியராகமம்** 2 - 11 - 13

**நீங்கள் கர்த்தருக்குச் செலுத்தும் எந்த போஜனபலியும் புளித்தமாவினால், செய்யப்படாதிருப்பதாக புளித்தமாவுள்ளதொன்றையும் தேனுள்ளதொன்றையும் கர்த்தருக்குத தகனபலியாகத் தகனிக்கவேண்டாம்.**

இஸ்ரயேல் மக்கள் தங்கள் வீடுகளில் இருந்து புளிப்பை முற்றிலுமாக அகற்றினது போல நாமும் நம்முடைய கிறிஸ்துவ வாழ்க்கையில் இருந்து பாவத்தை முற்றிலுமாக அகற்ற வேண்டும். நாம் அபூரணராக இருப்பதினால் இதை நம்மால் செய்ய இயலவில்லை. ஆனால் தேவ ஆவியின் துணையோடு நிச்சயமாக நாம் இதை செய்ய கடமை பெற்றுள்ளோம்.

ஈஸ்ட அநேக வகைப்படும் , அதே போல் நம்முயைட வேதாகமத்தில் உள்ள புதிய ஏற்பாட்டில் "ஆறு" விதமான புளிப்புகளை பற்றி சொல்லப்படுகிறது. நம்முடைய பஸ்காவை நாம் அனுசரிப்பதற்கு இந்த ஆறுவகையான புளிப்புகளையும் நம்முடைய கிறிஸ்துவ வாழ்க்கையில் இருந்து அகற்ற வேண்டும்.

1. **பரிசேயரின் புளித்த மாவு**
2. **சதுசேயரின் புளித்த மாவு**
3. **ஏரோதின் புளித்த மாவு**
4. **பழைய புளித்த மாவு**
5. **கோபம்**
6. **மூர்க்கமும் , வம்பு வார்த்தைகளும்.** (**வார்த்தையால் ஜாலம் செய்வது, போட்டு வாங்குவது.....**)

**பரிசேயரின் புளித்த மாவு** 1

திரளான ஜனக்கூட்டம் கூடி வந்திருக்கையில் , அதாவது ஒருவரை ஒருவர் மிதிக்கத்தக்கதாக கூட்டத்தை கண்ட இயேசு பரிசேயர்களின் புளித்த மாவை குறித்து எச்சரிக்கையாக இருநகள் என்று புத்தி சொல்லுகிறார்.

**லூக்கா** 12 - 1

**அத்தருணத்திலே அநேகமாயிரம் ஜனங்கள் ஒருவரையொருவர் மிதிக்கத்தக்கதாகக் கூடிவந்திருக்கையில், அவர் முதலாவது தம்முடைய சீஷரை நோக்கி-- நீங்கள் மாயமாகிய பரிசேயருடைய புளித்தமாவைக் குறித்து எச்சரிக்கயைாயிருங்கள்...**

இவர்களை குறித்து சொல்லும் போது " மாயமாகிய" என்ற வார்த்தையை இயேசு பயன்படுத்துகிறார். மாயமான என்பதற்கு , உண்மையில்லாத, நடிப்பு , வேஷம் என்ற அர்த்தங்களை நாம் இதற்கு பொருத்தலாம்.

இந்த நடிப்பும் வேஷமும் விழுந்து போன மனிதனின் ஒரு திறமையான குணமாக இருக்கிறது. ஒவ்வொரு மனிதனும் மற்றவர்கள் முன்நிலையில் தன்னை மிக நல்லவனாக காண்பிக்க விரும்புகிறான். ஆகவே நாம் நம்முடைய சுய குணங்களை ( விழுந்து போன குனங்களை) வெளிப்படுத்தாமல் தேவைப்படுகிற நேரத்தில் பூரண குணமுள்ள முகமூடிகளை அணிந்து கொண்டு, அனைவரும் நம்மை நல்லவர்கள் என்று போற்றும் வகையில் நேர்த்தியாக நடந்து கொள்ளுகிறோம்.

இதுவே மாயக்காரர்கள போடும் வேஷம் . நம்முடைய மூத்த சகோர ரசல இதை குறித்து நமக்கு , மிக சுருக்கமாக அறிவுரை சொல்லுகிறார். அனைவருக்கு முன்பாக நேர்மையாகவும், உண்மையாகவும் நடந்து கொள்ளுங்கள் . இந்த பரிசேயர்கள் சுய நீதியுள்ளவர்களாக இருந்தார்கள். அனைவரும் அவர்களை உயர்ந்த நிலையில் வைத்து கனப்படுத்தினார்கள். கீழ்ப்படிந்தார்கள். இப்படியாக சமுதாயத்தில் இவர்கள் மேன்மையாக எண்ணப்பட்டார்கள். ஆனால் இவர்களுடைய முழு சிந்தைகளையும் இயேசு அறிந்திருந்தார்.

**மத்தேயு** 6 - 1- 8

முழுமையாக வாசிக்கவும்.

இதில் மனுஷர் காண வேண்டும் என்று தர்மம் செயவது மனுஷர் காணவேண்டும் என்று ஜெபிப்பது எல்லாம் வேஷமாகவும மாயமாகவும இருக்கிறது என்று இயேசு குறிப்பிடுகிறார். இவர்கள அடையும் பலனை குறித்தும் இயேசு சொல்லியிருக்கிறார்.

**லூக்கா** 17 - 10

**அப்படியே நீங்களும் உங்களுக்குக் கட்டளையிடப்பட்ட யாவற்றையும் செய்த பின்பு, நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர், செய்யவேண்டிய கடமையைமாத்திரம் செய்தோம் என்று சொல்லுங்கள் என்றார்.**

"அப்பிரயோஜனமான ஊழியக்காரா " அதாவது இவர்கள் செய்து எந்த வேலைகளுக்கு ஒரு பலனும் இல்லை என்று உறுதியாக இயேசு சொல்லுகிறார். ஆகவே நாம் இநத வேஷத்தை போட்டு கொண்டு செய்யும் எந்த வேலையினாலும் இரட்சிக்கப்படுவதில்லை என்று நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அவருடைய சுத்த கிருபையினாலே இரட்சிக்க படுகிறோம் என்று வசனம் தெளிவாக கூறுகிறது.

**எபேசியர்** 2 - 8, 9

**கிருபையினலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள், இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுயைட ஈவு, ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இதுகிரியைகளினால் உணடானதல்ல.**

ஆகவே நம்முயை வாழ்க்கையில் இருந்து முதலாவது அகற்ற வேண்டிய புளிப்பு நம்முடைய வாழ்க்கையுள்ள மாயமான வேஷம், நடிப்பு, போன்றவைகளை தான். உள்ளதை உள்ளபடியும் நாம் மற்றவர்களிடம் வெளிப்படுத்த வேண்டும். எனவே நம்முடைய வாழ்க்கை வேஷம் போடுவதையும் முகமூடி அணிவதையும் இன்றோடு விட்டு விடுவோம்.

**சதுசேயரின் புளித்த மாவு** 2

**மத்தேயு** 16 - 11, 12

**பரிசேயர் சதுசேயர் என்பவர்களின் புளித்தமாவுக்கு எச்சரிக்கயையாயிருக்க வேண்டும் என்று நான் சொன்னது அப்பத்தை குறித்துச் சொல்லவில்லை என்ற நீங்கள உணராதிருக்கிறது எப்படி என்றார். அப்பொழுது, அவர் அப்பத்தின் புளித்தமாவைக்குறித்து எச்சரிக்கயையாயிருக்கவேண்டுமென்று சொல்லாமல், பரிசேயர் சதுசேயர் என்பர்களின் உபதேசத்தைக்குறித்தே அப்படிச் சொன்னர் என்ற அறிந்துகொண்டார்கள்.**

இவர்களுடைய தவறான விசுவாசம் என்னவென்று வசனத்தின் மூலம் பார்க்கலாம்.

**அப்போஸ்தலர்** 23 - 8

**என்னத்தினாலென்றால், சதுசேயர் உயிர்த்தெழுதல் இல்லையென்றும், தேவதூதனும் ஆவியும் இல்லையென்றும் சொல்லுகிறார்கள். ....**

இங்கு தவறான போதனைகளை பற்றி சொல்லப்படுகிறது. இந்த சதுசேயர்கள் உயிர்த்தெழுதலை விசுவாசிக்காதவர்கள். ஆகவே தேவன் மனிதனுக்கு தந்த வாக்குறுதிகளை விசுவாசியாதவர்கள் . இந்த சதுசேயர்கள் அடிப்படை விசுவாசத்தில் இல்லாததினால் இவர்கள் உலக காரியங்களான அரசியல், அமைப்புகள், இன்னும் பல காரியங்களில் தங்களை ஈடுபடுத்தி கொண்டிருந்தார்கள்.

ஒரு மனிதனுக்கு சந்தேகம் வருவது இயல்பு தான்,ஆனால் இதை தீர்க்கமாக ஆராய்ச்சி செய்வதின் மூலம் சத்தியத்தின் அறிவை பெற்று நீதியின் பாதையில் நடக்கலாம். ஆனால் சிலர் தங்களுடைய தவறுகளை மறைக்கவும் , செய்யக்கூடிய தவறான காரியங்களுக்கு நியாயம் கற்பிக்கவும் வசனங்களை தேடுவாகள்.

எடுத்துக்காட்டு - தான் செய்யும் தவறுக்கு தேவன் அனுமதி கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்த்த பிலேயாமை போல நாம் இருக்கக்கூடாது.

இந்த விதம் நம்மை சத்தியத்தை விட்டு விலகி செய்யக் கூடிய தவறுகளுக்கு நியாயம் கற்பிக்க வழிநடத்தும்

பாபிலோன் சிறையிருப்பில் இருந்து வீடு திரும்பின இஸ்ரயேல் மக்களின் பிரதான ஆசாரியர்கள , இஸ்ரயேலின் ஆளுனர்கள என்று சுற்றியுள்ள நாடுகளால் அழைக்கப்பட்டார்கள். அதற்கு பின்பு இந்த சதுசேயர்கள் ஆட்சி பொருப்பில் அதிகமாக ஈடுப்பட்டிருந்தார்கள்.ஆகவே ரோமர்களோடும் கிரேக்கரோடும் ஐக்கியப்பட்டிருந்தார்கள். அரசாங்கத்தில் கொடுக்கப்படும் வாக்குறுதிகளை விசுவாசித்தார்கள் . தேவனுயைட சத்தியத்தையும் வாக்குறுதிகளையும் விசுவாசியாதவர்கள். உலக மக்களோடு இணைந்து அவர்கள் பேரில் விசுவாசம் வைத்து வாழ்வதை அன்று இயேசு சதுசேயருடைய புளித்த மாவு என்று குறிப்பிட்டிருக்கிறார்.

எடுத்துக்காட்டு -- தீர்க்கதரிசியான தானியேல் உணவுக்காகவும், சிலையை வணங்குவதாலும் , தன்னுடைய தேவனை ஆராதிப்பதிலும் , அவர் எந்த காரியத்திலும் இணைந்து செயல்படுவதில்லை. தேவனுடைய சட்டங்கள் எந்த விதத்திலும் நம் வசதிக்காக வளைக்க கூடாது.

இன்றைய கிறிஸ்தவர்கள் வாழக்கூடிய சூழ்நிலையை சிந்தித்து பாருங்கள் . உலகப் பிரகாரமான காரியங்களில் இணைந்து செயல்படாமல் இருகக வாய்ப்பு இல்லை. வேலை, படிப்பு, திருமணம் , கல்லறை போன்ற காரியங்களுக்கு இணைந்து செயல்படக் கூடிய கட்டாயத்தில் இருக்கிறார்கள். ஆனால் கிறிஸ்துவின் பஸ்காவில் பங்கு பெற ஆயத்தமாக இருக்கும் நாம் இப்படிப்பட்ட புளிப்பை நம்முடைய வாழ்க்கையில் இருந்து அகற்ற வேண்டும். அடுதததாக இயேசு

**ஏரோதின் புளித்தமாவ**

**மாற்கு 8 - 15**

**அவர் அவர்களை நோக்கி .- நீங்கள் பரிசேயருடைய புளித்தமாவைக்குறிததும் ஏரோதின புளித்தமாவைக்குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள் என்ற கற்பித்தார்.**

தேவனுடைய பிள்ளைகளாக நாம் இயேசுவின் அடிச்சுவடுகளில் நடக்கக்கவிரும்புவர்களாக இருந்தாலும் மாம்சத்தில் இந்த உலகத்தில் வாழ்வதனால் நாம் இருக்கக்கூடிய இடத்தில் உள்ள அரசாங்கத்திற்கும் கட்டுப்பட்டு இருக்கவேண்டும். இன்றைக்கு அநேகர் அரசாங்க சலுகைகள் கிடைப்பதற்கு தேவனுடைய நீதியை விட்டு விலகலாம் , அடுத்த வேதாகமத்தில் தவறு என்று போதிக்கும் காரியத்தை அரசாங்கம் சரி என்று சொல்லலாம். நம்முடைய உலகப் பிரகாரமான நனமைக்காக நாம் எந்த சூழ்நிலையிலும் தேவ நீதீயை விட்டு தவறி விடக் கூடாது.

தேவன் தன்னுடைய திட்டங்களை இந்த பூமியின் மேல் நிறைவேற்ற மக்களையும் அவர்கள் சார்ந்து வாழும் அனைத்தையும் பக்குவப்படுத்தி கொண்டு ஆயத்தப்படுத்தி கொண்டிருக்கிறார்.

**ஏசாயா** 26 - 9

**..... உம்முடைய நியாயத்தீர்ப்புகள் பூமியிலே நடக்கும் போது பூச்சக்கர்துக்குடிகள நீதியைக் கற்றுக்கொள்வார்கள்.**

அந்த சூழ்நிலையில் நாம் இந்த உலக அரசாங்கத்தில் தேவனுக்கு எதிரான காரியங்களுக்கும் , உலக பிரகாரமான ஆதாயத்திற்கும் விழுந்து போகாமல் இருக்க வேண்டும்.

அடுத்து ஏரோது ஒரு சுயநலம் உள்ளவனாக இருந்தான். முறைகேடான ஒரு உறவை வைத்திருந்தான் . இதை எச்சரித்த யோவான் ஸ்நானகனின் தலை வாங்கப்பட்டது.

நாம் இந்த உலக பிரகாரமான வாழ்க்கையில் மாம்சத்தின் இச்சைகளுக்கு அடிமையாகாதிருக்கவேண்டும். இயேசு நமக்கு கற்பித்த சட்டத்தின் படி திருமணங்கள் முறையாக இருக்க வேண்டும்.

1. திருமன பந்தத்தில் இனைந்தவர்கள் எந்த சூழ்நிலையிலும் பிரிந்து வாழ்க்கூடாது.

**1கொரிந்தியர்** 7 - 5➔"...... ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாதிருங்கள், உங்களுக்கு விரதத்துவம் இல்லாமையால் சாத்தான் உங்களைத் தூண்டிவிடாதபடிக்கு, மறுபடியும் கூடி வாழுங்கள்."

2. பரிந்த வாழ்பவர்கள் வேறு திருமணம் செயவதற்கு வேதம் அனுமதிப்பதில்லை. (**மத்தேயு**5-32)

3. எல்லாவற்றிக்கும் மேல் நம்முடைய சிந்தையில் கூட கறைப்படாதவர்களாய் இருக்க வேண்டும் என்று இயேசு வலியுறுத்துகிறார்.

**மத்தேயு** 5 - 28➔"...ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று."

திருமணத்தை குறித்து வேதம் நமக்கு போதிக்கும் உபதேசம் இதுவே.

ஒரு வேளை நம்முடைய வாழ்க்கையில் இப்படிப்பட்ட காரியங்கள் இருக்குமானால் இன்று முதல் இந்த புளித்தமாவை அகற்றுவோம்.

அடுத்ததாக பவுல் மூன்று வித புளித்த மாவை குறித்து எழுதுகிறார்.

**1கொரிந்தியர்** 5 - 8

**ஆதலால் பழைய புளித்தமாவோடே அல்ல, துர்க்குணம்பொல்லாப்பு என்னும் புளித்தமாவோடும் அல்ல, துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்.**

1. **பழைய புளித்தமாவு**
2. **துர்க்குணம்**
3. **பொல்லாப்பு என்று புளித்த மாவு**

இங்கு சொல்லப்படும் பழைய புளித்தமாவு இரண்டு காரியங்களை குறிப்பிடுகிறது.

1. **பாவம்**
2. **பாவிகள்.**

**1கொரிந்தியர்** 5 - 13

**"புறம்பே இருக்கிறவர்களைக்குறித்துத் தீர்ப்புச்செய்கிறது என் காரியமா ? ஆகையால் , அந்த பொல்லாதவனை உங்களை விட்டுத் தள்ளிப்போடுங்கள். "**

மொத்தத்தில் பழைய புளித்த மாவு என்பது பழைய பாவத்தை , நீண்ட கால பாவம் அதாவது ஆதாமின் பாவத்தை குறிக்கும். மனிதன் பாவத்தில் விழுந்ததின் காரணமாக பாவத்தை தலைமுறை தோரும் சுமந்து வந்தது மட்டும் அல்லாமல். அவன் சுற்று புற சூழ்நிலைமை அனைத்தும் பாவமானது. இந்த இரண்டுகாரியங்களை குறித்து தாவீது குறிப்பிடுகிறார்.

**சங்கீதம்** 51 - 5

**என் தாய் என்னை பாவத்தில் கர்ப்பம் தரித்தாள , நான் துர்குணத்தில் உருவானேன்.**

நாம் பாவத்தில் பிறந்ததை ஒன்றும் செய்யமுடியாது. ஆனால் நாம் செய்யும் பாவத்திறகு யாரும் பொறுப்பெடுத்துக் கொள்ளவும் முடியாது, ஆகவே நாம் செல்லும் பாதையில் நம்மில் உள்ள சகல விதமான மாமசத்தின் கிரியைகளையும் நாம் களைய வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆக மொதததததில் நாம் பழைய மனிதனை முற்றிலுமாக விட்டு புதிய மனிதனை தரித்து கொள்ளுங்கள் என்கிறார்.

**எபேசியர்** 4 - 22 - 24

**"அந்தப்படி, முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரிதது‌க்கொள்ளுங்கள். "**

அப்போஸ்தலனாகிய பவுல் பழைய புளித்தமாவில் இன்னும் உள்ள 10 விதமான புளிப்பை பற்றி குறிப்பிடுகிறர்.

**கொலோசேயர்** 3 - 5 - 9

**"ஆகையால் விபசாரம் , அசுத்தம், மோகம் , துர்இச்சை , விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழிததுப்போடுங்கள்." "இவைகளின் பொருட்டே கீழ்ப்படியாமையின் பிள்ளைகள் மேல் தேவ கோபாக்கினை வரும்."**

**" நீஙக்ளும் முற்காலத்தில் அவர்களுக்குள்ளே சஞ்சரித்துபோது, அவைகளைச் செய்துகொண்டுவந்தீர்கள். "**

**"இப்பொழுதோ கோபமும் மூர்க்கமும் பொறாமையும், உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும் வமபு வார்ததைகளுமாகிய இவைகளையெல்லாம் விட்டு விடுங்கள். ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள். பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்துபோட்டு,**

கடைசியாக " <u>கோபம் , மூர்க்கம் , வம்பு வார்ததைகளை " பற்றி சொல்லிவிட்டு</u> ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள் என்கிறார். மேல் சொல்லிய மூன்று குணமும் ஒன்றுக்கு பின் ஒன்றாக வரச் கூடயதாக இருக்கிறது.

நாம் கோபம் கொள்ளும் போது அதை மற்றவர்கள் அறியாமல் இருப்பதற்கு அந்த கோபத்தை நமக்குள் அடக்கின பின்பு அது பொறாமையாக மாறி விடுகிறது. அந்த பொறாமை நம்மை துர் கிரியைகளை செய்வதற்கு வழி வகுக்கிறது. ஆகவே நாம் கோபத்தை நம்முடைய வாழ்க்கையிலிருந்து அகற்றி விட்டால் தொடர்ந்து வரக்கூடிய குணங்களை எளிதில் நம்மை விட்டு விலக்கி விடலாம்.

அதற்கு பின் கடைசியாக சொல்லப்பட்ட பாவம் " பொய்"

இதை இரண்டு வகையாக பிரிக்கலாம்.

**1. தேவனிடம் சொல்லக்கூடிய பொய் .**

**2. மனிதனிடம் சொல்லும் பொய்.**

ஆகவே நாம் ஜெபிக்கும் போதும் , சகோதரர்களிடம் பேசும் போதும் , உலக மக்களிடம் பேசும் போதும் உண்மையையும் , சத்தியத்தையும் மட்டுமே பேசவேண்டியவர்களாக இருக்கவேண்டும்.

உமது வசனமே சத்தியம் உமது வசனமே சத்தியம் உமது வசனமே சத்தியம்

எனவே நம்முடைய வாழ்க்கையில் உண்மையையும் துப்பரவையும் அடிப்படையாக கொண்டு வாழ வேண்டும் அப்போது நமக்குள் இருக்கும் சத்தியம் வளர்ச்சி அடையும் , நாம் நடக்க வேண்டி நீதியின் பாதை நமக்கு தெளிவாக இருக்கும் . நமக்குள் வளரும் புது சிருஷ்டி அதிகமான வளர்ச்சி அடையும் , நாம்
சீக்கிரத்தில் பூரணப்பட்டு விடுவோம். இந்த இராபோஜனத்திற்கு முன்பாக நம்மை நாம் ஆராய்ந்து சோதித்து அதில் பங்கு பெற தேவன் தாமே கிறிஸ்துவின் மூலம் நம்மை வழிநடத்துவாராக.

## கசப்பான கீரை

பழைய ஏற்பாட்டின் காலத்தில் தேவன் மோசேயின் மூலம் பஸ்காவை அனுசரிக்க கட்டளைகளை கொடுத்த போது , கசப்பான கீரையை அவர்களின் பஸ்கா போஜனத்தின் ஒரு பகுதியாக புசிக்கும் படி கட்டளையிட்டார்.

**யாத்திராகமம்** 12 - 8

**"அன்று ராத்திரியிலே அதின் மாம்சத்தை நெருப்பினால் சுட்டு, புளிப்பில்லா அப்பத்தோடும் கசப்பான கீரையோடும் அதைப் புசிக்கக்கடவர்கள். "**

இந்த பஸ்காவை தலைமுறை தோரும் அனுசரித்து, அவர்களுடைய பிள்ளைகளின் பிள்ளைகளுக்கு எகிப்தில் அவர்கள் அடிமைப்பட்டிருந்ததையும் அறிவிக்கும் படி இதை வருடம் தோரும் ஆசரிக்கும் படி கட்டளையிட்டிருந்தார்.

இந்த பஸ்காவில் கசப்பான கீரை எதை அடையாளப்படுத்துகிறது?

இஸ்ரயேல் மக்கள் எகிப்தில் இருந்து விடுதலை பெற்று கானான் சென்றிருந்தாலும் , அவர்கள் எகிப்தில் அடிமைப்பட்டிருந்ததையும், அங்கு ஏற்பட்ட கசப்பான அனுபவங்களையும் அவர்கள் நினைவுக்கூறும்படி அவர்களுக்கு தேவன் இந்த கசப்பான கீரையை கட்டளையிட்டார். எப்போது எல்லாம் அவர்கள் பஸ்காவை அனுசரித்தார்களோ, அப்போது எல்லாம் அவர் எகிப்தில் பட்ட பாடுகளை நினைவுக்கூர வேண்டியவர்களாயிருந்தார்கள். அந்த பாடுகளில் இருந்து விடுதலையை கொடுத்த தேவனை மகிமை படுத்த கடமைப்பட்டிருந்தார்கள்.

இந்த ஒரு கசப்பான க்ரை பற்றி புதிய பஸ்காவில் எங்கும் கொடுக்கப்படவில்லை என்று நாம் நினைக்கலாம். மீண்டுமாக பழைய ஏற்பாட்டிற்கு போகலாம்.

**யாத்திராகமம்** 15 - 23 - 25

**"அவர்கள் மாராவிலே வந்தபோது, மாராவின் தண்ணீர் கசப்பாயிரந்ததினால் அதைக் குடிக்க அவர்களுக்குக் கூடாதிருந்தது, அதினால் அவ்விடத்துக்கு மாரா என்று பேரிடப்பட்டது. "**

**"அப்பொழுது ஜனங்கள் மோசேக்கு விரோதமாய் முறுமுறுத்து, என்னத்தைக் குடிப்போம் என்றார்கள்." மோசே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான், அப்பொழுது கர்த்தர் மோசேக்கு ஒருமரத்தைக் காண்பித்தார், அதை அவன் தண்ணரில் போட்டவுடனே,அது மதுரமான தண்ணீராயிற்று, ...."**

இஸ்ரயேல் மக்கள் எகிப்தை விடடு புறப்பட்ட மூன்று நாட்களுக்கு பின்பு அவர்கள் வனாந்தரத்தில் தண்ணீர் கிடைக்காமல் , அலைந்து மாறா என்ற இடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அங்கு தண்ணீர் கசப்பாக இருந்தது. ஒரு மரத்தை அதில் வெட்டி போட்ட பின்பு அந்த தண்ணீர் மதுரமானது .

ஆகவே நம்முடைய பஸ்காவில் கசப்பாக எந்த உணவும் அடையாளமாக கட்டளையிடப்படாமல் இருந்தாலும் , நம்முடைய பிரயாணத்தில் கசப்பான தண்ணீரை பருக வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம். இந்த கசப்பான தண்ணீர் நம்முடைய வாழ்க்கையில் நீதியின் நிமித்தம, உண்மை நிமித்தம் படக்கூடிய பாடுகளை அடையாளப்படுத்துகிறது.

**இந்த பாடுகள் நமக்கு தேவையா ? கசப்பான அனுபவங்கள் நமக்கு தேவையா ?**

யாக்கோபு 1 - 12

**"சோதனையைச் சகிககிற மனுஷன் பாக்கியவான், அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான். "**

1பேதுரு 1 - 7

**"அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும், அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும். "**

நமக்கு நேரிடும் சோதனைகள் நிச்சயமாக நம்முடைய திரானிக்குதக்கதாக மட்டுமே இருக்கும் என்பதை தேவன் நன்கு மனதில் வைத்திருக்கிறார். அதை மட்டும் அவர் அனுமதிக்கிறார் என்று நாம் முந்தி அறியவேண்டியது.

எகிப்தில் இருந்த இஸ்ரயேல் மக்கள் அந்த அடிமைத்தனத்தின் கொடுமைகளை நினைவுக்கூர்ந்தது போல் நாமும் இந்த பாவமான உலகத்தில் வாழ்ந்த வாழ்க்கையை சற்று நினைவு கூாந்து பாருங்கள் , நாம் அதில் பட்ட பாடுகளுக்கு எந்த விதமான நன்மையும் இல்லை. சாத்தான் தந்த எல்லா சந்தோஷங்களிலும் தீமை கலந்திருந்தது. ஆனால் நாம் இப்பொழுது அனுபவிக்கும் பாடுகளுக்கு பலன் காத்திருக்கிறது. ஆகவே இந்த பாடுகளை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளுவோம்.

1பேதுரு 4 - 13

**"கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்.** இந்த உலகத்தில் நீங்கள் எந்த அளவுக்கு பாடுகள்பட்டாலும் நீங்கள் அடைய போகிற மகிமைக்கு அதை ஒப்பிடமுடியாது என்று அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுகிறார்.

**ரோமர்** 8 - 18

**"ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன். "**

ஆகவே இந்த துன்பங்களும பாடுகளும வெகு சீக்கரத்தில் முடிவு பெற போகிறது.

11**கொரிந்தியர்** 4 - 17

**"மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவு**ஆகவே நிச்சயமாக நம்முடைய வாழ்க்கையில் இந்த உலகத்ததை விட்டு பிரிப்பதற்கு இந்த பாடுகள் மிக அவசியமாக இருக்கிறது. இது நம்மை பூரணராக்குவதற்கும், ஆவியின் கனிகளை உருவாக்குவதற்கும் மிக அவசியம். இதை அடையாளப்படுத்தும் விதமாக அங்கு ஒரு மரத்தை அந்த கசப்பான தண்ணீரில் போட்டவுடன் மதுரமாக மாறியது. இப்பிடியாக நம்முடைய இந்த கசப்பான அனுபவங்கள் நமக்கு பழக்கமான போது , நிச்சயமாக அது நமக்கு மதுரமான நித்திய ஜீவனை தரக்கூடியதாக இருக்கிறது.

ஆகவே இந்த கசப்பான கீரையை பழைய ஏற்பாட்டின் காலத்தில் வருடம் ஒரு முறை மட்டும் புசித்தார்கள் ஆனால் நாம் பூரணப்படும் வரைக்கும் தேவன் அனுமதிக்கும் இந்த கசப்பான சூழ்நிலைகளை தொடர்ந்து அனுபவிக்க வேண்டியவர்களாக இருக்கிறேஆகஇேராபோஜனத்திபங்கு பெறும் நாம அனைவரும் புளிப்புள்ள எல்லா காரியங்களையும் அகற்றி விட்டு , கசப்பான அனுபவங்களை சந்தோஷத்தோடு சகிப்போம்.

இவை அனைத்துக்கும் பிதாவாகிய தேவன் குமாரானாகிய கிறிஸ்துவின் மூலம் கிருபை செய்வாராக.

உமது வசனமே சத்தியம் உமது வசனமே சத்தியம் உமது வசனமே சத்தியம்

THE HERALD- Page 21-23
MAR/APR-2008

தமிழாக்கம்

**பாடம் - 4**

# தலைச்சன் சங்காரம் .

------------------------------------------------------------

**யாத்திராகமம்** 4 - 22

**அப்பொழுது நீ பார்வோனோடே சொல்லவேண்டியது என்னவென்றால் -- இஸ்ரயேல் என்னுடைய குமாரன் , என் சேஷ்டபுத்திரன்.**

யாக்கோபின் குடும்பம் எகிப்தில் குடியேறிய பின்பு அவர்கள் பலுகி பெருகினாாகள்.

**யாத்திராகமம்** 1 - 7 - 9

**இஸ்ரயேல புத்திரர் மிகுதியும பலுகி ஏராளமாய்ப பெருகிப் பலத்திருந்தார்கள் , தேசம அவர்களால் நிறைந்தது.**
**யோசேப்பை அறியாத புதிய ராஜன ஒருவன் , எகிபதில் தோன்றினான்.**
**அவன் தன் ஜனங்களை நோக்கி இதோ, இஸ்ரயேல் புத்திரராகிய ஜனங்கள் நம்மிலும் ஏராளமானவர்களும் ,பலத்தவர்களுமாய் இருக்கிறார்கள்.**

அவர்கள் பார்வோனுடைய பட்டணங்களை கட்டுவதற்கு எகிப்திய அதிகாரிகள் மூலம் நெருக்கப்பட்டார்கள். வேலைகளின் சுமை அதிகரித்த போதிலும் அவர்களுடைய இனப்பெருக்கமும் அதிகரித்தது. இதை அறிந்த பார்வோன் ஆண் பிள்ளைகளை கொல்லும் படி மருத்துவச்சிகளுக்கு கட்டளை கொடுத்தா. ஆனால் மருத்துவச்சிகள் அந்த கட்டளை நிராகரித்ததினால் எல்லா ஆண் பிள்ளைகளும் தப்பித்தார்கள்.

## மோசே

வேலியர்களின் குடும்பத்தில் ஒரு அழகான ஆண் பிள்ளை பிறந்தது, அதை மூன்று மாதம் அளவுககுஒளித்து வைத்தார்கள். அதற்கு பின்பு அந்த குழந்தை பார்வோன் குமாரத்தியால் வளர்க்கபபட்டது.அனைத்து காரியங்களும் கீள் வசனங்களில் தெளிவாக கொடுக்கப்பட்டிருக்கிறது. (**யாத்திராகமம்** 2 - 1 - 10)

இஸ்ரயேலை வழி நடத்தி, மீட்ட மோசேயின் வாழ்க்கையல் தேவன் செய்த அற்புதமான வேலைகளை பாருங்கள். புதிய ஏற்பாட்டில் ஸ்தேவான் , அவரை பற்றி தொளிவாக குறிப்பிடுகிறார். மோசேவை கருவில் அழிக்க திட்டமிட்டது, முதல் அவர் தன்னுடைய மக்களை காப்பாற்ற நினைத்ததால் அவர் மீதியானக்கு சென்றது வரை நமக்கு தெளிவாக குறிப்பிட்டிருக்கிறார். அதற்கு பின்பு ஸ்தேவான் சொல்லும் போது...........

**அப்போஸ்தலர்** 7 - 30 - 34

**நாற்பது வருஷம் சென்றபின்பு, சீனாய்மலையின் வனாநதரத்திலே கர்த்தருடைய தூதனானவர் முட்செடி எரிகிற அக்கினிஜுவாலையிலே அவனக்குத் தரிசனமானார்.**
**மோசே அந்தத் தரிசனத்தைக் கண்டு, அதிசயப்பட்டு, அதை உற்றுப்பார்க்கும்படி சமீபித்துவருகையில்,**
**நான் ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாகிய உன் பிதாக்களுடைய தேவனாயிருக்கிறேன் என்று கர்த்தர் திருவுளம் பற்றின சத்தம் அவனுக்கு உண்டாயிற்று அப்பொழுது மோசே நடுக்கமடைந்து, உற்றுபார்ககத் துணியாமலிருந்தான்.**
**பின்னும் கர்த்தர் அவனை நோக்கி . உன் பாதங்களிலிருக்கிற பாதரட்சைகளைக் கழற்றிப்போடு நீ நிற்கிற இடம பரிசுதத பூமியாயிருக்கிறது.**
**எகிப்திலிருக்கிற என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்க்கவே பார்த்து, அவர்கள் பெருமூச்சைக் கேட்டு, இவர்களை விடுவிக்கு-ம்படி இறங்கினேன்,ஆகையால் நீ வா , நான் உன்னை எகிப்திற்கு அனுப்புவேன் என்றார்.**

அதற்கு பின்பு தேவன மோசேயை எகிப்திற்கு போகும் படி கட்டடையிட்டார். (**யாத்திராகமம்** 4 - 19 - 23)

## விசேஷமான தலைச்சன் பிள்ளைகள்.

" என் ஜனத்தை அனுப்ப வேண்டும்" என்ற செய்தியை தேவன் மோசேயையும், ஆரோனின் வழியாக பார்வோனிடத்தில் அனுப்பினார். பார்வோன் மறுத்துவிட்டான், ஆகவே தேவன் வாதைகளால் எகிப்தியரை வாதித்தார். ஒவ்வொரு வாதையின் போது , பார்வோன் மக்களை அனுப்ப மனதாயிருந்தான், ஆனால் அந்த வாதை முடிவு அடைந்தவுடன் அவன் இருதயம் கடினப்பட்டு மக்களை அனுப்ப மறுத்தான். ஒவ்வொரு தலைச்சன் பிள்ளைகளையும் மிருகங்களின் தலையீற்றுகளையும், இரத்தம் தெளிக்கப்படாத வீட்டில் உள்ள அனைத்து தலைச்சன்களும் சங்கரிக்கப்படும் என்ற பத்தாவது வாதையின் போது அவன் அனைவரையும் துரத்தி விட்டான்.

"தலைச்சன் " என்று வார்த்தைக்கு எபிரேய மொழியில் , முதற்பலன் , அல்லது முதலில் தேர்ச்சி பெற்றது என்று பொருள்படும். யூதர்களின் முறைமையில் இந்த தலைச்சன் பிள்ளைகளுக்கு அநேக சிலாக்கியங்கள் உண்டு. இதை குறித்து விவரங்களை நாம் இந்த வசனங்கள் மூலம் வாசித்து அறியலாம்.

**உபாகமம்** 21 - 15 - 17

**இரண்டு மனைவிகளையுடைய ஒருவன் , ஒருத்தியின்மேல் விருப்பாயும் மற்றவள்மேல் வெறுப்பாயும் இருக்க, இருவரும் அவனுக்குப் பிள்ளளைளைப் பெற்றார்களேயாகில், முதற்பிறந்தவன் வெறுககப்பட்டவளின் புத்திரனானாலும் , தகப்பன் தனக்கு உண்டான ஆஸ்தியைத் தன் பிள்ளைகளுக்குப் பங்கிடும் நாளில் வெறுக்கப்பட்டவளிடத்தில் பிறந்த முதற்பேறானவனுக்கு சேஷடபுத்திர சுதந்தரத்தைக் கொடுக்கவேண்டுமேயல்லாமல், விரும்பப்பட்டவளிடத்தில் பிறந்தவனுக்குக் கொடுக்கலாகாது." "வெறுக்கப்பட்டவளிடத்தில் பிறந்தவனை சேஷ்டபுத்திரனாக அங்கிகரித்து , தனக்கு உண்டான ஆஸ்திகளிலெல்லாம் இரண்டு பங்கை அவனுக்குக் கொடுக்க வேண்டும், அவன் தன் தகப்பனுடைய முதற்பலன், சேஷ்டபுத்திர சுதந்தரம் அவனுக்கே உரியது.**

ஆகவே ஒரு குடும்பத்தில் தலைச்சன் பிள்ளையாக பிறந்தவன் தகப்பனுடைய சொத்தில் இரட்டிபான பங்கையும், குடும்பத்தில் ஒரு மேன்மையான இடத்தையும் பெறுகிறான். ஆனால் இந்த ஒரு சட்டம் அடிமை பெண்களின் பிள்ளைகளுக்கும், மறுமனையாட்டியின் பிள்ளைகளுக்கும் பொருந்தாது. எடுத்து காட்டாக ---

**நியாயாதிபதிகள்** 11 - 1, 2

**கிலேயாத்தியனான யெப்தா பலத்த பராக்கிரமசாலியாயிருந்தான், அவன் பரஸ்திரீயின் குமாரன், கிலெயாத் அவனைப பெற்றான். கிலெயாத்தின் மனைவியும் அவனுக்குக் குமாரர்களைப் பெற்றாள், அவன் மனைவி பெறற குமாரர் பெரியவர்களான பின்பு, அவர்கள் யெப்தாவை நோக்கி -- உனக்கு எங்கள் தகப்பன் வீட்டிலே சுதந்தரம் இல்லை, நீஅந்நிய ஸ்திரீயின் மகன் என்று சொல்லி அவனைத் துரத்தினார்கள்.**

இந்த ஒரு சட்டம யூதர்கள் மத்தியில் மிக முக்கியமாக கடை பிடிக்கப்பட்டது. தேவன் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குறுதிகளை சாராளின் குமாரன் ஈசாக்கின் மூலம் நிறைவேறியதைத் தவிர ஆகார மூலமாக நிறைவேற வில்லை என்று நாம் அறிவோம்.

**ஆதியாகமம்** 21 - 9 - 13

**பின்பு எகிப்துதேசத்தாளாகிய ஆகார் ஆபிரகாமுக்குப் பெற்ற குமாரன் பரியாசம் பண்ணுகிறதைச் சாரள் கணடு, ஆபிரகாமை நோக்கி -- இந்த அடிமைப்பெண்ணையும் அவள் மகனையும் புறம்பே தள்ளும், இந்த அடிமைப்பெண்ணின் மகன் என் குமாரனாகிய ஈசாக்கோடே சுதந்தரவாளியாயிருப்பதில்லை என்றாள். தன் மகனைக்குறித்துச் சொல்லப்பட்ட இந்தக் காரியம் ஆபிரகாமுக்கு மிகவும் துக்கமாயிருநததது. அப்பொழுது தேவன் ஆபிரகாமை நோக்கி - அந்தப் பிள்ளையையும் , உன் அடிமைப்பெண்ணையும் குறித்துச் சொல்லப்பட்டது உனக்குத் துக்கமாயிருக்கவேண்டாம் , ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும் , ஆதலால் சாராள் உனக்குச் சொல்வதெல்லாவற்றையும் கேள். அடிமைபபெண்ணின் மகனும் உன் வித்தாயிருக்கிறபடியால், அவனையும் ஒரு ஜாதியாக்குவேன் என்றார்.**

இதை குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லும் போது

**ரோமர்** 9 - 6 - 9

**தேவவசனம் அவமாய்ப் போயிறறென்று சொல்லக்கூடாது, ஏனென்றால் , இஸ்ரயேல் வம்சத்தா எல்லாரும் இஸ்ரயேலரல்லவே. அவர்கள் ஆபிரகாமின் சநததியாரானாலும் எல்லாரும் பிள்ளைகளல்லவே, ஈசாக்கினிடதததில் உன் சந்ததி விளங்கும் என்று சொல்லியிருக்கிறதே. அதெப்படியென்றால், மாம்சத்தின்படி பிள்ளைகளானவர்கள் தேவனுடைய பிள்ளைகளல்ல, வாக்குத்தத்தத்தின் படிபிள்ளைகளானவர்களேஅந்தச் சந்ததி என்றெண்ணப்படுகிறார்கள். அந்த வாக்குத்தத்தமான வார்த்தையாவது, குறித்து காலத்திலே வருவேன், அப்பொழுது சாராள் ஒரு குமாரனைப் பெறுவாள் என்பதே.**

# ஈசாக்கு

ஆதியாகமம் 22 ம் அதிகாரத்தில் ஆபிரகாம் தன்னுடைய குமாரனாகிய ஈசாக்கை மோரியா மலையின் மேல் பலி செலுத்தும் படி தேவன் அவரை சோதித்தார். (**ஆதியாகமம்** 22 - 10 - 18)

தேவன் ஆபிரகாமை பலி செலுத்த அனுமதிக்கவில்லை ஆனால் அவர் தன்னுடைய குமாரனை கல்வாரி சிலுவையில் பலி செலுத்த தயங்கவில்லை.

**யோவான்** 3 - 16

**தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்குஅவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.**

சாலோமோன் இயேசுவை குறித்து தீர்க்கதரிசனம் உரைக்கையில்

**நீதிமொழிகள்** 8 - 22 - 30

**கர்த்தர் தமது கிரியைகளுக்குமுன் பூர்வமுதல் என்னைத் தமது வழியின் ஆதியாகக் கொண்டிருந்தார். பூமி உண்டாகுமுன்னும், ஆதிமுதற் கொண்டும் அநாதியாய் நான் அபிஷேகம் பண்ணப்பட்டேன் ....நான் அவர் அருகே செல்லப்பிள்ளையாயிருந்தேன், நித்தம் அவருடைய மனமகிழ்சிசயாயிருந்து, எப்பொழுதும் அவர் சமுகத்தில களிகூர்ந்தேன்..**

லோகாஸ் மனுகுலத்தை மிகவும் நேசித்தார். , அவர்களை தேவனோடு இணைந்து சிருஷ்டித்ததை அவர் மிகவும் மகிழ்சி அடைந்தார். கடைசியாக அவர் தன்னுடைய ஜீவனையே இந்த மனுகுலத்திற்காக கொடுத்தார். (**ஆதியாகமம்** 1 - 26, 27) (**யோவான்** 1 - 1 - 3)

கிறிஸ்துவின் உண்மையான சபையை இரண்டு விதங்களில் நாம் காணலாம். ஆதி கால சபையில் இருந்து இவர்கள் முழுமையாக தங்களை பிதாவின் சித்ததிற்கு அற்பணித்து குமாரனுடைய விருப்பத்தின்படி நடந்து சுவிசேஷ யுகம் முடிவு வரைக்கும் நிலைத்திருப்பவர்கள் அல்லது தங்களுடைய ஜீவன் உள்ளவரைக்கும் நிலை நிற்பவர்களை சபை என்றும், அல்லது அல்லது இவர்கள் " தலைபேரான சபை "என்று அழைக்கிறோம். இவர்கள் பரலோகத்தில் பேர் எழுதினவர்களுமாக இருப்பார்கள். மற்றொரு வகையில் இந்த உலகத்தில் இயேசுவின் ஈடுபலியின் மேல் விசுவாசம் வைத்து ஒன்று சேர்ந்து தேவனை துதிக்கும் அனைவரையும் சபை மக்கள் என்று தான் அழைக்கப்படுகிறார்கள்.

எடுத்துகாட்டாக நாம் இன்னும் புது சிருஷ்டிகளாகுவதற்கு முன் இந்த மாம்ச சரீரத்தில் இருக்கும் போதே நம்மை தேவன் **புதுசிருஷ்டிகள** என்று அழைக்கிறார்.

தலைபேரான சர்வ சபை தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டு கிறிஸ்துவின் இரத்தத்தால் மீட்கப்பட்டு தேவனுக்கென்று நித்தியமாக தங்களை அர்ப்பனித்தவர்கள்.

எகிப்தில் நடந்த கடைசி வாதையில், அங்குள் எல்லா தலைச்சன் பிள்ளைகள் சங்கரிக்கப்பட்டது. (**யாத்திராகமம்** 11 - 1 - 8, 12 - 29 , 33)

எகிப்தியர்களுக்கு மீண்டும் எழும்ப முடியாத அளவுக்கு இது ஒரு மிக பெரிய அடியாக இருந்தது. அனைவரும் தங்களுடைய வீடுகளை விட்டு வெளியே வந்து ஓர் மூகமாக அலறி துக்கித்து அழுதார்கள். இது அவர்களுக்கு வழக்கமாக இருந்தது. அந்த நடுராத்திரியில பிதாவாகிய தேவன் அவர்களை எப்படியாக அடித்தார் என்பதை சற்று சிந்தித்து பாருங்கள்.

**தலைச்சன் பிள்ளைகளுக்கு பதிலாக லேவி கோத்திரம் அழைக்கப்பட்டது.**

இஸ்ரயேலில் யூதர்கள் குடும்பங்களில் மீட்கப்பட்ட தலைச்சன் பிள்ளைகள் ஆசாரிய பணிக்காக நியமிக்கப்பட்டார்கள். அனைத்து தலைச்சன் பிள்ளைகளுக்கு பதிலாக ஆசிப்பு கூடார வேலைகளை செய்ய தேவன் லேவி கோத்திரத்தை தெரிந்து எடுத்தார். (**எண்ணாகமம்** 3 - 5 - 13)

ஆகவே எல்லா கோத்திரங்களிலும் , மிருகங்களிலும தலையீற்றகளை பலியிடக்கூடாது என்று கட்டளையிட்டிருந்தார்.

**எண்ணாகமம்** 18 - 15

**மனிதரிலும் மிருகங்களிலும் அவர்கள் கர்த்தருக்கச் செலுத்தும் சமஸ்த பிராணிகளுக்கள்ளே கர்ப்பந்திறந்து பிறக்கும் யாவும் உனக்கு உரியதாயிருக்கும், ஆனாலும் மனிதரின் முதற்பேற்றை அகத்தியமாய் மீட்கவேண்டும், தீட்டான மிருகஜீவனின் தலையிற்றையும் மீட்க வேண்டம்.**

தலைச்சன் பிள்ளைகள் பிறந்தால் ஒரு மாதத்தில் ஐந்து செக்கல் வெள்ளியை ஆசாரியனிடம் கொடுத்து அவனை மீட்க வேண்டும். யூதர்கள் இந்நாள் வரைக்கும் இந்த மீட்பின் பிரமாணத்தை கடைபிடித்து வருகிறார்கள். ஒரு வீட்டில் ஆண் பிள்ளை பிறந்தால் அந்த பெற்றோர் சரியாக 30 ம் நாள் ஒரு ரபியையும் இன்னும் மற்ற உற்றார் , உறவினர்களையும விருந்துக்கு அழைப்பார்கள். அந்த ரபி தேவனுடைய நாமத்தில் ஆசீர்வதிப்பார். அந்த ரபிக்கு முன்பாக அந்த குழந்தையையும், ஐந்து செக்கல் வெள்ளியையும் வைப்பார்களால். அதை பார்த்து விட்டு அந்த தகப்பனிடம் உனக்கு இந்த குழந்தை வேண்டுமா? அல்லது ஐந்து செக்கல் வெள்ளி வேண்டுமா என்று கேட்பாராம்? அப்பொழுது அந்த தகப்பன் எனக்கு இந்த பிள்ளை வேணடும் என்று சொல்லும் போது அந்த ரபி அந்த வெள்ளி பணத்தை எடுத்து அந்த குழந்தையின் தலையை ஒரு சுற்று சுற்றி விட்டு, தேவனுடைய பிரமாணத்தின் படி , இந்த ஈடு பணத்திற்கு பதிலாக இந்த தலைச்சன் பிள்ளை உயிரோடு விட்டு விடப்படுகிறது என்ற சொல்லுவாராம்.

இந்த ஒரு முறைமையை பற்றி அப்போஸ்தலனாகிய பேதுரு குறிப்பிடும் போது......

1பேதுரு1- 18 - 25

உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அனுசரித்துவந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக் காகிய வெள்ளியினாலும பொன்னினாலும் மிட்கப்படாமல்,
குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக் குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே
அவர் உலகத்தோற்றத்திற்கு முன்னே குறிக்கப்பட்டவராயிருந்து நமது மூலமாய்த்தேவன் மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்காக இந்த கடைசி காலங்களில் வெளிப்பட்டார்.
உங்கள் விசுவாசமும் நம்பிக்கையும் தேவன் மேலிருக்கம்படி , அவரை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவருக்கு மகிமையைக் கொடுத்தார்.
ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக்கொண்டவர்களாயிருக்கிறபடியால் , சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்காய் அன்புகூருங்கள்.
அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிறகிறதம் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்கள்.
மாம்சமெல்லாம் புல்லைப்போலவும் , மனுஷருடைய மகிமையெல்லாம் புல்லின பூவைப்போலவுமிருக்ககிறது. புல் உலர்ந்தது, அதின் பூவும் உதிர்ந்தது.
கர்த்தருடைய வசனமோ என் றென்றைக்கும் நிலைத்திருக்கும் , உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிற வசனம் இதுவே.

அடிக்கப்பட்ட ஆட்டின் இரத்தத்தின் மூலம் தலைச்சன பிள்ளைகள் காக்கப்பட்டார்கள். அவர்கள் மூலமாக இஸ்ரயேல் மக்கள் முழுவதும் காக்கப்பட்டார்கள். அது போல இயேசுவின் இரத்தத்தின் மூலம் சபையாகிய தலைச்சன் பிள்ளைகள் காக்கப்படுவார்கள், இவர்கள் மூலமாக முழு உலகமும் ஆதாமின் பாவத்திலிருந்து காக்கபபடும்.

1கொரிந்தியர் 15 - 21 - 26

மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தொழுதலும் உண்டாயிற்று.
ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல், கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள. அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான், முதற்பலனவர் கிறிஸ்து, பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்டுவார்கள்.
அதன் பின்பு முடிவு உண்டாகும், அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்பக்கொடுப்பார்.
எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப்போடும்வரைக்கும், அவர் ஆளுகைசெய்யவேண்டியது.
பரிகரிக்கப்படும்கடைசிச் சத்துரு மரணம்.

**THE HERALD- Page 24 - 26** **தமிழாக்கம்**
**MAR/APR-2008** **பாடம் - 5**

# பாதரட்சை, கையில் பிடித்த தடி

---

**யாத்திராகமம்** 12 - 11

**அதைப் புசிக்கவேண்டிய விதமாவது, நீங்கள் உங்கள் அரைகளில் கச்சைகட்டிக்கொண்டும், உங்கள் கால்களில் பாதரட்சை தொடுத்துக்கொண்டும் அதைத் தீவிரமாய்ப் புசிக்கக்கடவீர்கள், அது கர்த்தருடைய பஸ்கா**

கையில் தடியோடும் , கால்களில் பாதரச்சையோடும் இஸ்ரயேல் மக்கள் முதல் பஸ்காவை மட்டும் அனுசரித்தார்கள். இந்த இரண்டும அவர்களுக்கு அதற்கு பின்பு தேவைப்படவில்லை ஏன் என்றால் அதற்கு பின்பு அவர்கள் அனுசரித்த எந்த பஸ்காவிலும் நெடுதூர பயணத்திற்கு அவர்கள் ஆயத்தப்படவில்லை. ஒரு கோனத்தில் பார்த்தால் அவர்கள் அனுசரித்த முதல் பஸ்கா அவர்களுக்கு வித்தியாசமாக இருந்திருக்கவேண்டும். அந்த நடு இராத்திரியில சங்காரதூதன் கடந்து சென்றிருப்பார், எல்லாரும் விடிந்தவுடன் எகிபத்தை விட்டும் அதன் அடிமைதனத்தை விட்டும் வெளியேறுவதற்கு ஆயத்தமாக இருந்திருப்பார்கள். அவர்கள் சுமக்க முடிந்த வரைக்கும் பொருட்களை சுமந்து சென்றிருப்பார்கள்.

**யாத்திராகமம்** 12 - 36

**கர்த்தர் ஜனங்களுக்கு எகிப்தியரின் கண்களில் தயவு கிடைக்கும் படி செய்ததினால் , கேட்டதை அவர்களுக்குக் கொடுத்தார்கள, இவ்விதமாய் அவர்கள் எகிப்தியாரைக் கொள்ளையிட்டார்கள்.**

யூதர்கள் நீண்ட அங்கிகளை அணிவது வழக்கம். அவர்கள் அன்றாட உபயோகிக்க இது பயனுள்ளதாக இருந்தது, ஆனால் பிரயாணத்திற்கு இது மிகவும் தடையாக இருக்கும். ஆகவே அந்த அங்கிகளை கச்சைக்குள் கட்டுமபடி கட்டளை கொடுத்தார்.இப்படியாக நாமும் நம்முடைய வனாந்திர பிரயாணத்தில் அப்போஸ்தலனாகிய பவுலகுறிப்பிடும் கச்சையை கட்டி கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

**எபேசியர்** 6 - 14

**சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும் , நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாவும்.**

எப்போதெல்லாம் உண்மை கிறிஸ்தவர்கள் சத்தியத்தை கச்சையாக கட்டுகிறார்களோ அப்போதேல்லாம் அவர்கள் தேவனுக்குள் நற்கிரியைகளை செய்ய ஆயத்தமாக இருக்கிறார்கள் என்று பொருள்படும்.

**எபிரெயர்** 13 - 21 ,

**இயேசுகிறிஸ்துவைக்கொண்டு தமக்கு முன்பாகப் பிரியமானதை உங்களில் நடப்பித்து, நீங்கள் தம்முடைய சித்தத்தின்படிசெய்யஉங்களை சகலவித நற்கிரியையிலும் சீர்பொருந்தினவர்களாக்குவாராக**

11**தீமோத்தேயு** 3 - 16, 17

**வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது, தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் எந்த நற்கிரியையுஞ் செய்யத்தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக,**
**அவைகள் உபதேசத்துக்கும் கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும் , நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது.**

# பாதரட்சை

எகிப்தியருடைய ஆதி கால பதிவுகளை பார்க்கும் போது, பாதரட்சை அல்லது கால அணிகளை எப்போதும் அணியமாட்டார்களாம், அவ்வப்போது விழாக்கள் நடக்கும் போது மட்டுமே அதை அணிவது வழக்கமாக இருந்ததாம். மேலும் அவைகளை வீட்டில் அணிய மாட்டார்களாம். ஆகவே வீட்டில் நுழையும் ஒவ்வொருவரும் கால்களை கழுவிகொண்டு வருவது வழக்கமாக இருந்தது. ஆனால் அந்த இராத்திரி வித்தியாசமான ஒரு கட்டளையை தேவன் கொடுத்திருந்தார். வீட்டிற்குள் புசிக்கும் போதே பாதரட்சைகளை அணியும்படி கட்டளை கொடுத்தார். இவர்கள் நீண்ட பிரயாணத்திற்கு ஆயத்தமானார்கள். ஆனால் அந்த ஒரு பிரயாணத்தை ஒருவரும் கற்பனை கூட செய்து பார்க்கவில்லை.

அவர்களுடைய பிரயாணங்களை ஆயத்தம் செய்வதற்கு பாத ரட்சைகளை அணியச் சொன்னார், அதே போல் ஆவிக்குரிய இஸ்ரயேலாகளும் எகிப்தாகிய இவ்வுலகத்தின் அடிமைதனத்தில் இருந்து புறப்படுவதற்கு நாம் நம்முடைய கால்களில் என்ன அணிய வேண்டும் என்பதை நம்முடைய அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுகிறார்.

**எபேசியர்** 6 - 15

**சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும்....**

நாம் நம்முடைய பிரயாணத்தில் இந்த பாதரட்சைகளை அணிந்தால் எந்த சூழ்நிலையிலும் , எப்படிப்பட்ட வழியாக இருந்தாலும் சோர்ந்து போகாமல் அலுப்பில்லாமல் செல்லலாம்.

புதிய ஏற்பாட்டில் இயேசு சொன்ன ஒரு உவமையில் ,( நல்ல குமாரன் , கெட்ட குமாரன் ) கெட்ட குமாரன் " தூர தேசத்தில் " இருந்து வர வேண்டியதாக இருந்தது. அவன் வெறும் கால்களுடன் வந்தான். வீடு திரும்பிய கெட்ட குமாரனுக்கு அவனுடைய தகப்பன் வஸ்திரத்தையும் , மோதிரத்தையும், பாதரட்சைகளையும அணிவித்தார்.

**லூக்கா** 15 - 22

**அப்பொழுது தகப்பன் தன் ஊழியக்காரரை நோக்கி -- நீங்கள் உயர்ந்த வஸ்திரத்தைக் கொண்டுவந்து, இவனுக்கு உடுத்தி, இவன் கைக்கு மோதிரத்தையும் கால்களுக்குப் பாதரட்சைகளையும் போடுங்கள்.**

கிபியோனியர்கள் நீண்ட பயணம் செய்ததால் தங்கள் பழமையான பாத ரட்சையை யோசுவாவிடம் காண்பித்தார்கள்.

**யோசுவா** 9 - 13

**நாங்கள் இந்தத் திராட்சரசத் துருத்திகளை நிரப்புகையில் புதிதாயிருந்தது, ஆனாலும் , இதோ, கிழிந்துபோயிற்று எங்கள் வஸ்திரங்களும் பாதரட்சைகளும் நெடுந்தூரமான பிரயாணத்தினாலே பழசாய்ப்போயிற்று என்றார்கள்.**

அகவே ஒரு பிரயாணத்தின் ஆயத்தத்தை பாதரட்சைகள் அடையாளப்படுத்துகிறது. ஆனால் 40 வருஷம் பயணத்தில் இஸ்ரயேல் மக்களின் பாத ரட்சை தேயவுமில்லை, வஸ்திரம் பழமையாக போகவும் இல்லை என்று நாம் அறிவோம்.

**உபாகமம்** 8 - 4

**இந்த நாற்பது வருஷமும் உன்மேலிருந்த வஸ்திரம் பழையதாய்ப் போகவும் இல்லை, உன கால் வீங்கவும் இல்லை.**

அதுபோல் நாமும் ஆவிக்குரிய பாதரட்சையை அணிந்தால் நாம் செல்லும் பயணம் எவ்வளவு தூரமாக இருந்தாலும் , நாம் பரம கானான் போய் சேரும் வரைக்கும் அது தேயவும் தேயாது , பழமையும் ஆகாது. ஆகவே நாம் இப்படிப்பட்ட பாதரட்சையை அணிந்து கானான் போய் சேருவதை நாம் உறுதிப்படுத்தி கொள்ளுவோம்.

# தடி

இன்றைக்கு வெகு சிலரே தடிகள் வைத்திருக்கிறார்கள். ஆனால் பரதேசிகளும், அந்நியர்களின் கையில் தடியில்லாமல் பயணம் செல்லமாட்டார்கள். ஆதிகாலத்தில் பிரயாணிகளுக்கு ஊன்று கோலாக மட்டும் அல்லாமல், வேதாகமத்தில் அநேக இடங்களில் இந்த தடியை பற்றி குறிப்பிடுகிறார். யாக்கோபின் கையில் உள்ள தடியை பற்றி முதலில் பார்க்கலாம்.

**ஆதியாகமம்** 32- 10

**அடியேனுக்கு தேவரீர் காண்பித்த எல்லா தயவுக்கும் எல்லா சத்தியத்துக்கும் நான் எவ்வளவேனும் பாத்திரன் அல்ல, நான் கோலும் கையுமாய் இந்த யோர்தானைக் கடந்துபோனேன். இப்பொழுது இவ்விரண்டு பரிவாரங்களையும் உடையவனானேன்.**

அவருடைய தந்தையாம் ஈசாக்கின் மூத்த மகனாகிய ஏசாவுக்கு கொடுக்க வேண்டிய ஆசீர்வாதங்களை தந்திரமாக யாக்கோபு தட்டிப்பரித்ததினால் , அவன் சகோதரனை பற்றிய பயத்தால் அந்த தடியோடு வீட்டை விட்டு ஓடினான் . ஆனால் திரும்பி வரும் போதோ ஒரு பெரிய சேனையுடன் வந்தான்.

அது போல் நம்முடைய வனாந்திர பிரயாணத்தில் நமக்கு தேவைப்படுகிறது இந்த கோல் மட்டுமே. யாக்கோபு மரிக்கும் முன் ஒரு விசேஷித்த ஆசீர்வாதத்தை அவருடைய குமாரர்கள் ஒவ்வொருவருக்கும் கொடுத்தார் அந்த நேரத்தில் யோசேப்பு தன்னுடைய குமாரர்களை ஆசீர்வதிக்க கொண்டுவந்தார்.

**ஆதியாகமம்** 48 - 1

**அதற்குப்பின்பு, உம்முடைய தகப்பனாருக்கு வருத்தமாயிருக்கிறது என்று யோசேப்புக்குச் சொல்லப்பட்டது. அப்பொழுது அவன் தன்னுடைய இரண்டு குமாரராகிய மனாசேயையும் எப்பிராயீமையும் தன்னோடேகூடக் கொண்டுபோனான்.**

யோசேப்பின் இரண்டு பிள்ளைகளாகிய மனாசேயும் , எப்பிராயீமும் யோசேப்புக்கு பதிலாக ஆசீர்வாதங்களை பெற்றார்கள்.யோசுவா கானான் தேசத்தை பங்கிடும் போது, இவர்களுக்கும் பங்கிடப்பட்டது. ஆக கோத்திரங்களில் யோசேப்பும் ,லேவிக்கும் பதிலாக மனாசே, எப்பிராயீமும் சேர்க்கப்பட்டார்கள்.

இந்த எப்பிராயீம் கோத்திரமானது மிகவும் வலுவடைந்தது. வட தேசத்தில் உள்ள 10 கோத்திரங்களை எப்பிராயீம் என்று அழைக்கப்பட்டது. இப்படியாக ஓசியா தீர்க்கதரிசன புஸ்தகத்தில் 32 முறைகள் எப்பிராயீம் என்று முழு இஸ்ரயேல் தேசத்தை அடையாளப்படுத்தப்பட்டது. புதிய ஏற்பாட்டில் யோசேப்பின் குமாரர்கள் பெற்ற ஆசீர்வர்த்தை பற்றிய ஒரு குறிப்பு உள்ளது.

**எபிரெயர்** 11 - 21

**விசுவாசத்தினாலே யோசேப்பு இஸ்ரயேல் புத்திரர் எகிப்து தேசத்தை விட்டுப் புறப்படுவார்களென்பதைப்பற்றித் தன் அந்தியகாலத்தில பேசி, தன் எலும்புகளைக்குறித்துக் கட்டளைகொடுத்தான். "**

இதில் யாக்கோபு அந்த கோலின் மேல் சாய்ந்து தேவனை தொழுதுகொண்டார் என்று வாசிக்கிறோம். யாக்கோபு தொழுது கொண்ட விதத்தை நாம் பழைய ஏற்பாட்டிலும் வாசிக்கலாம்.

**ஆதியாகமம்** 47 - 31

**அப்பொழுது அவன் -- எனக்கு ஆணையிட்டுக்கொடு என்றான், அவனுக்கு ஆணையிட்டுக்கொடுத்தான் . அப்பொழுது இஸ்ரயேல் கட்டிலின் தலைமாட்டிலே சாய்ந்து தொழுதுகொண்டான்.**

இந்த வசனத்தில் **கட்டிலின் தலைமாட்டில** என்ற வாசிக்கிறோம். ஆனால் இது ஒரு தவறான மொழி பெயர்ப்பு என்று அநேக வேத வல்லுனர்கள் கருதுகிறார்கள். அக்காலததில் கட்டிலுகளுக்கு எந்த விதமான அனைப்பு அல்லது பக்கங்கள் இல்லை. இன்றைக்கு நாம் காணக்கூடிய நீண்ட மேஜைகள் போல் இருந்திருக்க வேண்டும். ஆகவே **கட்டிலின் தலை மாட்டில்** என்ற வார்த்தைக்கு பதிலாக " தன கோலின் மேல் சாய்ந்த " என்று மொழி பெயர்த்திருக்க வேண்டும்.

கடைசி முற்பிதாவாகிய யாக்கோபின் அனைத்து பிள்ளைகளும் கூடியிருக்கும் போது அவர் பிள்ளைகளை ஆசீர்வதித்தார். அவர் யோசேப்பின் பிள்ளைகளை ஆசீர்வதிக்கும் போது நிச்சயமாக தலைச்சன் பிள்ளைகளுக்கு கொடுக்க வேண்டிய இரட்டிப்பான ஆசீர்வாதங்களை கொடுததிருக்க வேண்டும்.

**உபாகமம்** 21 - 17

**வெறுக்கப்பட்டவளிடத்தில் பிறந்தவனை சேஷ்டபுத்திரனாக அங்கிகரித்து, தனக்கு உண்டான ஆஸ்திகளிலெல்லாம் இரண்டு பங்கை அவனுக்குக் கொடுக்கவேண்டும். அவன் தன் தகப்பனுடைய முதற்பலன், சேஷ்டபுத்திர சுதந்தரம் அவனுக்கே உரியது.**

யாக்கோபு யோசேப்பின் பிள்ளைகளை தன்னுடைய பிள்ளைகளாக ஏற்று கொண்டதால் யோசேப்புக்கு இரட்டிப்பான ஆசீர்வாதங்களை கொடுத்தார்.

கையில் தடியோடு பயணம் செய்வது அந்நியருக்கும் பரதேசிகளுக்கும் ஒரு அடையாளமாக இருக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல்இந்த வார்த்தைகளை பழைய ஏற்பாட்டின் நீதிமான்களுக்கு பயன்படுத்தியிருக்கிறார்.

**எபிரெயர்** 11 - 13

........ **பூமியின்மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு , விசுவாசத்தோடே மரித்தார்கள்.**

புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலனாகிய பேதுரு உண்மையுள்ள கிறிஸ்தவர்களுக்கு இந்த சொற்களை பயன்ப்படுத்துகிறார்.

1**பேதுரு** 2 - 11

**பிரியமானவர்களே, அந்நியர்களும் பரதேசிகளுமாயிருக்கிற நீங்கள் ஆத்துமாவுக்கு விரோதமாய்ப் போர்செய்கிற மாம்ச இச்சைகளை விட்டு விலகி...**

அதே போல் நம்முடைய மூத்த சகோதரனாகிய ரசல் குறிப்படும் போது ........

"சுவிசேஷ யுகத்தில் விசுவாச வீட்டாராக ஆட்டுக்குட்டியோடு பங்கெடுக்கும் ஆவிக்குரிய முதல் பேரானவர்களை அந்நியரும், பரதேசிகளுமாக இருக்கவேண்டும் என்கிறார். அவர்கள் பாவம் மரணம் என்ற சிறையை உணர்ந்து அதிலிருந்து தங்களை விடுவித்து கொள்ள ஆண்டவரால் வழிநடத்தப்பட்டு தேவனுடைய புத்திரர்களாக சுயாதீனம் பெறுகிறார்கள்" என்கிறார்.

இயேசு தன்னுடைய பண்ணிரெண்டு அப்போஸ்தலர்களை அனுப்பும் போது மூதரட்சையும் தடியும் எடுத்து செல்லும்படி சொன்னார். உங்கள் பயணத்திற்கு வேறு எதும் எடுத்து செல்ல வேண்டாம்........

**மாற்கு** 6 - 8, 9

**வழிக்குப் பையையாகிலும், அப்பத்தையாகிலும்,கச்சையில் காசையாகிலும் எடுத்துக்கொண்டுபோகாமல், ஒரு தடியை மாத்திரம் எடுததுக்கொண்டுபோகவும்,**

**பாதரட்சைகளைப் போட்டுக்கொண்டு போகவும் , இரண்டு அங்கிகளைத் தரியாதிருக்கவும் கட்டளையிட்டார்.**

அவர்கள் இயேசு சொல்லியபடி சென்ற போது எந்த காரியமும் அவர்களுக்கு குறைவுபடவில்லை.

**லூக்கா** 22 - 35

**பின்னும் அவர் அவர்களை நோக்கி -- நான் உங்களைப் பணப்பையும் சாமான்பையும் பாதரட்சைகளும் இல்லாமல் அனுப்பினபோது, ஏதாகிலும் உங்களுக்குக் குறைவாயிருந்ததா என்றார். அவர்கள் ஒன்றும் குறைவாயிருந்ததில்லை என்றார்கள்.**

ஆதிகால சபையில் சீஷர்கள் அனைவரும் அந்நியரும் பரதேசிகளுமாகவே வாழ்ந்து மரித்தார்கள். இந்த பயணத்தை நாமும் மேற் கொள்ள தடியோடும், கால்களில் பாதரட்சையோடும் பரம கானான் செல்ல கடமைபட்டிருக்கிறோம். இப்படி பிரயாணம் செய்பவர்களுக்கு தேவன் மகிமையான காரியங்களை ஆயத்தம் செய்திருக்கிறார். இரட்சிபின் அதிபதியோடு அவர்களை ராஜாக்களாகவும், ஆசாரியரகளாகவும் தேவன் இவர்களை முடி சூட்ட போகிறார்.

"ஆண்டன் பிரே" என்ற சகோதரன் இந்த தடியை பற்றி குறிப்பிடும் போது, " பயணம் செய்பவர்களுக்கு கையில் இருக்கும் ஒரு தடி ஊன்று கோலாகவும், வேண்டும் என்றால் சாய்ந்து கொள்வதற்கு ஒரு சாய்மானமாகவும் பயன்படுத்தப்பட்டது. ஆனால் ஆவிக்குரிய இஸ்ரயேலயர்களாகிய நமக்கு ஒரு விசேஷிமான காரியத்தை வலியுறுத்துகிறது. நாம் வாசிக்கும் வேத வசனங்கள், நாம் அவ்வபோது பின்னிட்டு விழும் போது நம்மை தாங்குகிறது. ஆகவே இந்த தேவ வசனங்களாகிய தடி நம்மை தாங்குகிறது, நம்மை தேற்றுகிறது, நம்மை தேவனுடைய சித்ததை செய்வதற்கு ஊக்குவிக்கிறது. அடுத்ததாக கோல் நமக்கு முன் உள்ள வழியை ஆயத்தம் செயவது போல வசனங்களும் நம்முடைய பாதையை செவ்வைப்படுத்துகிறது. " என்கிறார்.

## நிஜமான தலை பேரானவர்கள்

இரத்தத்தின் கீழ் இருந்த அனைத்து தலைச்சன் பிள்ளைகளும் அந்த பஸ்காவின் இரவிலே காக்கப்பட்டார்கள். இவர்களை தேவன் விலையேறப் பெற்றவர்களாக எண்ணினார். ஒவ்வொரு தனிப்பட்ட தலைச்சன் பிள்ளைகளுக்கு பதிலாக தேவன் லேவி கோத்திரத்தை முழுமையாக தெரிந்து கொண்டார்.

**யாத்திராகமம்** 13, 2, **எண்ணாகமம்** 3 - 12

**இஸ்ரயேல் புத்திரருக்குள் மனிதரிலும் மிருகஜீவன்களிலும் கர்ப்பந்திற்ந்து பிறக்கிற முதற்பேறனைத்தையும எனக்குப் பரிசுத்தப்படுத்து, அது என்னுடையது என்றார்.**
**இஸ்ரயேல் புத்திரரில் கர்ப்பந்திறந்து பிறக்கிற முதற்பேறான யாவுக்கும் பதிலாக , நான் லேவியரை இஸ்ரயேல் புத்திரரிலிருந்து எடுத்துக்கொண்டேன், அவர்கள என்னுடையவர்களாயிருக்கிறார்கள்.**

இஸ்ரயேல் மக்களுக்கு தேசத்தை பங்கிடும் போது லேவி கோத்திரத்திற்கு எதுவும் கொடுக்கப்பட வில்லை.

**எண்ணாகமம்** 18 - 23

**லேவியர்மாத்திரம் ஆசரிப்புக்கூடாரத்துக்கடுத்த வேலைகளைச் செய்யவேண்டும். அவர்கள் தங்கள் அக்கிரமத்தைச் சுமப்பார்கள். இஸ்ரயேல் புத்திரர் நடுவே அவர்களுக்குச் சுதந்தரம் இல்லை என்பது உங்கள் தலைமுறைதோறும் நித்திய கட்டளையாயிருக்கும்.**

கிறிஸ்துவின் வருங்கால ஆட்சியின் காலத்தில் உண்மையான கிறிஸ்தவர்களுக்கு பூமிக்குரிய ஆசீர்வாதம் கொடுக்கப்படாமல் பரலோக ஆசீர்வாதத்தை பெறப்போகிறதை அடையாளப்படுத்துகிறது இந்த உண்மையான கிறிஸ்தவர்களை அக்காலத்து தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட " **லேவியர்கள**" அடையாளப்படுத்தினார்கள்.

இப்படிப்பட்ட கிறிஸ்தவர்கள் தங்கள் அறைகளை கட்டி கொண்டு கையில் தடியை பிடித்துக் கொண்டு பிரயாணத்தின், விவரம் அறியாமல் நீண்ட பயணத்தை மேற்கொள்ளுகிறார்கள். இந்த பயணத்திற்கு விசுவாசம் மட்டுமே அடிப்படையாக இருக்கிறது. இந்த பிரயாணத்தை மேற்கொள்கிறவர்கள் பழைய வாழ்க்கை, வீடு, நிலம் அனைத்தையும் விட்டு விட்டுச் செல்ல வேண்டும். அனைத்தையும் தேவனுடைய பலி பீடத்தின் மேல் செலுத்திவிட வேண்டும். ஆனால பழமையான இஸ்ரயேல் மக்கள் தங்களுடைய அனைத்தையும் விட்டு விட்டுவாக்குத்தத்தம் செய்த தேசத்தை சுதந்தரிதது கொள்ள எகிப்தை விட்டு புறப்பட்டார்கள் . இப்படியாக தேவனுடைய உண்மையான " தலைச்சன் பிள்ளைகள் " இந்த உலகத்திற்குறிய சகலத்தையும் விட்டு விட்டு பரலோக ஆசீர்வாதங்களை பெற புறப்பட வேண்டும்.

**யாத்திராகமம்** 12 - 11

**அதைப் புசிக்கவேண்டிய விதமாவது, நீங்கள் உங்கள் அரைகளில் கச்சை கட்டிக்கொண்டும், உங்கள் கால்களில் பாதரட்சை தொடுத்துக்கொண்டும், உங்கள் கையில் தடி பிடித்துக்கொண்டும் அதைத் தீவிரமாய்ப் புசிக்கக்கடவீர்கள் அது கர்த்தருடைய பஸ்கா.**

" **இது கர்த்தரின் பஸ்கா** "என்ற வார்த்தைகளோடு இந்த வசனம் முடிவு அடைகிறது. நம்முடைய யேகோவா தேவன் தாமே அவருடைய பஸ்கா என்ற இங்கு குறிப்பிடுகிறார். இதை நாம் சுவிசேஷ யுகத்தில் பொருத்தி பார்க்கும் போது எவ்வளவு நேர்த்தியாக பொருந்துகிறது பாருங்கள். நிச்சயமாக சுவிசேஷ யுகத்தின் " **முதல் பேரானாவர்கள**" , தேவனுடைய விலையேறப்பெற்ற பொக்கிஷமாக இருக்கிறார்கள். ஆகவே இந்த மக்களுக்காக தான் தேவன் இந்த பஸ்காவை அடையாளமாக கொடுத்தார்.

**யாத்திராகமம்** 19 - 5

**இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக் கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்..**
**இவர்கள் ராஜரீகமான ஆசாரிய சந்ததியாராகவும் பரிசுத்த ஜாதியாகவும் இருக்கிறார்கள்.**

**1பேதுரு** 2 - 9

**நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும் , ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும் , அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்.**

இந்த ஒரு காரியத்தை இயேசுவும் குறிப்பிடுகிறார்.

**யோவான்** 16 - 27

**நீங்கள் என்னைச் சிநேகித்து, நான் தேவனிடத்திலிருந்து புறப்பட்டுவந்தேனென்று விசுவாசிக்கிறபடியினால் பிதா தாமே உங்களைச் சிநேகிக்கிறார்.**

20 வது வருடத்திற்கு முன்பாக வெறும் தடியோடு , சென்றவர் , பெரிய குடும்பத்தோடும், அநேக வேலைக்காரர்களோடும் மந்தைகளோடும், வீடு திரும்பினார், ஏசா 400 ஆட்களோடு வருகிறான் என்ற அறிந்தவுடன் அவன் மிகவும் பயந்தான். இரவு முழுவதும தூதனோடு போராடி ஆசீர்வதத்தை பெற்றதினால் தேவன் அவரை கைவிட வில்லை என்று அறிந்து கொண்டான். வெறும் தடியோடு புறப்பட்ட யாக்கோபை தேவன் கை விடாதது போல, இந்த வனாந்திர பிரயாணத்தில் அவருடைய வசனங்களை மட்டும் கையில் எடுத்து செல்லும் நம்மையும் நிச்சயமாக கை விட மாட்டார்.

**எபிரெயர்** 13 - 5, 6

**நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள் , நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்ற அவர் சொல்லியிருக்கிறாரே, அதினாலே நாம் தைரியங்கொண்டு கர்த்தர் எனக்குச் சகாயர் , நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்னசெய்வான் என்ற சொல்லலாமே........."**

## "உமது கோலும் தடியும் என்னை தேற்றும். "

தாவீதின் மந்தைகளுக்கு அந்த தடி ஆறுதல் அளித்தது. இது அவனுடைய வலது கரத்தின் அரவணைப்பாக இருந்தது. அது போல் நமக்கு தேவனுடைய வார்த்தைகள் ஆறுதல் அளிக்கிறது. இந்த வார்த்தைகளை நாம் விசுவாசித்தால் நிச்சயமாக அவருடைய கோல் நம்மை தேற்றும் , தேவனுடைய வார்த்தைகள் மிகத் தெளிவாகவும், அதிகாரப் பூர்வமாகவும், தவறுகளை திருத்துவதில் வல்லமையுள்ள ஆயுதமாகவும் , இருக்கிறது.

1**தீமேத்தேயு** 6 - 20

**.....உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்டதை நீ காத்துக்கொண்டு சீர்கேடான வீண்பேச்சுகளுக்கும் , ஞானமென்று பொய்யாய் பேர் பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதங்ளுக்கும் விலகு.**

தேவனுடைய வார்த்தைகள் நம்முடைய வாழ்க்கையில் இருக்கும் குழப்பங்களை அடியோடு அகற்றிவிடும். சமாதானத்தையும் தன் நம்பிக்கையும் கொடுக்கும் ➔" **உமது தடி என்னை தேற்றும்** "

மேய்ப்பர்கள் ஆடுகளை அந்த கோலினால் தடவி பார்த்து காயங்கள் ஏதும் இருக்கிறதா என்று சோதிக்கவும் பயனபடுத்தப்படுகிறது. மாலை நேரத்தில் வாசல் வழியாக நுழையும் ஆடுகளை கோலின் மெலிதான பக்கத்தை பயன்படுத்தி காயங்களை ஒரு நல்ல மேய்ப்பன் கண்கானித்து காயங்களை கட்டுவான். அந்த ஆடுகளுக்கு இது மிகுந்த சந்தோஷத்தை தரக்கூடியதாக இருக்கிறது.

இப்படியாக நாமும் வாசலாகிய இயேசுவின் வழியாக உள்ளே பிரவேசித்தால் , அவர் நம்மை காயம் கட்டுபவராக இருக்கிறார். இப்படிப்படட ஒரு சந்தோஷத்தை நாம் நம்முடைய மேய்ப்பரிடம் பெற்றுகொள்ளுவோமா ?

**சங்கீதம்** 139 - 23, 24

**தேவனே, என்னை ஆராய்ந்து , என் இருதயத்தை அறிந்துகொள்ளும் , என்னைச் சோதித்து என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும்.**
**வேதனை உணடாககும் வழி என்னிடத்தில் உண்டோ என்ற பார்த்து நித்திய வழியிலே என்னை நடத்தும்.**

நாம் நம்மை தேவனிடத்தில் ஒப்புகொடுத்தால் அவர் நம்மை ஆராய்ந்து நாம் திருந்த வேண்டிய காரியங்கள் அல்லது குணப்பட வேண்டிய காரியங்களை அவர் நமக்கு வெளிப்படுத்துவார்.

தடி என்பது மந்தையை வழிநடத்தவும், கூட்டி சேர்க்கவும் பயன்படுத்த உதவுகிறது. அவர்கள் தவறான பாதையில் செல்லும் போது அந்த தடியின் நுனியை சற்று அழுத்தி மேய்ப்பனானவர் சரியான வழியில் நடத்துவார்.

நாம் பெற்ற தேவனுடைய வார்த்தைகள் மூலமாக நம்முடைய மேய்ப்பரோடு தொடர்பு வைத்துக்கொள்ள முடிகிறது. இப்படிப்பட்ட ஒரு ஐக்கியமும் நெருக்கமும் நம் ஒவ்வொருவருடைய இருதையத்தையும் நிரப்ப வேண்டும். தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் வைக்கும் ஒவ்வொரு அடிகளிலும் தேவனுடைய அரவனைப்பையும், வழிநடத்துதலையும் பாதுகாப்பையும் உணரவேண்டும்.

THE HERALD – Page27-30
MAR/APR-2008

தமிழாக்கம்

**பாடம் - 6**

தேவனுடைய தெய்வீக சட்டம் தளர்த்தப்படுகிறது.

# இரண்டாம் மாதம் அனுசரிக்கப்பட்ட பஸ்கா ------

---

1கொரிந்தியர் 11 - 27 - 29

**இப்படியிருக்க , எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான்.**

**எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து , இந்தப் பாத்திரததில் பானம் பண்ணக்கடவன்.**

**என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம்பண்ணுகிறவன் கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானிதது அறியாததினால் , தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான்.**

எந்த சட்டமும் எல்லா சூழ்நிலையிலும் , அனைவராலும் முழுமையாக நிறைவேற்றப்படுவதற்கு சில காரியங்கள் வளைந்து கொடுக்கப்பட வேண்டியதாக இருக்கிறது. சீனாய மலையில் மோசேயினால் கொடுக்கப்பட்ட சட்டங்களில் கொலைக்காரனுக்கு ஆதரவாக கொடுக்கப்பட்ட அடைக்கல பட்டணம் இதற்கு ஒரு சரியான எடுத்து காட்டாக இருக்கிறது. அடுத்து நாம் இப்போது பார்க்கும் பஸ்காவும் ஒரு எடுத்து காட்டாக இருக்கிறது.

**எண்ணாகமம்** 9 - 1 - 5

**அவர்கள் எகிப்துதேசத்திலிருந்து புறப்பட்ட இரண்டாம் வருஷம் முதலாம் மாதத்தில் கர்த்தர் சீனாய் வனாந்தரத்தில் மோசேயை நோக்கி**

**-- குறித்த காலத்தில் இஸ்ரயேல் புத்திரர் பஸ்காவை ஆசரிக்கக்கடவர்கள்.**

**இந்த மாதம் பதினாலாந்தேதி அந்தி நேரமான வேளையாகிய குறித்த காலத்தில் அதை ஆசரிக்கக்கடவீர்கள். அதற்குரிய எல்லாக் கட்டளையின்படியேயும் முறைமைகளின்படியேயும் அதை ஆசரிக்கக்கடவீர்கள் என்றார்.**

**அப்படியே பஸ்காவை ஆசரிக்கும்படி மோசே இஸ்ரயேல புத்திரருக்குக் கட்டளையிட்டான். அதினால் முதலாம் மாதம் பதினான்காம் தேதி அந்திநேரமான வேளையில் சீனாய் வனாந்தரத்தில் பஸ்காவை ஆசரித்தார்கள் . கர்த்தர் மோசேககுக் கட்டளையிட்டபடியெல்லாம் இஸ்ரயேல் புத்திரர் செய்தார்கள.**

எகிப்தில் இருந்து புறப்பட்டு ஒரு வருடம் காலம் ஆனது. அது அவர்களுக்கு ஒரு விசேஷமான அற்புதங்களின் வருடமாக இருந்தது. ( சிவந்த சமுத்திரம் , பிழந்தது, கன்மலையிருந்து தண்ணீர் புறப்பட்டது)

வனாந்திரத்தில் அலைந்த எபிரேயர்களுக்கு அவர்களுடைய கீழ்ப்படியாமையும், அவிசுவாசமும் அவர்கள் சேர வேண்டிய இலக்கை எப்போதுமே தூரமாக்கிகொண்டிருந்தது. அதே வருடத்தில் அவர்கள் விசுவாதையும் இழந்தார்கள். ( எகிப்தியருடைய பழக்கத்தில் இருந்து வந்த விக்கிரகாராதனையின் வழியாக பொன் கன்றுக்குட்டியை செய்தார்கள். ) அந்த வருடத்தில் மோசே இரண்டு கற்பலகைகளோடு மலையை விட்டு இறங்கினார்.

நிச்சயமாக எகிப்தின் அடிமைத்தனத்தில் இருந்தும் விசாரணைகாரர்களிடம் இருந்தும் கிடைத்த விடுதலையையும் நினைக்கவேண்டியவர்களாக இருந்தார்கள். ஆகவே யேகோவா தேவன் இதை நினைவுகூரும்படி பஸ்காவை நியமித்தார். இதை வருடம் தோரும் ஆசரிக்கும்படி கட்டளையிட்டார்.

அதற்கு பின்பு எந்த விதமான விவரங்களும் பதிவு செய்யப்படவில்லை.
அதற்கு பின்பு வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்தை சேர்ந்தவுடன் புசித்தார்கள்

**யோசுவா** 5 - 10

**இஸ்ரயேல் புத்திரர் கில்காலில் பாளயமிறங்கியிருந்து, மாதத்தின் பதினாலாம் தேதி அந்திநேரத்திலே எரிகோவின் சமனான வெளிகளிலே பஸ்காவை ஆசரித்தார்கள்.**

அங்கு பலியிடப்பட்ட ஆடு நம்முடைய ஆண்டவராம் இயேசுவின் பலியை அடையாளப்படுத்தியது. அங்கு எகிப்திலிருநது விடுவித்தது போல இவர் மனுக்குலத்தை பாவமும், மரணமுமாகிய விசாரணைக்காரர்களிடமிருந்து விடுவித்தவர்.

இப்படியாக இஸ்ரயேலர்கள் தங்களுடைய முதல் பஸ்காவின் நினைவுகூருதலின் நாளை வனாந்திரத்தில் அனுசரித்தார்கள்.

அதே போல் நாமும் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து 2000 வருடங்களுக்கு முன் செலுத்தின அந்த பலியை நாமும் வருடம் தோரும் நினைவு கூர வேண்டும்.

**எண்ணாகமம்** 9 - 6, 7

**அந்நாளில் சிலர் மனித பிரேதத்தினால் தீட்டுப்பட்டபடியினால் பஸ்காவை ஆசரிக்கத்தகாதவர்களாயிருந்தார்கள். அவர்கள் அந்நாளிலே மோசேக்கும் ஆரோனுக்கும் முன்பாக வந்து , நாங்கள் மனித பிரேதத்தினால் தீட்டுப்பட்டவர்கள் , குறித்த காலத்தில் இஸ்ரயேல் புத்திரரோடேகூடக் கர்த்தருக்குக் காணிக்கையைச் செலுத்தாதபடிக்கு ,நாங்கள விலக்கப்பட்டிருக்கவேண்டியது என்ன எனறார்கள்.**

உண்மையான இஸ்ரயேல் மக்கள் சிலருக்கு குறித்த காலத்தில் பஸ்காவை அனுசரிப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடும். நீசான் மாதம் 7 ம் தேதியிலிருந்து 14ம் தேதிக்குள் அவர்கள் பிரேதங்களால் தீட்டுப்பட்டுவிட்டார்களானால் அவர்கள் தங்களை சுத்திகரிக்க வேண்டியவர்களாக இருந்தார்கள். ஏழு நாட்களுக்கு அவர்கள் தீட்டுப்பட்டவராக இருப்பார்கள்.

**எண்ணாகமம்** 5 -2, 6 - 9, **லேவியராகமம்** 7 - 20 , 21, 21 - 1

**குஷ்டரோகிகள் யாவரையும் , பிரமியமுள்ளவர்கள் யாவரையும் சவத்தினால் தீட்டுப்பட்டவர்கள் யாவரையும் பாளயத்திலிருந்து விலக்கிவிட இஸ்ரயேல் புத்திரருக்குக் கட்டளையிடு...**
**அவனண்டையிலே ஒருவன் சடுதியில் மரணமடைந்ததினால் நசரேய விரதமுள்ள அவனுடைய தலைதீட்டுப்பட்டதேயாகில் , அவன் தன் சுத்திகரிப்பின் நாளாகிய ஏழாம் நாளில் தன் தலைமயிரைச் சிரைத்துக்கொண்டு, ...**
**ஒருவன் தீட்டுள்ளவனாயிருக்கையில் கர்த்தருடைய சமாதானபலியின் மாம்சத்தைப் புசித்தால் , அவன் தன் ஜனத்தாரில் இராதபடிக்கு அறுப்புண்டுபோவான்.**

இப்படிப்பட்ட சுழ்நிலையில் இருந்தவர்கள் பஸ்காவை அனுசரிக்க இயலாமல் போயிற்று. இந்த ஒரு பிரச்சனையை அவர்கள் மோசே, ஆரோனிடமும் கொண்டு வந்தார்கள்.

"தீட்டுள்ளவன்" என்பது பிரேதத்தை அடக்கம் செய்பவர்களும் அதற்கு சம்பந்தப்பட்ட வேலைகளை செய்பவர்களையும் குறிக்கும் . மோசேயின் ஒன்று விட்ட சகோதரர்களான மீசயேலும் , எல்சாபானும் , நாதாபு, அபியூ என்பவர்களின் சீரங்கள் அடக்கம் செய்ததாக வாசிக்கிறோம். இவர்கள் அந்நிய அக்கினியை கொண்டு வந்து தூபப்பீடத்தின் மேல் தூபம் காட்டினதற்காக தேவனால் அடிக்கப்பட்டவர்கள். இவர்களை அடக்கம் செய்த இருவராலும் பஸ்காவை புசிக்க முடியாமல போனது . இவர்கள் புசிக்கவேண்டும் என்று ஆயத்தமாக இருந்தாலும் சூழ்நிலை இவர்களை தடுத்தது. இதை மோசேயடம் அறிவித்தார்கள்.

**லேவியராகமம்** 10 - 1 - 5

**பின்பு ஆரோனின் குமாரராகிய நாதாபும் அபியூவும் தன்தன் தூபகலசத்தை எடுத்து, அவைகளில் அக்கினியையும் அதின்மேல் தூபவர்க்கத்தையும் போட்டு, கர்த்தர் தங்களுக்குக் கட்டளையிடாத அந்நிய அக்கினியை அவருடைய சந்நிதியில் கொண்டுவந்தார்கள்.**
**அப்பொழுது அக்கினி கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டு, அவர்களைப் பட்சித்தது, அவர்கள் கர்ததருடைய சந்நிதியில் செத்தார்கள்.**
**அப்பொழுது மோசே ஆரோனை நோக்கி - என்னிடத்தில சேருகிறவர்களால் நான் பரிசுத்தம் பண்ணப்பட்டு சகல ஜனங்களுக்கு முன்பாக நான் மகிமைப்படுவேன் என்ற கர்த்தர் சொன்னது இதுதான் என்றான், ஆரோன் பேசாதிருந்தான்.**
**பின்பு மோசே ஆரோனின் சிறிய தகப்பனான ஊசியேலின் குமாரராகிய மீசயேலையும் எல்சாபானையும் அழைத்து நீங்கள் கிட்டவந்து, உங்கள சகோதரரைப் பரிசுத்த ஸ்தலத்துக்கு முன்னின்று எடுத்து, பாளயத்துக்குப் பறம்பே கொண்டுபோங்கள் என்றான்.**
**மோசே சொன்னபடி அவர்கள் கிட்டவந்து,அவர்களை அவர்கள் உடுத்தியிருந்த சட்டைகளோடும் எடுத்துப் பாளயத்துககுப் புறம்பே கொண்டுபோனார்கள்.**

## இரண்டாம மாதம் அனுசரிக்கப்பட்ட பஸ்கா ----

**எண்ணாகமம்** 9 - 8 - 12

**மோசே அவர்களை நோக்கி - பொறுங்கள் கர்த்தர் உங்களைக்குறித்துக் கட்டளையிடுவது என்ன என்று கேட்பேன் என்றான்.**
**கர்த்தர் மோசேயை நோக்கி --**
**நீ இஸ்ரயேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால் - உங்களிலாகிலும் உங்கள் சந்ததியாரிலாகிலும் ஒருவன் பிரேதத்தினால் தீட்டுப்பட்டாலும், பிரயாணமாய்த் தூரம்போயிருந்தாலும் கர்த்தருககுப் பஸ்காவை ஆசரிக்கவேண்டும்.**
**அவர்கள் அதை இரண்டாம் மாதம் பதினாலாந்தேதி அந்திநேரமான வேளையில் ஆசரித்து, அதைப் புளிப்பில்லாத அப்பங்களோடும கசப்பான கீரைகளோடும் புசித்து, விடியற்காலம்மட்டும் அதில் ஒன்றும் மீதியாக வைக்காமலும் , அதில் ஒரு எலும்பையும் முறிக்காமலும், பஸ்காவினுடைய சகல முறைமைகளினபடியும் அதை ஆசரிக்கக்கடவர்கள்.**

மோசே இந்த கேள்விகளுக்கு உடனடியாக பதில் சொல்லவில்லை. ஆண்டவரிடமிருந்து பதில் கிடைக்கும் வரைக்கும் வின்னப்பதாரர்களை சற்று காத்திருக்கச் சொன்னார். இதற்கான பதிலை மோசேயிடம் தேவன் எந்த விதத்தில் எப்பொழுது பதில் சொன்னார் என்று எதும் குறிப்பிடபபடவில்லை. ஆனாலும் ..........

**யாத்திராகமம்** 25 - 22

**அங்கே நான் உன்னைச் சந்திப்பேன் , கிருபாசனத்தின்மீதிலும் சாட்சிப்பெட்டியின்மேல் நிற்கும் இரண்டு கேரூபீன்களின் நடுவிலும் இருந்து நான் இஸ்ரயேல் புத்திரருக்காக உனக்குக் கற்பிக்கப்போகிறவைகளையெல்லாம் உன்னோடே சொல்லுவேன்.**

மோசே எந்த காரியத்திற்கும் அவருடைய சொந்த முடிவுகளையோ ஆலோசனைகளையோ மக்களுக்கு கொடுக்கவில்லை அவர் எல்லாவற்றிக்கும் தேவனிடத்தில் முறையிட்டார்.

இன்று நாமும் மோசேயை போல் எல்லாவற்றிற்கும் தேவனிடத்தில் உத்தரவு கேட்பது நலமாக இருக்கும். அதை அவருடைய வார்த்தையாகிய வேதாகமததில் மூலமாக அறிந்து கொள்ளலாம்.

உமது வசனமே சத்தியம் உமது வசனமே சத்தியம் உமது வசனமே சத்தியம

பிரேதத்தால் தீட்டு பட்டவர்களும் தூர தேசம் சென்றவர்களும் பஸ்காவை புசிக்கலாம் என்றார். ஆனால் அந்த பஸ்காவை அடுத்த மாதம் அதே தேதியில் புசிக்கவேண்டும் என்று கட்டளையிட்டார். இந்த ஒரு கட்டளையானது விடுப்பட்டு போன அனைவருமே பஸ்காவை புசிப்பதற்கு வாய்ப்பு அளித்தது.

இந்த இரண்டாம் மாதம் 14ம் தேதி அனுசரித்து வந்த பஸ்காவை , ஆயிரவருடம் ஆட்சியின் போது முழு மனுகுலம் நிஜமான பஸ்காவை அனுசரிப்பதை அடையாளப்படுததுகிறது. இயேசுவின் முதல் வருகையில் அவரை ஏற்று கொள்ள மறுத்தவர்களுக்கு ஆயிரவருட ஆட்சியில் ஒரு வாய்ப்பு கிடைக்க இருக்கிறது. அந்த சீர்திருத்துதலின் காலத்தில் அனைவரும் ஆசீர்வதிக்கப்படுவார்கள்.

ஆயிரவருட ஆட்சியில் மனுகுலம் முழுவதும் ஆதாமின் மரண தீர்ப்பிலிருந்து இயேசுவின் ஈடுபலியின் மூலம் விடுதலை பெறுவார்கள். இயேசு அவர்களுடைய பாவங்களிருந்து விடுவிக்கும் வரைக்கும் அவர்கள் மரித்தோரோடு உறவு கொண்டிருப்பார்கள். அதாவது இவர்கள் அனைவரும் தேவனைவிட்டு தூரதேசம் சென்றிருக்கிறார்கள். இந்த நிஜமான பஸ்காவை இவர்கள் ஆயிரவருட ஆட்சியில் தேவனிடம் திரும்புவார்கள். அப்பொழுது பஸ்காவை அனுசரிப்பார்கள்.

## பஸ்காவை புசிப்பதற்கு தேவையான தகுதிகள்

இயேசுவின் மரணத்தை நினைவுகூருதலை குறித்த ஒரு கேள்வி எழும்பலாம். இந்த பாடத்தின் தலைப்பில் சொல்லப்பட்டது போல , இயேசுவின் மரணத்தை நினைவுகூரும் கிறிஸ்தவர்கள் தங்களை தாங்களே சோதித்து அறியவேண்டும் , அதாவது அவர்கள் கர்த்தருடைய சரீரம் இன்னது என்று நிதானித்து அறியாததினால் , அபாத்திரமாய்ப் போஜனபானம்பண்ணுகிறோமா என்று சோதித்து அறியவேண்டும் என்று அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுகிறார்.

**1கொரிந்தியர் 11 - 29**

**என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம்பண்ணுகிறவன் , கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால் , தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும் படி போஜனபானம் பண்ணுகிறான்.**

பஸ்காவை அனுசரிப்பதற்கு தகுதி அற்ற நிலைமைக்கும், தூர தேசம் சென்றதினால் பஸ்காவை அனுசரிக்காமல் இருப்பதற்கும் ஏகப்படட வித்தியாசம் உண்டு. பழைய ஏற்பாட்டில் தீட்டுப்பட்டதாலும் தூரதேசம் சென்றதாலும் புசிக்க முடியாமல் போனது. ஆனால் புதிய ஏற்பாட்டில் "அபாத்திரமாக " பஸ்காவை புசிக்கூடாது என்று கட்டளை கொடுத்திருக்கிறார்.

அதாவது பழைய ஏற்பாட்டில் அவர்கள் தங்களுடைய கிரியை -- தூர தேசம் செல்லுவது, பிரேதங்களால் தீட்டு படுவது .... போன்ற கிரியைகளினால் பஸ்காவை புசிக்க முடியவில்லை.

ஆனால் புதிய ஏற்பாட்டில் இருதயத்தில் தகுதி அற்றவர்கள் , அல்லது அபாத்திரமாக இருப்பவர்கள் இதை புசிக்க கூடாது. ஆகவே நாம் கிரியைகளினால் அல்ல நம்முடைய இருதயத்தின் சிந்தையிலும் , நோக்கத்திலும் , உணர்விலும் தூய்மையுள்ளவர்களாக இருந்து இந்த பஸ்காவை புசிக்கவேண்டும்.

ஒருவேளை முதல் மாதம் 14 ம் தேதி அந்த பஸ்காவை நினைவுகூற முடியவில்லை என்றால் , எண்ணாகமம் 9 ம் அதிகாரத்தில் சொன்னது போல அதே தேதி , இரண்டாம் மாதம் அதை நினைவுகூறலாம்.

இந்த ஒரு பழைய ஏற்பாட்டின் நிழலான காரியத்திலிருந்து நமக்கு மிக பெரிய ஒரு எச்சரிப்பை தேவன் நமக்கு வலியுருத்திகிறார். சுவிசேஷ யுகத்தில் தேவன் நமக்கு இன்று அளித்திருக்கும் கிருபை மிகவும் பெரிது. இதற்கு அளவே இல்லை என்று நாம் அறிவோம். ஆனால் இந்த ஒரு கிருபை நிச்சயமாக நீடித்திருக்க போவதில்லை என்று தேவன் நமக்கு இந்த பாடத்தில் எடுத்துகாட்டுகிறார்.

இந்த யுகத்தில் இயேசுவை ஏற்று கொள்ளாதவர்களுக்கு அதாவது தேவனை விட்டு தூர தேசம் சென்றவர்களும், மரித்தோரால் தீட்டுப்பட்டவர்களும் வரக்கூடிய ஆயிரவருட ஆட்சியில் நிச்சயமாக இயேசுவை இரட்சகராக ஏற்றுகொண்டு, அந்த விட்டு போன பஸ்காவை புசித்து , தேவனுடைய சட்டத்திற்கு கீழ்ப்படிந்து, அவருக்கு உகந்த பிள்ளைகளாக மாறுவார்கள். ஆனால் இந்த யுகத்தில் அவருடைய பஸ்காவை புசிக்க வாய்ப்பு கிடைத்தும் , தகுதி பெறாதவர்கள், அல்லது அபாத்திரராக இதை புசிப்பவர்களுக்கு இனி ஒரு வாய்ப்பும் கிடைக்க போகிறதில்லை.அவர்கள் உயிர்த்தெழுவதற்கான வாய்ப்புகள் இல்லை என்று வசனம் குறிப்பிடுகறிது.

**யோவான் 6 - 53, 54**

**அதற்கு இயேசு அவர்களை நோக்கி - நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.**
**என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு, நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன்.**

தேவன் நமக்கு காட்டும் கிருபை இந்த யுகத்தில் மட்மே என்பதை நினைவில் கொண்டு , அவருடைய கிருபையை விருதாவாக விட்டு விட்டாமல், பயத்தோடும் நடுக்கத்தோடும் அவரிடத்தில் சேர கடமைப்பட்டிருக்கிறோம்.

எனவே நாம் அனுசரிக்கும் இந்த பஸ்காவை புசிப்பதற்கு தகதி அற்வர்களாக இருந்தாலும் , நாம் இன்று முதல் நம்மை தகுகிப்படுத்த ஆயத்தபபடுவோம். பஸ்காவை புசிப்போம், இயேசுவோடு எல்லா பாடுகளிலும் பங்கடைய துனிவோம், தேவனிடத்தில் ஜீவ கீரீடத்தை பெறுவோம்.

## சுத்திகரிக்கப்பட்ட மனிதனும் , அந்நியனும்

**எண்ணாகமம் 9 - 13, 14**

**ஒருவன் சுத்தமுள்ளவனமாய்ப் பிரயாணம் போகாதவனமாயிருந்தும், பஸ்காவை ஆசரிக்காதேபோனால் அந்த ஆத்துமா குறித்த காலத்தில் கர்த்தரின் பலியைச் செலுத்தாதபடியினால் தன் ஜனத்தாரில் இராமல் அறுப்புண்டுபோவான் அந்த மனிதன் தன் பாவத்தைச் சுமப்பான்.**
**ஒரு பரதேசி உங்களிடத்திலே தங்கி , கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரிக்க வேண்டுமானால் அவன் அதைப் பஸ்காவின் கட்டளைப்படியும் அதின் முறைமையின்படியும் ஆசரிக்கக்கடவன், பரதேசிக்கும் சுதேசிக்கும் ஒரே கட்டளை இருகக வேண்டும் என்று சொல் என்றார்.**

தேவனுடைய சட்டமானது முடியாத பட்சத்தில் அனைவரும் கடைபிடிக்க வேண்டும் என்பதற்காக வளைந்து கொடுக்கக்கூடியதாக இருக்கிறது, ஆனால் சட்டத்தை சாதகமாக்கி கொண்டு தவறாக பயன்படுத்துபவர்களுக்கு என்றுமே சட்டங்கள் வளைந்து கொடுப்பது இல்லை மாறாக அவர்களை அது நியாயம் தீர்க்கக்கூடியதாக இருக்கிறது. தேவன் நம்முடைய பலவீனங்களை அறிந்திருக்கிறார். தங்களை தாங்களே அற்பணித்து இயன்ற மட்டும் சட்டத்திற்கு கீழ்ப்படியவேண்டும் என்று நினைப்பவர்களுக்கு தேவன் கிருபை அளிக்கிறவராக இருக்கிறார். ஆகவே நாம் தேவனுடைய கிருபையை வீனில் வழங்காதிருப்போமாக.

11**கொரிந்தியர்** 6 - 1

**தேவனுடைய கிருபையை நீங்கள் விருதாவாய்ப்பெறாதபடிக்கு உடன் வேலையாட்களாகிய நாங்கள் உங்களுக்குப் புத்திசொல்லுகிறோம்.**

நாம் ஒரு இரக்கமுள்ள தேவனை தேவனாக கொண்டிருக்கிறோம். அவர் நம்முடைய குறைகள் நிறைகள் , புரிந்து கொள்ளுதல் அனைத்தையும் அறிந்திருக்கிறார்.

**சங்கீதம்** 139 - 2

**என் உட்காருதலையும் என் எழுந்திருக்குதலையும் நீர் அறிந்திருக்கிறீர். என் நினைவுகளைத் தூரத்திருந்து அறிகிறீர்.**

ஆகவே நம்முடைய இயலாமைக்கு அவர் சில சட்டங்களை தளர்த்தியிருக்கிறார். ஆனால் நாம் நம்முடைய எல்லாவிதமான செயல்களையும் கட்டுப்படுத்த முடியாமல் போனாலும் நம்முடைய நோக்கங்களுக்கு நாமே காரணராக இருக்கிறோம் அதாவது நாம் சிந்திக்கக்கூடிய காரியங்கள் அனைத்தும் நம் கையில் தான் இருக்கிறது.

11**கொரிந்தியர்** 8 - 12

**ஒருவனுக்கு மனவிருப்பமிருந்தால் , அவனுக்கு இல்லாததின்படியல்ல, அவனுக்கு உள்ளதின்படியே அங்கிகரிக்கப்படும்.**

ஆகவே தேவன் நம்முடைய விழுந்துபோன செயலின்படியோ, அபூரணமான நிலையின்படியோ அல்ல, நம்முடைய நோக்கத்தின் படியே நமக்கு அந்த கிருபையை அளிக்கிறார் .எனவே நம்முடைய சிந்தையை நாம் சுத்திகரித்து நேர்மையாக்க வேண்டும்.

**தேவனுடைய கிருபை கடலைப்போல் அளவற்றதாக இருக்கிறது,**
**அதுபோல் அவருடைய நியாத்தீர்ப்புகள் கடுமையாக இருந்தாலும் ,**
**அவருடைய நீதி மிகுந்த இரக்கமுள்ளதாக இருக்கிறது.**

**எண்ணாகமம்** 9 - 14 ம் வசனம் சரியாக மொழி பெயர்க்கப்படவில்லை என்று அநேகர் கருதுகிறார்கள்.

**ஒரு பரதேசி உங்களிடத்திலே தங்கி , கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரிக்க வேண்டுமானால் அவன் அதைப் பஸ்காவின் கட்டளைப்படியும் அதின் முறைமையின்படியும் ஆசரிக்கக்கடவன், பரதேசிக்கும் சுதேசிக்கும் ஒரே கட்டளை இருககவேண்டும் என்று சொல் என்றார்.**

இங்கு "பரதேசிகள்" என்று சொல்லும் போது இவர்கள் தற்காலிகமாக வந்து இருக்கும் அந்நியர்கள் அல்ல. இவர்கள் அநேக வருடங்களாக இஸ்ரயேல் மத்தியில் அவர்களோடு வாழ்பவர்களாக இருக்கிறார்கள்.

**யாத்திராகமம் 12 - 38**

**அவர்களோடே கூடப் பல ஜாதியான ஜனங்கள் அநேகர் போனதும் அன்றி, மிகுதியான ஆடுமாடுகள் முதலான மிருகஜீவன்களும் போயிற்று**

ஆகவே அவர்கள் இந்த பஸ்காவை புசிப்பதற்கு விரும்பினால் இஸ்ரயேல் மக்களுக்கு கொடுத்த அதே முறைமைகளை கடைப்பிடிக்க சொன்னார். அவர்கள் வாக்குதத்தம் செய்த தேசத்திற்கு வந்த போதும் அவர்கள் மத்தியில் இருந்த புறஜாதியார் , பஸ்காவை அனுசரிக்க மனதுள்ளவர்கள் கர்த்தர் சொன்ன படி அனுசரித்தார்கள்.

## அக்கினி ஸ்தம்பம்

**எண்ணாகமம் 9 - 15, 16**

**வாசஸ்தலம் ஸ்தாபனஞ்செய்யப்பட்ட நாளிலே, மேகமானது சாட்சியின் கூடாரமாகிய வாசஸ்தலத்தை மூடிற்று சாங்காலமானபோது, வாசஸ்தலத்தின் மேல் அக்கினிமயமான ஒருதோற்றம் உண்டாயிற்று, அது விடியற்காலமட்டும் இருந்தது.**

**இப்படி நித்தமும் இருந்தது, பகலில் மேகமும்,இரவில் அக்கினித்தோற்றமும் அதை மூடிக்கொண்டிருந்தது.**

பிதாவாகிய யேகோவா தேவன் ஆவிக்குரிய காரியங்களிலும் , வாழ்க்கையின் நடைமுறைகளில் வழிநடத்தினவர் , தன்னுடைய ஜனங்களை ,வாக்களித்த கானான் தேசத்திற்கு விசேஷமாக வழிநடத்திச் சென்றதை கானலாம்.

வெகு சீக்கரத்தில் ஆசரிப்பு கூடாரம் ஸ்தாபிக்கப்பட்டது. உடனே அதற்கு மேலாக மேகம் வந்து மூடியது. இரவில் அக்கினி ஸ்தம்பமும், பகலில் இந்த மேக ஸ்தம்பமும் வழிநடத்தியது. இதே ஸ்தம்பமானது பார்வோனுடைய சேனைகளிடமிருந்து இஸ்ரயேல் மக்களை விடுவித்து அவர்களை சிவந்த சமுத்திரத்தில் தள்ளியது.

வனாந்திரகாற்று அடித்துச் செல்லாதபடி நிலையாக நின்ற இந்த ஒரு மேக ஸ்தம்பமானது தேவனுடைய ஜனமாகிய இஸ்ரயேல் மக்களுக்கு மூன்று காரியங்களுக்கு பயனபட்டது.

1. **பிரயாணம் சென்ற மக்களுக்கு சீதோஷ்ணத்திலிருந்து பாதுகாப்பும் , நிழலும் தந்தது. புயல் காற்றுகளில் இருந்தும் அவர்களை விடுவித்தது.** (ஏசாயா 4 - 5, 6)
2. **அக்கி ஸ்தம்பானது இரவின் குளிரிலிருந்து பாதுகாத்து அந்த நேரத்தில் தேவையான வெளிச்சத்தையும் வெப்பத்தையும் தந்தது.**
3. **கடைசியாக அவர்கள் சேர வேண்டிய இடத்திற்கு அவர்களை கொண்டு போய்ச் சேர்தததது.**

இப்படியாக நம்முடைய வனாந்திர பிரயாணத்திலும் நாம் பிதாவின் அரவனைப்பில் இருப்போம் என்றால் அவர் நம்மை சகல விதமான உலகப்பிரகாரமான பிரச்சனைகளில் இருந்தும் , பலவிதமான காற்றாகிய அலக்களிக்கும் போதனைகளில் இருந்தும் நம்மை விடுவிக்க வல்லவராக இருக்கிறார். இந்த பாதுகாப்பில் இருப்பவர்கள் , நிச்சயமாக இந்த உலகத்தில் இருந்தாலும் அவருடைய பாதுகாப்பை உணர்ந்து , அவருடைய பிரசன்னத்தில் மகிழலாம்.

நாம் அவர் சொல்லுக்கு கீழ்ப்படிந்து அவருடைய பாதத்திற்கு கீழ் இருந்தால் போதும் , அவருடைய பாதுகாப்பு , வழிநடத்துதல், எச்சரிப்புகள் அரவணைப்பு அனைத்தும் நிச்சயமாக நமக்கும் உண்டு. ஆகவே நாம் அவருடைய அரவணைப்புக்குள் பிரவேசிப்போமா ?

உமது வசனமே சத்தியம் உமது வசனமே சத்தியம் உமது வசனமே சத்தியம

# இஸ்ரயேல் மக்கள் யேகோவா தேவானல் வழிநடத்தப்பட்டார்கள்.

**எண்ணாகமம்** 9 - 17- 23

**மேகம் கூடாரத்திலிருந்து மேலே எழும்பும்போது இஸ்ரயேல் புத்திரர் பிரயாணம்பண்ணுவார்கள் ,மேகம் தங்குமிடத்தில் இஸ்ரயேல் புத்திரர் பாளயமிறங்குவார்கள்.**
**கர்த்தருடைய கட்டளையின்படியே இஸ்ரயேல் புத்திரர் பிரயாணப்படுவர்கள் , கர்த்தருடைய கட்டயையின்படியே பாளயமிறங்குவார்கள். , மேகம் வாசஸ்தலத்தின்மேல் தங்கியிருக்கும் நாளெல்லாம் அவர்கள பாளயத்தில் தங்கியிருப்பார்கள்.**
**மேகம் நெடுநாள் வாசஸ்தலத்தின் மேல் தங்கியிருக்கும் போது, இஸ்ரயேல் புத்திரர் பிரயாணப்படாமல் கர்த்தரின் காவலைக் காத்துக்கொண்டிருப்பார்கள்.**
**மேகம் சிலநாள் மாத்திரம் வாசஸ்தலத்தின்மேல் தங்கியிருக்கும் போது, கர்த்தருடைய கட்டளையின்படியே பாளயமிறங்கியிருந்து, கர்த்தருடைய கட்டளையின்படியே பிரயாணப்படுவார்கள்.**
**மேகம் சாயங்காலந்தொடங்கி விடியற்காலமட்டும் இருந்து , விடியற்காலத்தில் உயர எழும்பும்போது, உடனே பிரயாணப்படுவார்கள். பகலிலாகிலும் இரவிலாகிலும் மேகம எழும்பும்போது பிரயாணப்படுவார்கள்.**
**மேகமானது இரண்டுநாளாவது ஒரு மாதமாவது ஒரு வருஷமாவது வாசஸ்தலத்தின்மேல் தங்கியிருக்கும் போது, இஸ்ரயேல் புத்திரர் பிரயாணம்பண்ணாமல் பாளயமிறஙகியிருப்பார்கள். அது உயர எழும்பும் போதோ பிராயாணப்படுவார்கள். கர்ததருடைய கட்டடையின் படியே பாளயமிறங்குவார்கள்.**
**கர்த்தருடைய கட்டளையின்படியே பிரயாணம்பண்ணுவார்கள். கர்த்தர் மோசேயைக்கொண்டு கட்டளையிடுகிறபடியே கர்த்தருடைய காவலைக் காத்துக்கொள்வார்கள்.**

எண்ணாகமம் 10 - 29 - 23 வசனங்களில் மோசே ரகுயேலிடம் வாக்கு கொடுத்த தேசத்திற்கு வனாந்திரத்தின் வழியாக பயணம் செல்லுவதற்கான வழியை காண்பிக்கும் படி அழைத்திருந்தார்.

**எண்ணாகமம்** 10 - 34

**அவர்கள் பாளயத்திலிருந்து பிரயாணம்போகிறபோது, கர்த்தருடைய மேகம் பகலில் அவாகள்மேல் தங்கியிருந்தது.**

ரகுயேலை விட வழியை நன்கு அறிந்து அவர்களுடைய தேவன் அவர்களோடு இருந்தார்.

அதுபோல் நம்முடைய இந்த பயணத்திலும் நாம் அவ்வபோது காணக்கூடிய மனிதர்களின் உதவிகளை நாடுகிறோம். காணக்கூடிய மனிதர்களைவிட அனைத்தையும் அறிந்த சர்வவல்லமையுள்ள தேவனை நாம் தேவனாக கொண்டிருக்கிறோம் என்பதை மறந்து விடுகிறோம். ஆகவே நாம் ஒவ்வொரு காரியத்திற்கும் தேவனுடைய வழிநடத்துதலை தேடுவோம்.

எண்ணாகமம் 21 ம் அதிகாரத்தில் குறைந்த பட்சம் 10 முறைகள் மேகஸ்தம்பமானது எழுந்து மக்களை புல்வெளிகளிலும் வயல் நிலங்களின் வழியாகவும் வழி நடத்தியது. இடையில் அங்கு சில நாட்கள் அல்லது சில மாதங்கள் சில வருடங்கள் தங்கி அதற்கு பின்பு பயணம் தொடர்ந்தது. கடைசியாக முற்பிதாவாகிய ஆபிரகாமுக்கு வாக்களிக்கப்பட்ட தேசத்திற்கு அந்த மேகம் இஸ்ரயேல் ஜாதியை கொண்டு வந்து சேர்த்தது. பத்து வேவுக்காரர்கள் சொன்ன துர்ச்செய்தியை விசுவாசித்த அந்த அவிசுவாசியான யூதர்கள் வழியில் மரித்து போனார்கள். எகிப்திலிருந்து புறப்பட்ட யோசுவா, காலேபும் அங்கு இருந்த லேவியர்களும் மட்டுமே தேவன் வாக்களித்த தேசத்தில் பிரவேசித்து , அவர் சொன்ன வாக்கு நிறைவேறினதை கண்டு மகிழ்ந்தார்கள்.

உமது வசனமே சத்தியம் உமது வசனமே சத்தியம் உமது வசனமே சத்தியம

நாமும் இந்த பிரயாணத்தில் அவிசுவாசத்தோடும் , தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படியாமல் இருப்போமானால் நிச்சயமாக தேவன் நமக்கு வாக்களித்த பரமகானானுக்கு பிரவேசிக்க முடியாது. பிதாவாகிய தேவன் நமக்கு வாக்களித்த காணக்கூடாதவைகளை நாம் நம்முடைய சிந்தையில் முன்வைத்து விசுவாசத்தோடு அவர் வழி நடத்தும் பாதையில் சென்று அவா சொல்லுக்கு கீழ்ப்படிந்தோம் என்றால் நிச்சயமாக அவருடைய வாக்குறுதிகள் நிறைவேறுவதை கண்டு நாமும் மகிழ்சி அடையாலாம்.

அந்த இலக்கை நாம் எட்டுவதற்கு , இந்த மாம்ச சரீரத்தில் இருக்கும் நமக்கு எல்லா தேவைகளையும் ,ஆவிக்குரிய வளர்சிகளை செய்ய தேவன் நடத்த வல்லவராக இருக்கிறார்.

**பிலிப்பியர் 1 - 5**

**உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்தி வருவாரென்று நம்பி ......**

THE HERALD – Page27-30
MAR/APR-2008

தமிழாக்கம்

**பாடம் - 7**

# அப்பமும் , பாத்திரமும.

---

1**கொரிந்தியர்** 11 - 26

**ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்.**

பவுலின் இந்த வார்த்தைகளுக்குள் அநேக அர்த்தங்கள் மறைந்துள்ளது. ஆண்டவரின் இராபோஜனத்தில் பங்கெடுக்கும் ஒவ்வொரு , கிறிஸ்தவர்களும் ,கிறிஸ்துவின் பலியின் மரணத்தை "**<u>அவர் வரும் அளவும</u>**" தெரிவிக்கிறார்கள் என்று அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுகிறார். இந்த பலி முதலாவது இதை புசிப்பவர்களுக்கும் அடுத்தததாக உலக மக்கள் அனைவருக்கும் மீட்பு தரக்கூடியதாக இருக்கிறது.

அடுத்ததாக பவுல் சொல்லும் போது " **<u>நான் தேவனிடத்தில் பெற்று கொண்டதை ,</u>** உங்களுக்கு சொல்லுகிறேன் என்கிறார்.

1**கொரிந்தியர்** 11 - 23- 26

**நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன், என்னவெனில் , கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்டஅன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து,**
**ஸ்தோத்திரம்பண்ணி, அதைப்பிட்டு -- நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது, என்னை நினைவுகூருமபடி இதைச் செய்யுங்கள் என்றார்.போஜனம பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து-- இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது நீங்கள் இதைப் பானம்பண்ணும் போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்.**
**ஆகையால் நீங்கள் இந்த அப்பததைப் புசித்து , இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்.**
**எஜமான தன்னுடைய பின் அடியார்களை அவருடைய நினைவாக அந்த அப்பத்தையும் இரசத்தையும் எடுதது கொள்ளும் படி அழைத்தார். அந்த கடைசி இராத்திரியில் , மேல் வீட்டில் யூதர்களாக இருந்தார்கள். எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்றதை அந்த நாளில் நினைவு கூறவேண்டும் என்று அனைவரும் அறிந்திருந்தார்கள். ஆகவே இந்த நியாயப்பிரமாணத்தின் சட்டத்தை இரத்தம் சிநதுதலோடு தொடங்கியிருக்கவேண்டும்.**

எப்படியிருந்தாலும் இயேசு நினைவு கூர்ந்த அந்த இராபோஜனத்தில் குழப்பங்கள் இருந்திருக்கவேண்டும். இயேசு சொன்ன காரியங்களை அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. இவை அனைத்தையும் பெந்தேகோஸ்தே நாளில் பெற்ற பரிசுத்த ஆவியின் மூலமாக அறிய முடிந்தது. அவர் செய்த காரியங்களையும் , சொன்ன வார்த்தைகளையும் பற்றி முழுமையாக அறிந்து கொண்டார்கள்.

**1கொரிந்தியர்** 10 - 11

**இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது, உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது.**

**ரோமர்** 15 - 4

**தேவவசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது.**

ஆகவே நாம் பெற்ற பரிசுத்த ஆவியில் குறைவுள்ளவர்களாக இருந்தோம் என்றால் நிச்சயமாக இந்த பஸ்காவின் முழு தாற்பரியத்தை நம்மால் அறிந்து கொள்ள முடியாது , ஆகவே யாவருக்கு பட்சாபாதம் இல்லாமல் கேட்பவர்களுக்கு கொடுக்கும் தேவனிடத்தில் வேண்டுதல் செய்வோம். அவர் கொடுக்கும் பரிசுத்த ஆவியை பெறுவதற்கான தகுதியை நாம் நம்மில் ஏற்படுத்துவோமாக.

## நாம் பஸ்காவை ஒவ்வொரு வருடமும் ஏன் புசிக்க வேண்டும்.

முதல் பஸ்காவின் போது அனைத்து தலைச்சன் பிள்ளைகளும் சுத்திகரிக்கப்பட்டார்கள். ஒவ்வொரு வருடமும் இந்த விடுதலையை நினைவுகூர வேண்டும் என்றும், அந்த நாளில தகப்பன்கள் தங்களுடைய பிள்ளைகளுக்கு இந்த பண்டிகை கொண்டாடப்பட்ட நோக்கத்தை பற்றி சொல்ல வேண்டும் என்று கட்டளையிட்டிருந்தார்.

**யாத்திராகமம்** 13 - 14

**பிற்காலத்தில் உன் குமாரன் -- இது என்ன என்று உன்னைக் கேட்டால் , நீ அவனை நோக்கி -- கர்த்தர் எங்களைப் பலத்த கையினால் அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார்.**

பஸ்காவில் புலிப்பில்லா அப்பத்தை புசிக்கவேண்டும். அதை தொடர்ந்து வரும் ஏழு நாள் அளவும் பசிக்கவேண்டும். ஆகவே அந்த வாரத்தை புளிப்பில்லா அப்பப்பண்டிகையின் வாரம் என்று அழைக்கப்பட்டது.

நிச்சயமாக நாமும் இந்த பஸ்காவை அனுசரிக்கும் போது நம்முடைய சந்ததியாராகிய மாம்சத்திற்குரிய பிள்ளைகளுக்கு மட்டும் அல்லாமல் ஆவிக்குரிய பிள்ளைகளுக்கு இதன் மகத்துவத்தை அறிவிக்க கடமைப்பட்டிருக்கிறோம்.

**யாத்திராகமம்** 13 - 3, 6, 7

**அப்பொழுது மோசே ஜனங்களை நோக்கி -- நீங்கள் அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து புறப்பட்ட இந்த நாளை நினையுங்கள், கர்த்தா பலத்த கையினால் உங்களை அவ்விடத்திலிருந்து புறப்படப்பண்ணினார் . ஆகையால் நீங்கள் புளித்த அப்பம் புசிக்கவேண்டாம்.**

**புளிப்பில்லா அப்பத்தை ஏழு நாளளவும் புசிக்கக்கடவாய். ஏழாம் நாளிலே கர்த்தருக்குப் பண்டிகை ஆசரிக்கப்படுவதாக.**

**அந்த ஏழு நாளும் புளிப்பில்லா அப்பம் புசிக்கவேண்டும், புளிப்புள்ள அப்பம் உன்னடத்திலே காணப்படவேண்டாம், உன் எல்லைக்குள் எங்கும் புளித்தமாவும் உன்னிடத்தில் காணப்படவேண்டாம்.**

ஆகவே வருடம்தோரும் பஸ்காவை நினைவுகூரும் போது விடுதலையின் நினைவாக அவைகளின் அடையாளத்தை கைகளிலும், சிந்தைகளை கண்களின் மத்தியிலும் , ஆண்டவர் கொடுத்த சட்டத்தை அவர்களின் உதடுகளிலும் இருந்தது.

உமது வசனமே சத்தியம் உமது வசனமே சத்தியம் உமது வசனமே சத்தியம

### **யாத்திராகமம்**- 13 - 9

**கர்த்தரின் நியாயப்பிரமாணம் உன் வாயிலிருக்கும்படிக்கு , இது உன் கையிலே ஒரு அடையாளமாகவும் உன் கண்களின் நடுவே நினைப்பூட்டுதலாகவும் இருக்கக்கடவது, பலத்த கையினால் கர்த்தர் உன்னை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார்.**

ஆகவே வருடம் தோரும் நாம் புசிக்கும் பஸ்காவின் போது இவை அனைத்தையும் நாம் மனதில் கொள்ள வேண்டும். நம்முடைய கைகளின் கிரிகைளினாலும், காணக்கூடிய பார்வையிலும் , பேசக்கூடிய வார்த்தைகளிலும் நம்முடைய இயேசுவின் மரணத்தை தெரிவிக்கக்கூடியவர்களாக இருக்கவேண்டும். இதை நாம் நினைவுகூருதலின் நாளில் மட்டும் அல்லாமல் அன்றாட வாழ்க்கையில் நினைவில் கொள்ள வேண்டும்.

மோசே நியாயபிரமாணத்தை எழுதி முடித்த பின்பு அதை பிரதிஷ்ட்டை செய்யும் போது பலியிடப்பட்ட மிருகத்தின் இரத்தத்தை எடுத்து பலிபீடத்தின் மேலும் , ஜனங்கள் மேலும் , அந்த நியாயபிரமாணத்தின் மேலும் தெளித்தார்.

### **யாத்திராகம்** 24 - 6, 8

**அப்பொழுது மோசே அந்த இரத்தத்தில் பாதி எடுத்து, பாத்திரங்களில் வார்த்து, பாதி இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் தெளித்து,...**

**அப்பொழுது மோசே இரத்தத்தை எடுத்து, ஜனங்களின்மேல் தெளித்து இந்த வார்த்தைகள் யாவையுங்குறித்து கர்த்தர் உங்களோடே பண்ணின உடன்படிக்கையின் இரத்தம் இதுவே என்றான்.**

### **எபிரெயர்** 9 - 19

**எப்படியெனில், மோசே, நியாயப்பிரமாணத்தின்படி , சகல ஜனங்களுக்கும் எல்லாக் கட்டளைகளையும் சொன்ன பின்பு, இளங்காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தத்தைத் தண்ணீரோடும், சிவப்பான ஆட்டுமயிரோடும், ஈசோப்போடுங்கூட எடுத்து, புஸ்தகத்தின்மேலும ஜனங்களெல்லார்மேலும் தெளித்து...**

இப்படியாக இரத்தம் சிந்துதலின் மூலம் தேவனும் இஸ்ரயேல் மக்களும ஒப்புரவானார்கள். அதுபோல் நாம் அனுசரிக்கும் பிரமாணமும் இரத்தம் சிந்துதலோடு தான் தொடங்கியது. இப்படியாக இயேசுவின் இரத்தம் சிந்தப்பட்ட பின்பு சுவிசேஷ யுகத்தில் அந்த இரத்தத்தின் மேல் விசுவாசம் வைத்து அவரை ஏற்று கொள்ளும் ஒவ்வொருவரோடும் தேவன் ஒப்புரவாகிறார். அதாவது தேவனால் நாம் நீதிமான்களாக ஏற்று கொள்ளப்படுகிறோம்.

### **எபிரெயர்** 9 - 18

**அந்தப்படி, முதலாம் உடன்படிக்கையும் இரத்தமில்லாமல் பிரதிஷ்டைபண்ணப்படவில்லை.**

நம்முடைய ஆண்டவராம் இயேசு , இஸ்ரயேலில் நடந்த இந்த மாதிரிகளை மனதில் வைத்து கொண்டு ஒரு புதிய நினைவுக்கூருதலை , அப்பத்தையும், பாத்திரத்தையும் எடுத்து சீஷர்களுக்கு கொடுத்து இதை என் நினைவாக புசியுங்கள், குடியுங்கள் என்று சொன்னார். பழைய பஸ்காவை போல் ஒரு விடுதலையை நினைவு கூறவே இது அனுசரிக்கப்பட்டது. ஆனால் இதனுடைய நோக்கம் மிக மேன்மையானதாக இருக்கிறது. பழைய பஸ்காவை வருடம் தோரும் தலைமுறை தலைமுறையாக எகிப்திலிருந்து விடுதலை பெற்றதை நினைத்து வந்தார்கள்.

ஆனால் புதிய உடன்படிக்கையானது கிறிஸ்துவின் இரத்தம் சிந்துதலின் நிமித்தம் முழு உலகத்திற்கும் பாவத்திலிருந்தும் மரணத்திலிருந்தும் விடுதலை கிடைக்கிறது. ஆகவே புதிய உடன்படிக்கைகுரிய பஸ்காவை நாம் மிகுந்த பயத்தோடும் ஜாக்கிரதையோடும் அனுசரிக்கவேண்டும்.

**மத்தேயு** 26 - 28

**இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது.**

ஆகவே புதிய உடன்படிக்கையை கைக கொள்ளுவதற்கு அழைப்பை பெற்ற நாம் கிறிஸ்துவின் இரத்தத்தின் மதிப்பை உணர்ந்தவர்களாக , அவர் வரும் அளவுக்கு நம்முடைய எல்லா கிரியைகளிலும் , இயேசுவின் மரணத்தை தெரிவிப்போம்.

## புளிப்பில்லா அப்பம் நம்முடைய ஆண்டவராம் இயேசுவை அடையாளப்படுத்துகிறது.

பஸ்காவில் புளிப்புள்ளவைகளை அகற்ற வேண்டும் என்ற கட்டளை , நம்முடைய பஸ்காவின் போது பாவங்களை அகற்ற வேண்டும் என்பதை மிக நேர்த்தியாக அடையாளப்படுத்துகிறது. இயேசு அந்த புளிப்பில்லா அப்பத்தை பிட்டு, இது என் சரீரம் எனறார். இது அவருடைய பரிபூரணமான பாவமற்ற பலியை குறிக்கிறது. இயேசுவை பற்றி , அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லும் போது..........

**எபிரெயர்** 7 - 26

**பரிசுத்தரும் , குற்றமற்றவரும் பாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும் , வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரியரே நமக்க ஏற்றவராயிருக்கிறார்.**

**வெளி** 13 - 8

**உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினுடைய ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள் யாவரும் அதை வணங்குவார்கள.**

பஸ்காவின் ஆட்டை அடித்து புசித்தது போல, இயேசு தன்னுடைய சரீரத்தை புசிக்க சொன்னார். ஆட்டின் இரத்தம் முதற் பேரானவர்களை தப்புவிக்க நிலை வாசல்களில் தெளிக்கப்பட்டது. அது போல் இன்று கிறிஸ்துவின் விலையேற பெற்ற இரத்தம் தேவனுடைய முதற்பேரானவர்களை விடுவிக்க தெளிக்கப்படுகிறது. இதை குறித்து அப்போஸ்தலனாகிய பேதுரு கூறும் போது.........

1**பேதுரு** 1- 18, 19

**உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அனுசரித்துவந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே.**

நம்முடைய ஆண்டவராம் இயேசு இந்த மனுகுலத்திற்காக பலியாக தந்த சரீரத்தையும் இரத்தத்தையும் அந்த அப்பமும் , பாத்திரமும் அடையாளப்படுத்துகிறது. இதை குறித்து இயேசு சொல்லும் போது...........

**யோவான்** 6 - 53 - 57

**அதற்கு இயேசு அவர்களை நோக்கி - நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும் ,**
**அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று**
**மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச்சொல்லுகிறேன்.**
**என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு, நான்**
**அவனைக் கடைசி நாளில் எழுப்புவேன்.**
**என் மாம்சம் மெய்யான போஜனமாயிருக்கிறது, என் இரத்தம் மெய்யான பானமாயிருக்கிறது.**

**என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான்,**
**நானும் அவனிலே நிலைத்திருக்கிறேன்.**
**ஜீவனுள்ள பிதா என்னை அனுப்பினதுபோலவும் , நான் பிதாவினால் பிழைத்திருக்கிறது போலவும்,**
**என்னைப் புசிக்கிறவனும் என்னாலே பிழைப்பான்.**

இந்த உபதேசம் மிகக்கடினமாக இருந்தது "**<u>அவருடைய மாம்சத்தை புசிப்பதா</u>** ? " என்ற கேள்வி அனைவருக்குமே எழும்பியது. இரத்தத்தை புசிப்பது பாவம் என்று அனைவரும் அறிந்திருந்தார்கள். ஏன் என்றால் "**<u>மாம்சத்தின் ஜீவன் இரத்தத்தில் இருக்கிறது</u>**," என்பதை அனைவரும் நன்கு உணர்ந்திருந்தார்கள்.

**லேவியராகமம்** 17 - 11

**மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது. நான் அதை உங்களுக்குப் பலிபீடத்தின்மேல்**
**உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்படிக்குக் கட்டளையிட்டேன்,**
**ஆத்துமாவிற்காகப் பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே..**

ஆகவே இயேசு சொன்னதை இவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆகவே இந்த உபதேசத்தை அவர்கள் ஏற்று கொள்ளவும் இல்லை.

**எபிரெயர்** 9 - 22

**நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சங்குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும்,**
**இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது.**

இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவ மன்னிப்பு இல்லை என்று பவுல் இங்கு குறிப்பிடுகிறார். இந்த வசனமானது, கிறிஸ்துவின் பலியை அல்லாமல் இரட்சிக்கப்படுவதற்கு வேறு வழி இல்லை என்பது உறுதிப்படுகிறது. இதை அடையாளப்படுத்துவதற்காக பழைய ஏற்பாட்டில் பாவ நிவிர்த்திக்காக மிருகங்கள் அடிக்கப்பட்டு இரத்தம் சிந்தப்பட்டது.

இதை தொடர்ந்து வாசிக்கலாம்.

**எபிரேயர்** 12 - 22- 24

**நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும , ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம**
**எருசலேமினிடத்திற்கும் , ஆயிரம் பதினாயிருமான தேவதூதர்களினிடத்தற்கும்**
**பரலோகததில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையினிடத்திற்கும் ,**
**யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும் பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும்.**
**புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும், ஆபேலினுடைய இரத்தம்**
**பேசினதைப்பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும்**
**இரத்தத்தினிடததிற்கும் வந்து சேர்ந்தீர்கள். ..**

உமது வசனமே சத்தியம் உமது வசனமே சத்தியம் உமது வசனமே சத்தியம்

1. சீனாய் மலை பரம எருசலேம்
2.எண்ணிக்கையில் அடங்காத தூதர்கள் கூட்டம்
3. தலைபேரானவர்கள் சர்வசங்கம்.
4. தேவனே நியாயாதிபதி
5. பூரணராக்கப்பட்ட நீதிமான்களின் ஆவிகள்
6. புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசு
7. ஆபேலின் இரத்தத்தை காட்டிலும் மேன்மையான இரத்தம் தெளிக்கப்பட்டது

**எபிரெயர் 11 - 38**

**உலகம் அவர்களுக்குப் பாத்திரமாயிருக்கவில்லை, அவர்கள் வனாந்தரங்களிலேயம் மலைகளிலேயும் குகைகளிலேயும் பூமியின் வெடிப்புகளிலேயும் சிதறுண்டு அலைந்தார்கள.**

நியாயம் கேட்டு குரல் கொடுத்த ஆபேலின் இரத்தத்தை போல் இராமல், அனைவரையும் பாவத்திலிருந்து மீட்பதற்கு குரல் கொடுக்கும் இரத்தமாக இருக்கிறது.

# கிறிஸ்துவின் இரத்தமும் சரீரமும்

யூதர்களின் பாரம்பரிய வரலாற்றில் அநேக திருஷ்டாந்தங்கள் மூலமாக இயேசுவின் சரீரத்தை குறித்தும் இரத்தத்தை குறித்தும் சொல்லப்படுகிறது. எபிரெயர் 10 ம் அதிகாரத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் ஒப்புரவாக்குதலின் பலிகளை வருடம் தோரும் செலுத்தப்பட வேண்டும் என்பதை குறித்து பேசுகிறார். 4ம் வசனத்தில் ஆட்டு கடாக்களின் இரத்தமும் மிருகத்தின் இரத்தமும் பாவங்களை கழுவாது என்றும் , 9ம் வசனத்தில் இயேசுவின் இரத்தம் பாவங்களை நித்தியமாக போக்கும் என்றும் குறிப்பிடுகிறார். நியாயப்பிரமாணத்தில் சொல்லப்பட்ட பலிகள் , இயேசுவின் ஜீவனை பலியாக செலுத்துவதை அடையாளப்படுத்துகிறது. பலி செலுத்தின இந்த இரத்தம் அனைவருடைய பாவங்களையும் போக்கின இரண்டாம் உடன்படிக்கையாகிய புது உடன்படிக்கையை ஸ்தாபித்தது.

**எபிரெயர் 9 - 28**

**கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தாிசனமானாா்.**

முதலில் இந்த இரத்தம் சபையின் மீட்புக்காகவும் --

**எபிரெயர் 10 - 10**

**இயே கிறிஸ்துவினுடைய சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருககிறோம்.**

அதற்கு பின்பு முழு மனுகுலத்திற்காகவும் சிந்தப்பட்டது.
பரிசுத்தமாக்கப்பட்ட சபை தேவனுடைய பணிக்காக கிறிஸ்துவின் சரீரமாக மாற்றப்படுகிறது.

**1பேதுரு 1- 18, 19**

**உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அனுசரித்துவந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே.**

முதலாவது சபை முழுமையாக மீட்கப்படுகிறது.

**ரோமர் 5 - 9**

**இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே.**

இந்த வசனங்கள் அந்த அப்பத்தை புசித்து, பாத்திரத்தில் பானம் பன்னும் முக்கியத்துவங்களை எடுத்துகாட்டுகிறது. மீட்பு, நீதிமானாக்கப்படுவது, சுத்திகரிக்கப்படுவது. ஆகவே நமக்கு இயேசு அவருடைய பலியின் மூலமாக அனைத்தையும் கொடுத்திருக்கிறார்.

**1கொரிந்தியர் 1 - 30,31**

**அந்தப்படி, நீங்கள் அவராலே கிறிஸது இயேசுவிக்குட்படட்டிருக்கிறீர்கள் .**
**எழுதியிருக்கிறபடி மேன்மைபாராட்டுகிறவன் கர்த்தரைக்குறித்தே மேன்மைபாராட்டத்தக்கதாக..**
**அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதயும் பரிசுத்தமும் மீட்புமானார்.**

ஆனால் இது உலகத்தின் ஞானத்தை போல் அல்ல அதே அதிகாரம் (18 - 25) வசனங்களை வாசித்தால்...."

ஆகவே கிறிஸ்துவிக்குள் சுத்திகரிப்பையும் , உலக வழிகளிலிருந்து விலகி தேவனிடத்தில் சேர வழி வகுக்கிறது.

மேலும் நாம் கிறிஸ்துவுக்குள் நீதியையும் , நியாயத்தையும் அறிந்து தேவனுக்கு முன்பாக செம்மைப்படுவோம். எல்லாற்றிக்கும் மேல் கிறிஸ்துவின் மூலம் நமக்கு மீட்பு உண்டு . நமக்கு ஈடாக அவருடைய ஜீவனை கொடுத்து நம்மை இரட்சித்திருக்கிறார்.

## விடுதலை

புதிய ஏற்பாட்டில் இதை குறித்து அநேக கோணங்கள் உண்டு.

**ரோமர் 3 - 24**

**இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்.**

சபையானது இயேசு கிறிஸ்துவின் மீட்பினால் நீதிமானாக்கப்பட்டது என்று வாசிக்கிறோம். இங்கு மீட்பு என்பது விடுதலையை குறிப்பிடுகிறது. பழைய பஸ்கா எகிப்திலிருந்து விடுதலை பெற்றதை அடையாளப்படுத்துவதை போல் சபையானது பாவத்திலும் , மரணத்தில் இருந்து இயேசுவின் பலியின் மூலம் விடுவிக்கப்படுகிறது. அது இந்த சுவிசேஷ யூகத்தில் இன்று நடைபெற்று கொண்டிருக்கிறது . அடுத்து வரும் மேசியாவின் யுகத்தில் உலக மக்கள் அனைவருக்கும் இந்த மீட்பு அளிக்கப்படும்.

ஆனால் தேவனுடைய அன்பை நாம் பாவிகளாக இருக்கும போதே செயலாற்றினார். அவருடைய கோபாக்கினையிலிருந்து நம்மை காப்பதற்கு தன்னுடைய குமாரன் மேல் சகல குற்றத்தையும் சுமத்தி, நம்மை நீதிமானாக்கியிருக்கிறார். தேவனுக்கு சத்துருக்களாக இருந்த நம்மை தன்னுடைய குமாரனின் மரணத்தின் மூலம் நம்முடைய ஜீவனை மீட்டு கொண்டார் . ஆகவே நாம் இயேசு கிறிஸ்துவின் மூலம் பிதாவாகிய தேவனுக்குள் சகல மீட்பபையும் பெற்றிருக்கிறோம். ஒரு மனுஷன் மூலம் உலகத்தில் பாவம் பிரவேசித்தது. அதன் மூலம் மரணம் நேரிட்டது.

ஆகவே அனைவரும் பாவிகளானோம். சட்டம் கொடுக்கப்பட்டதினால் பாவம் வெளியானது. சட்டம் கொடுக்கப்படாமல் இருந்தால் பாவம் வந்திருக்கிறது.

ஆகவே தேவன் மோசேயின் மூலமாக சட்டத்தை கொடுத்தார், அதற்கு பின் பாவமானது துல்லியமாக சுட்டி காட்டப்பட்டது. ஆனால் தேவனுடைய அளவற்ற கிருபையினால் பாவத்தில் இருந்து மனுகுலத்தை ஒரு மனிதனாகிய இயேசுவினால் அனைவருக்கும மீட்பை அளித்தார். (**ரோமர்** 5 - 8 - 15)

பிதாவாகிய தேவன் நம்முடைய ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவின் மூலம் கொடுத்த அற்புதமான மீட்பை நாம் நினைவுக்கூர வேண்டியவர்களாக இருக்கிறோம். இதை நினைவுக்கூரும் மாதிரியை இயேசு நமக்கு காண்பித்தார்.

**லூக்கா** 22 - 17 , 19

**அவர் பாத்திரத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி -- நீங்கள் இதை வாங்கி உங்களுக்குள்ளே பங்கிட்டுக்கொள்ளுங்கள்.**

**பின்பு அவர் அப்பத்தை எடுத்து -- ஸ்தோத்திரம்பண்ணி அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து -- இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது என்றார்.**

இயேசு தன்னுடைய ஜீவனை பலியாக தருவதற்கு கிடைத்த வாய்ப்புக்காக தேவனுக்கு நன்றி செலுத்தினார்.

**ஏசாயா** 53 - 11

**அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார், என் தாசனாகிய நீதிபரர் தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார், அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்துகொள்வார்.**

இயேசுவின் பலி பரலோகத்திலும் , பூலோகத்திலும் இழந்த அனைத்தையும் தேவனிடத்தில் திரும்ப கொண்டு வரும் .

**எபேசியர்** 1 - 9

**காலங்கள் நிறைவேறும் போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்பட வேண்டுமென்று ..**

ஆகவே அப்பத்திலும் , பாத்திரத்திலும் பங்கெடுக்கும் நாம் இயேசுவின் மரணத்தை அவர் வருமளவுக்கு அறிவிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.